ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

# வருடாந்த அறிக்கை

# 2018

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை
வருடாந்த அறிக்கை 2018

@ ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

**CONCEPT, LAYOUT & DESIGN**

79, Wijerama Road, Udahamulla, Nugegoda.
+94 11 302 4950 | +94 71 224 11 00
kalawainfo@gmail.com

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

# வருடாந்த அறிக்கை 2018

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை
முதலாம் மாடி, தொழிற் செயலகம், கொழும்பு 05.
தொ.பேசி: 011 2581704 / தொ.நகல்: 011 2806832
மின்னஞ்சல்: finance@etfb.lk / இணையம்: www.etfb.lk



# உள்ளடக்கம்

## 01
### தாபனப் பகுப்பாய்வு


| | | |
|---|---|---|
| 1.1 | இந்த அறிக்கை குறித்து | 113 |
| 1.2 | நாங்கள் யாவர் | 114 |
| 1.3 | எமது பெறுமானங்கள் | 115 |
| 1.4 | நிறுவனஞ்சார் மீளாய்வு | 116 |
| 1.5 | செயலாற்றுகையின் முக்கிய பதிவுகள் | 119 |
| 1.6 | 2018 ஆம் ஆண்டு ஒரே பார்வையில் | 122 |
| 1.7 | மைல்கற்கள் | 124 |
| 1.8 | பின்னணிப் பகுப்பாய்வு | 126 |


## 02
### நிறுவன ரீதியான பொறுப்புடைமை


| | | |
|---|---|---|
| 2.1 | தவிசாளரின் மீளாய்வு | 132 |
| 2.2 | பணிப்பாளர் சபையின் மீளாய்வு | 134 |
| 2.3 | பணிப்பாளர் சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் | 138 |
| 2.4 | ஆளுகை அறிக்கை | 142 |
| 2.5 | இடர்நேர் முகாமைத்துவ அறிக்கை | 147 |


## 03
### நிதித் தகவல்கள்


| | | |
|---|---|---|
| 3.1 | விரிவான வருமானக் கூற்று | 153 |
| 3.2 | நிதி நிலமைக் கூற்று | 155 |
| 3.3 | உரிமைப்பங்கு மாற்றத்திற்கான கூற்று | 156 |
| 3.4 | காசுப் பாய்ச்சல் கூற்று | 158 |
| 3.5 | முதலீட்டுக் கூற்று | 159 |
| 3.6 | நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 161 |


## 04
### துணைநிலைத் தகவல்கள்


| | | |
|---|---|---|
| 4.1 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 196 |
| 4.2 | புள்ளிவிபரப் பின்னிணைப்பு | 310 |
| 4.3 | ஏனைய பின்னிணைப்பு | 314 |





# 01

# தாபனப் பகுப்பாய்வு



# இவ்வறிக்கையைப் பற்றி

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் சமர்ப்பிக்கப்படும் 38 ஆவது வருடாந்த அறிக்கை இதுவாகும். 2018 ஆம் ஆண்டில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நலன்பெறுநர்களுக்கும் ஏனைய பங்குதாரர்களுக்கும் முக்கியமான பெறுமானத்தைத் தாபனம் எவ்வாறு உருவாக்கியது என்பதற்கான விரிவான அறிக்கையொன்று இதன் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது. இவ்வறிக்கையானது தாபனத்தின் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால தனித்துவமிக்க பெறுமான உருவாக்கத்தினை தமது பிரபலமிக்க பங்குதாரர்களுடன் பகிர்ந்துகொள்வதனை நோக்காகக் கொண்டுள்ளது. அதன் மூலம் நிதியத்தின் தந்திரோபாயம், ஆளுகை மற்றும் நிதி முகாமைத்துவம் குறித்து சுருக்கமான தொடர்பாடலையும் இது வழங்குதுடன் அதன் நிதிசார் செயலாற்றுகை மற்றும் தாபனத்தினால் உருவாக்கப்பட்ட சமூகத்தடங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான உறவினையும் நிரூபணஞ் செய்கின்றது.

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆளுகை அறிக்கையானது பொது தொழில் முயற்சிகளுக்கான கூட்டுரு ஆளுகை மீதான சிறந்த நடைமுறைக்கான விதி மற்றும் 1980 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டம் என்பவற்றுடன் நிறுவனம் எவ்வாறு இணங்கி ஒழுகுகின்றது என்பது குறித்து கலந்துரையாடுகின்றது.

இவ்வறிக்கையானது அளவு மற்றும் தர ரீதியான தரவுகளைக் கொண்டுள்ளதுடன், ஒப்புநோக்கு மற்றும் மேலதிக பகுப்பாய்வினை எளிதாக்குவதற்கு முடியுமான அளவு ரீதியான தரவுகளை வழங்குவதே எமது நோக்காகும். நிதிக் கூற்றுக்களும் அதனுடன் தொடர்பான குறிப்புக்களும் அரசாங்க கணக்காய்வாளர் அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளதுடன் உத்தரவாத அறிக்கையும் இவ்வறிக்கையில் உள்ளது.

2018 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் காலப்பிரிவிற்கு நிதியத்தினது தலைமை அலுவலகத்தினால் மற்றும் கிளை வலையமைப்பினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் அண்மைய ஆண்டறிக்கையான 2017 டிசம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த காலப் பிரிவுக்கு ஏற்புடைய ஒப்புநோக்கப்பட்ட தரவுகள் 2018 ஆம் வருடத்திற்கான இந்த ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கையின் உள்ளடக்கங்கள் இந்நிறுவனத்திற்கும் அதன் முக்கிய பங்குதாரர்களுக்கும் பொருந்தக்கூடிய அம்சங்கள் மீது முக்கியத்துவமளிக்கப்பட்டு விருத்தி செய்யப்பட்டுள்ளன.

# நாம் யாவர்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டு 1981 ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் திகதி செயற்பாடுகளை ஆரம்பித்தது. இது தொழில் அமைச்சின் கீழ் நிறுவப்பட்டு, தற்போது தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளத்திற்கு உரித்தாகாத எல்லா அரச துறை ஊழியர்களும் மற்றும் தனியார் துறை ஊழியர்களும் இந்நிதியத்தில் அங்கத்தவர்களாவதுடன், அவர்களது தொழில்தருநர்கள் அவ்வூழியர்களின் மொத்த உழைப்பிலிருந்து 3% இனை நிதியத்திற்கு மாதாந்தம் அனுப்பவேண்டியுள்ளனர். எனவே ஊழியர் சேமலாப நிதியத்தைப்போலன்றி, தொழில்தருநர் மாத்திரமே ஊழியர்ஃஅங்கத்தவர் சார்பாகப் பங்களிப்பொன்றை மேற்கொள்வதுடன் அங்கத்தவர்கள் பங்களிப்புச் செய்யாத ஒரு நலனாகும். நாட்டின் பொருளாதாரத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்கும் சுயதொழில் முயற்சியாளர்களினதும் புலம்பெயர் தொழிலாளர்களினதும் தன்னார்வ அங்கத்துவத்தினை அதிகரிப்பதற்கு விசேட கவனஞ் செலுத்தப்படுகின்றது.

**சபையின் குறிக்கோள்கள்**

(அ) நிதியிடல் மற்றும் முதலீட்டில் பங்குபெறுவதன் ஊடாக ஊழியர் உடைமையாண்மை, ஊழியர் நலன்புரி, பொருளாதார சனநாயகம் ஆகியவற்றை ஊக்குவித்தல்

(ஆ) தொழில் முயற்சிகளில் உரிமை பங்கினைப் பெற்றுக் கொள்வதன் மூலம் முகாமைத்துவத்தில் ஊழியர் பங்களிப்பினை ஊக்குவித்தல்

(இ) ஊழியர்கள் ஓய்வு பெறும் போது தான் பங்களிப்புச் செய்யாத நலன்களை பெற்றுக்கொள்வதற்கு எற்பாடு செய்தல் மற்றும்

(ஈ) மேலே (அ), (ஆ) மற்றும் (இ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களிற்குத் தேவையான ஏனைய செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.





# எமது பொறுப்புக்கள்

## எமது **நோக்கு**

நிறுவன ரீதியான திறமையினூடாக அனைத்து பங்குதாரர்களுக்கும் செயலூக்கமிக்க மற்றும் சாத்தியமிக்க முதன்மையான நம்பிக்கைப் பொறுப்பாக விளங்குதல்.

## எமது **செயற்பணி**

நிதிசார் உறுப்பினர் நலன்கள் மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவைகளை பரந்த அளவில் வழங்குவதில் மிகவும் அக்கறையுள்ள மற்றும் விவேகமுள்ள நம்பிக்கைப் பொறுப்பாக விளங்குதல்.

## எமது **பெறுமானங்கள்**

- ஆக்கத்திறனமிக்க, புத்தாக்கமிக்க மற்றும் அர்ப்பணிப்புமிகு பணிக்குழாம்
- மக்கள் நேயமிகு வேலைச் சூழல்
- ஆதரவுமிக்க கொள்கைகள் மற்றும் செயன்முறைகள்
- சிறந்த அமைப்புக்கள் மற்றும் நடைமுறைகள்
- நிறைவான நிதி ஸ்தீரத்தன்மை மற்றும்
- மகிழ்ச்சிமிக்க வாடிக்கையாளர்கள்



# நிறுவனஞ்சார் மீளாய்வு

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையானது ஒரு நம்பிக்கையாளர் அல்லது பொறுப்பாளரின் வகிபங்கினைக் கொண்ட ஓர் ஒழுங்கான நிறுவனக் கட்டமைப்பைக் கொண்டுள்ளதுடன், எதிர்காலத்தில் ஒரு உன்னதமான நிதி நிறுவனமாகச் செயற்பட வைப்பதே முகாமைத்துவத்தின் நோக்கமாகும். நிறுவனக் கட்டமைப்பினைப் பற்றி சட்டவிதிகளில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. எவ்வாறாயினும் சட்டப் பிரிவு 5 இன் கீழ், சபையானது அதன் செயற்பாட்டு விதிமுறைகளை நெறிப்படுத்தலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதியச் செயற்பாட்டின் ஒட்டுமொத்த முகாமைத்துவப் பொறுப்புக்களும் அதன் பணிப்பாளர் சபையிலேயே தங்கியுள்ளது. பணிப்பாளர் சபையானது 9 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இவ் ஒன்பது உறுப்பினர்களில் 4 பேர் சம்பந்தப்பட்ட அமைச்சராலும் தலா ஒரு உறுப்பினர் வீதம் நிதி மற்றும் வணிக விடயங்களிற்கு பொறுப்பான அமைசர்களாலும் ஒரு உறுப்பினர் இலங்கைத் தொழிலாளர் சம்மேளனத்ததாலும் இரு உறுப்பினர்கள் 100,000 இற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்சங்கங்களாலும் நியமிக்கப்படுவார்கள்.

இச்சபைக்குப் பொறுப்பான அமைச்சரின் தீர்மானத்திற்கமைய சபைத் தலைவர் தெரிவு செய்யப்படுவதுடன் சட்டவிதியின் படி சபைத் தலைவரே சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் (CEO) ஆவார். மேல் மாகாணத்திலேயே பெரும்பாலான தொழில்தருநர்கள் உள்ளபடியால் ETFBஆரம்பத்திலே ஒரு மையப்படுத்தப்பட்ட அமைப்பாக மேல்மாகாணத்திலே உருவாக்கப்பட்டது. முக்கிய பிரதேசங்களான பிராந்திய மற்றும் மாவட்ட அலுவலகங்கள் திறக்கப்பட்டதும் பிராந்திய அலுவலக வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டம் மறுசீரமைப்பு பூர்த்தியானதன் பின்னர் அமுலாக்கம் மற்றும் சட்ட நடவடிக்கைகளில் துரித முன்னேற்றம் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து கோரல்களை ஏற்றல், கோரல் கொடுப்பனவுகள், உறுப்பினர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போன்ற பல உறுப்பினர் சேவைச் செயற்பாடுகள் பரவலாக்கப்பட்டன.

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளானது பரந்த அளவில் செயற்பாட்டுப் பிரிவு மற்றும் ஆதரவுச்சேவைப் பிரிவு என இரு வகைப்படுத்தப்படும். சேகரிப்பு மற்றும் தொழில்தருநர் தொடர்புகள், உறுப்பினர் சேவைகள் மற்றும் முதலீடுகள் என்பன செயற்பாட்டுப் பிரிவில் அடங்கும். நிர்வாகம் மற்றும் மனிதவளம், நிதி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் ஆதரவுச் சேவைகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தலைவர் அவர்கள் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகக் கடமைபுரிய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் (CEO) நேரடிக் கண்காணிப்பின் கீழ் பொதுமுகாமையாளர் மற்றும் மேலதிகப் பொதுமுகாமையாளர் ஆகியோர் செயற்படுவர். ஒவ்வொரு செயற்பாட்டுப் பிரிவும் ஒவ்வொரு பிரதிப் பொதுமுகாமையாளர் (DGM) தலைமையில் செயற்படும். செயற்பாட்டுப் பணிப்பாளர் பதவியானது தலைவருக்கு உதவிபுரிவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இதன்படி, நிறுவனம் சுமுகமாகச் செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்கு ஒரு முழுமையான நிறுவனக் கட்டமைப்பு விருத்தி செய்யப்பட்டுள்ளது.

# சபையின் திணைக்களங்கள்/ பிரிவுகள்/ அலகுகள் ஆகியவற்றின் தொழிற்பாடுகள்



### 1. சேகரிப்பு மற்றும் தொழில்தருநர் தொடர்புகள் பிரிவு

தனியார் நிறுவனங்களிலும் இளைப்பாற்றுச் சம்பளம் கிடைக்கப் பெறாத அரச நிறுவனங்களிலும் பணிபுரியும் ஊழியர்களின் மொத்த வருவாயில் 3% இனைப் பங்களிப்புச் செய்வது கட்டாயமாகும். தொழில்தருநர்களிடமிருந்து உரிய நேரத்தில் பங்களிப்புக்களைச் சேகரித்தல், மேலதிக கட்டண அறவீடுகளைச் சேகரித்தல், தவறுபவர்களை/ பங்களிக்காதோரை அடையாளங்காணுதல், தவறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் போன்றன பங்களிப்புச் சேகரித்தல் படிமுறையுடன் தொடர்புடைய முக்கியமான செயற்பாடுகளாகும். சபையின் சேகரிப்பு இலக்குகளை அடைவதே சேகரிப்பு மற்றும் தொழில்தருநர் தொடர்புப் பிரிவின் பொறுப்பு ஆகும்.

### 2. முதலீட்டுப் பிரிவு

சபையின் பல்வேறு முதலீட்டு நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள முதுலீட்டுப் பிரிவு நிறுவனத்தின் முக்கிய வர்த்தக அலகாகும். முதலீடுகள் மற்றும் திரவத்தன்மையின் பாதுகாப்பினைப் பேணும் அதே வேளையில் உச்ச வருவாயை ஈட்டுவதே இவ்வலகின் முக்கிய நோக்கமாகும். முதலீட்டுத் தீர்மானங்களுக்கான வழிகாட்டியாக விரிவான முதலீட்டுக் கொள்கை ஒன்று உள்ளது.





### 3. அங்கத்தவர் சேவைகள் பிரிவு

இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகளாவன, அங்கத்தவர் கணக்குகளை இற்றைப்படுத்தல் மற்றும் பேணுதல், அங்கத்தவர்களுக்கு வருடாந்த அங்கத்தவர் கூற்றுக்களை வெளியிடுதல் , பொது நலன்களின் (சாதாரண மற்றும் மரண நலன் கோரல்கள்) துரித செயலாக்கம் மற்றும் செயற்படு அங்கத்தவர்களுக்கான ஏனைய நலன்புரித் திட்டங்களைப் பேணுதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. இப்பிரிவின் செயற்பாடுகளை மேலும் வலுவூட்டுவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 4. நிதிப் பிரிவு

நிதிப் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளாவன, மாதாந்த மற்றும் வருடாந்த கணக்குகள், வருடாந்த வரவு செலவுதிட்டம் மற்றும் பணிக்குழாத்தினரதும் ஏனையவற்றினதும் கொடுப்பனவுகள் ஆகியவற்றை அரச வரிகளுக்கு உட்பட்டவாறு தயாரித்தல், அரச கணக்காய்வு விடயங்களை ஒருங்கிணைத்தல், கூட்டிணைந்த திட்டம் மற்றும் ஏனைய முகாமைத்துவ தகவல் அறிக்கைகள் ஆகியவற்றைத் தயாரித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.



### 5. நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவு



தற்போதைய போட்டிமிக்க வர்த்தகச் சூழலில் இன்றியமையாத நவீன மனித வள நுட்பங்கள் மற்றும் சிறந்த அலுவலக நடைமுறைகள் ஆகியவற்றை பின்பற்றுவதன் தேவை அறியப்பட்டுள்ளது. ஒரு சேவை நிறுவனமான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை மக்களுக்கு (ஊழியர்கள்) சிறந்த சேவையை வழங்க வேண்டியது முக்கியமானது. எனவே, நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை அபிவிருத்தி மற்றும் விருத்தி செய்வதற்கு உயர் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே நிர்வாகம் மற்றும் மனித வளப் பிரிவினால் பின்பற்றப்படும் வழிமுறைகள் மற்றும் காணப்படும் முறைமைகளை இற்றைப்படுவதற்கும் விருத்தி செய்வதற்கும் மற்றும் பணிக்குழாத்தினருக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 6. தகவல் தொழில்நுட்பப் பிரிவு

தகவல் தொழில்நுட்பப் பிரிவானது பிரதானமாக அங்கத்தவர் நிர்வாக மென்பொருள் முறைமையினை முகாமை செய்வதற்கும் பேணுவதற்கும் பொறுப்பாயுள்ளது. இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனத்துடன் இணைந்து தொழில்நுட்பப் பிரிவை மறுசீரமைப்பதற்கு தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 7. கணக்காய்வு மற்றும் உத்தரவாதப் பிரிவு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது போதிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் நிறுவப்பட்டுள்ளன எனவும் அவ்வாறான முறைமைகள் தொடர்ச்சியாகவும் பொருத்தமாகவும் பிரயோகிக்கப்படுகின்றன எனவும் உறுதிப்படுத்தவதற்கு பொறுப்பாயுள்ளது. பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு) நேரடியாகவே தலைவருக்கு அறிக்கையிடுவார். உள்ளகக் கணக்காய்வின் ஏற்கனவே உள்ள முறைமைகள் மற்றும் நடைமுறைகளின் நம்பகத்தன்மையை மீள்மதிப்பீடு செய்வதற்கு ஓர் ஆய்வினை மேற்கொள் வேண்டும் என்றும் நிறுவனத்தின் தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் பயனுறுதிமிக்க கருவியொன்றாக உள்ளகக் கணக்காய்வின் வகிபங்கினை வலுவூட்டுவதற்கும் முகாமைத்துவம் கருத்திற் கொண்டுள்ளது.

## 8. சட்டப் பிரிவு

சட்டப்பிரிவானது சபையின் அனைத்து சட்ட விவகாரங்களுக்கும் ஆலோசனை சேவை அலகொன்றாகச் செயற்படுகின்றது. பிராந்திய அலுவலக வலையமைப்பு விரிவாக்கத்துடன் பிராந்திய மட்டத்திற்கு சட்ட நடவடிக்கைகள் பரவலாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிராந்திய அலுவலகத்திலும் சட்ட விவகாரங்களில் ஈடுபடுவதற்கு தனி ஒரு சட்ட அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். சட்டப் பிரிவானது உதவிப் பொது முகாமையாளரின் (சட்டம்) கண்காணிப்பின் கீழ் இயங்குகின்றது. அவர் பிரதி பொது முகாமையாளருக்கு (சேகரிப்பு மற்றும் தொழில் தருநர் தொடர்புகள்) அறிக்கையிடுதல் வேண்டும்.

## 9. திட்டமிடல், ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவு

ஒவ்வொரு ஆண்டிலும் ஜனவரி 1ஆம் திகதியாகையில் கண்காணித்தல், இற்றைப்படுத்தல் மற்றும் வருடாந்த அடிப்படையில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான கூட்டிணைந்த திட்டத்தினை திருத்தியமைத்தல் மற்றும் புதிய திட்டம் என்பன அமுல்படுத்துவதற்காக கிடைக்கப் பெறும். இப்பிரிவின் பிரதான தொழிற்பாடுகளாவன மாதாந்த/காலாண்டு /வருடாந்த அடிப்படையில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முன்னேற்றத்தினை அறிக்கையிடல், உரிய நேரத்தில் அமைச்சிற்கு, பாராளுமன்றத்திற்கு மற்றும் ஏனைய நிறுவனங்களிற்கு சட்டரீதியான அறிக்கையிடல் மற்றும் தேவையான திருத்தங்களைச் செய்தல், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின முகாமைத்துவத்திற்குத் தேவையான பயனுறுதிமிக்க தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவசியமான பயனுறுதிமிக்க மற்றும் உரிய நேரத்தில் ஆய்வுளை நடாத்துதல் திட்டமிடல், ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவின் முக்கிய பணியாகும்.

## 10. புள்ளிவிபரப் பிரிவு

புள்ளிவிபரப் பிரிவின் பிரதான தொழிற்பாடுகளாவன பயனுறுதிமிக்க முகாமைத்துவ தீர்மானங்களை எடுத்தல், தேவையான தரவுகள் குறித்து போக்குப் பகுப்பாய்வினைத் தயாரித்தல் மற்றும் பகுப்பாய்தல் ஆகியவற்றிற்காக அனைவருக்கும் உரிய நேரத்தில் சரியான தரவுத்தளத்தினைக் கிடைக்கப் பெறச் செய்தல், நேர அடிப்படையில் எதிர்கால வருடங்களுக்கான எதிர்வுகூறல் மற்றும் திட்டமிடல், அவ்வப்போது முகாமைத்துவத் தீர்மானங்களை எடுப்பதற்கு தேவையான முக்கிய குறிப்புக்களை வழங்குதல், தேசிய திட்டமிடல் மற்றும் அமுலாக்கத்திற்கான வகைப்படுத்தப்பட்ட மற்றும் குறியிடப்பட்ட தகவல்களைத் தேவையான நிறுவனங்களுக்கு வழங்குதல் என்பனவாகும்

# செயலாற்றுகையின் முக்கிய பதிவுகள்




## அங்கத்தவர்களுக்கான பங்களிப்பு









# ஊழியர் படையினருக்கான பங்களிப்பு









# அரசாங்கத்திற்கான பங்களிப்பு

அரசுக்கு செலுத்தப்பட்ட வரி (ரூ.மில்)




அரசாங்க பிணையங்களில் மொத்த முதலீடு (ரூ.மில்)




# அங்கத்தவர்களுக்கான பங்களிப்பு

நலத்திட்டங்கள் (ரூ.மில்)



# 2018 ஆம் ஆண்டு
# ஒரே பார்வையில்



2018 ஆம் ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியளவில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ரூபா.பில். 306 மீதியைக் கொண்டிருந்தது.நிதியத்தின் மொத்த அங்கத்துவக் கணக்குகளின் எண்ணிக்கை 14.6 மில்லியனாகும். தற்போது நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்யும் செயலுக்கமுள்ள அங்கத்தவர்கள் 2.6 மில்லியனாக காணப்பட்டனர்.

2018 ஆம் ஆண்டுக்கான மொத்த பங்களிப்புத் தொகையின் அளவு ரூ.பில். 25.3 ஆகும். அக்காலப் பிரிவில் சபையினால் ரூ.பில். 18.2 தொகை அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

2018.12.31 ஆம் திகதி நிதியத்தின் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி ரூ.பில். 312 ஆக காணப்பட்டது. அக்காலப் பிரிவில் நிதியத்தின் மொத்த வருமானம் ரூ.பில். 29.1 ஆகும். அதற்கமைய நிகர இலாபம் ரூ.பில். 23.3 ஆக காணப்பட்டது.

2018 ஆம் ஆண்டுக்கான வட்டி மற்றும் பங்கிலாபமாக நிதியத்தின் அங்கத்தவர்களுக்கு 9% மொத்த வீதத்தை வெளியிடுவதற்கு சபையக்கு இயலுமாகியது. இது அரசாங்க வங்கிகள் மூலம் தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சேமிப்பு வீதங்களுடன் ஒப்பிடும் போது மனம் கவரக்கூடிய வீதமாக காணப்பட்டது.

**2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

- முதலீட்டுப் பிரிவின் மறுசீரமைப்பு மற்றும் கணினிமயப்படுத்தல்.
- தற்போதுள்ள கணினித் தொகுதியை விருத்தி செய்வதற்கு தேவையான வன்பொருட்களை கொள்வனவு செய்தல்.
- 2018 ஆம் ஆண்டு தேசிய உற்பத்தித்திறன் போட்டிக்கு 06 கிளை அலுவலகங்களை பங்கேற்கச் செய்தல்.
- சபையினால் சுவீகரிக்கப்பட்ட கம்பஹா அலுவலக வளாகத்தில் புதிய அலுவலகக் கட்டிடமொன்றை நிறுவுதல்.
- V 2025 என்டர்பிரைசஸ் ஸ்ரீ லங்கா கண்காட்சிக்கு இணைவாக 2018.04.04 மற்றும் 2018.08.31 ஆம் திகதிகளில் பதுளையில் 05 புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வுகளை நடாத்துதல்.
- கிழக்கு மாகாண தொழில் வழங்குநர்கள் மற்றும் சேவைப் பெறுநர்களின் நலன் கருதி ஒக்டோபர் மாதத்தில் வலய அலுவலகமொன்றை திறப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**2018 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்**

- பங்களிப்புத் தொகை சேகரிப்பு நடவடிக்கையை விருத்தி செய்வதற்காகவும் வெளிக்கள பரிசோதனை செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்காகவும் நிதி அமைச்சின் நிதியுதவி மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பரிசோதனைத் தொகுதிக்குரிய ஈசா (ETF Inspection System Application) மென்பொருளை அறிமுகம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- இணையத்தளத்தின் ஊடாக தொடரறா கொடுப்பனவு செலுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அறிக்கைகளை அனுப்புவதற்கும் தொழில் வழங்குநர்களுக்கு வசதியை ஏற்படுத்திக்கொடுத்தல்.
- மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றை அறிமுகம் செய்து நடைமுறைப்படுத்தல்.
- சகல தரப்பினருக்கும் சபையின் சேவைகளை விரிவாக்கம் செய்யும் நோக்கில் வலய அலுவலகங்களை நிறுவுவதற்காக கம்பஹா, வவுனியா மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளில் காணிகளை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- பொருத்தமான ஆளணியினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல், உள்ளக கணக்காய்வுப் பிரிவை மறுசீரமைத்தல் மற்றும் சபைக்கு ஆபத்து முகாமைத்துவ செயன்முறையொன்றை அறிமுகம் செய்தல்.
- ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் அங்கத்தவர்களுக்கு தேசிய ஆள் அடையாள அட்டையை அடிப்படையாகக் கொண்டு ஒன்றிணைந்த அங்கத்துவ இலக்கம் ஒன்றை அறிமுகம் செய்வதற்காக ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் மற்றும் தொழில் திணைக்களத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை கையொப்பமிடல்.
- தேசிய உற்பத்திறன் செயலகத்தின் ஒத்துழைப்புடன் உற்பத்தித்திறன், எண்ணக்கருக்கள் மற்றும் உற்பத்திறன் பற்றிய கையேடு ஒன்றை அறிமுகம் செய்தல்.

# மைல்கற்கள்

# 1986 முதல் 2018 வரை

**1986**

மரண நலத்திட்டம்:
ரூ.100,000/=

**1989**

மரண நலத்திட்டம்:
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம்:
ரூ. 200,000/=

**1991**

மரண நலத்திட்டம் :
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி :
ரூ. 300,000/=

**1992**

மரண நலத்திட்டம் :
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி
கண்பளிங்கு வில்லை செலவிற்கான மீளளித்தல்:
ரூ. 18,000/=

**1994**

மரண நலத்திட்டம் :
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
இதய சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி:
கண்பளிங்கு வில்லை செலவிற்கான மீளளித்தல்:
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்
ரூ. 15,000/= -
9,000 புலமைப்பரிசில்கள்

**1997**

மரண நலத்திட்டம் :
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
இதய சத்திரசிகிச்சைக்கான
நிதியுதவி :
கண்பளிங்கு வில்லை
செலவிற்கான மீளளித்தல்
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்
"சிரமசுவ ரெக்கவரண"
சிகிச்சையகத் திட்டம் முழு
சேவைக் காலத்தின் போதும்
வருடத்திற்கு ரூபா **25,000/=**
வீதம் கூடியபட்டசம் **50,000** வரை

**2002**

மரண நலத்திட்டம் :
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
இதய சத்திரசிகிச்சைக்கான
நிதியுதவி :
கண்பளிங்கு வில்லை
செலவிற்கான மீளளித்தல்:
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்:
"சிரமசுவ ரெக்கவரண"
சிகிச்சையகத் திட்டம்
"வியன" குறைந்த வட்டி வீட்டுக்
கடன் திட்டம்

**2006**

மரண நலத்திட்டம் :
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
இதய சத்திரசிகிச்சைக்கான
நிதியுதவி :
கண்பளிங்கு வில்லை
செலவிற்கான மீளளித்தல்:
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்:
"சிரமசுவ ரெக்கவரண"
சிகிச்சையகத் திட்டம்
"வியன" குறைந்த வட்டி வீட்டுக்
கடன் திட்டம்
சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு
நிதியுதவி ரூ. **300,000/=**

**2010**

மரண நலத்திட்டம் :
நிரந்தர ஊனமுற்றோர் திட்டம் :
இதய சத்திரசிகிச்சைக்கான
நிதியுதவி :
கண்பளிங்கு வில்லை
செலவிற்கான மீளளித்தல்:
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்:
"சிரமசுவ ரெக்கவரண"
சிகிச்சையகத் திட்டம்:
"வியன" வீட்டுக் கடன் திட்டம்:
சிறுநீரக மாற்றுச்
சிகிச்சைக்கு நிதியுதவி:
5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்
ரூ. **15,000/=**
(நிரந்தர ஊனமுற்றதன்
காரணமாக பணியிலிருந்து
நீங்கிய ETF அங்கத்தவர்கள்)
கபொத (உ/த)
மாணவர்களுக்கான
நிதியுதவி ரூ. **12,000/=**

**2016**

2010 ஆம் ஆண்டின்
சகல அடைவுகளும் மற்றும்
கண்பளிங்கு
வில்லை செலவிற்கான
மீளளித்தல்
ரூ. **30,000/=**

# பின்னணி பகுப்பாய்வு

இந்தப் பந்தியின் நோக்கமாக அமைவது யாதெனில், 2018 ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதார செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அதன் மூலம் ஏற்படக்கூடிய தாக்கத்தை மதிப்பீடு செய்வதுமாகும்.

**கொழும்பு பங்குப் பரிமாற்றம் – 2018 ஆம் ஆண்டின் குறிகாட்டிகளின் அசைவு**

கொ.ப.ப. – 2018 ஆம் ஆண்டின் குறிகாட்டிகளின் அசைவு




வருடம் பூராகவும் காணப்பட்ட கீழ் நோக்கிய போக்குகளுடன் அனைத்து பங்குகள் விலைச் சுட்டெண் மற்றும் ஸ்டேன்டர்ட் என்ட் புவர் எஸ்.எல். 20 எனும் இரு சுட்டிகள் மூலமும் குறைந்த விருத்தி சுட்டிக்காட்டப்பட்டது. முதலீட்டாளர்களின் நம்பிக்கை மற்றும் வெளிநாட்டு விற்பனை குறைவடைதல், ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதாரம் ஸ்தீரமடையும் சமிக்ஞைகள் தெண்பட்டமை, 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி நிகழ்ந்த அரசியல் நெருக்கடி காரணமாக அரசியல் ரீதியான ஸ்தீரமற்ற நிலமை தோன்றுதல் மற்றும் கொள்கை நிகழ்ச்சி நிரல்களுக்கு அடிக்கடி செய்யப்பட்ட மாற்றங்கள் மூலம் வெளிக்காட்டப்பட்ட நிலையற்ற அரச கொள்கைத் தீர்மானங்களுக்கு வருவதற்கு நேரிடுதல், போன்ற காரணங்கள் இந்த கீழ் நோக்கிய போக்கின் பெறுபேறாக தோன்றிய முக்கிய இயல்பாக காணப்பட்டது. தனியாள் பங்கு முதலீடுகளின் பெறுமதி குறைவடைந்த காரணத்தினால் பங்கு விலைகளின் வீழ்ச்சி முதலீட்டாளர்களுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

மேற்படி ஒப்பீட்டுக்கு அமைய தெற்காசிய வலயத்தில்

**மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி (வருடாந்தம் %)**

| நாடு | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018** |
|---|---|---|---|---|---|---|---|---|
| நேபாளம் | 3.42 | 4.78 | 4.13 | 5.99 | 3.32 | 0.59 | 7.91 | 5.90 |
| பங்களாதேஷ் | 6.46 | 6.52 | 6.01 | 6.06 | 6.55 | 7.11 | 7.28 | 7.90 |
| மாலைத்தீவு | 8.57 | 2.52 | 7.28 | 7.33 | 2.88 | 7.29 | 6.91 | 6.70 |
| இந்தியா | 6.64 | 5.46 | 6.39 | 7.41 | 8.15 | 7.11 | 6.68 | 7.30 |
| பாகிஸ்தான் | 2.75 | 3.51 | 4.40 | 4.67 | 4.73 | 5.53 | 5.70 | 5.80 |
| பூட்டான் | 7.89 | 5.07 | 2.14 | 5.75 | 6.64 | 8.02 | 4.63 | 6.70 |
| இலங்கை | 8.40 | 9.14 | 3.40 | 4.96 | 5.01 | 4.47 | 3.31 | 3.80 |
| ஆப்கானிஸ்தான் | 0.43 | 12.75 | 5.60 | 2.72 | 1.45 | 2.26 | 2.67 | 2.20 |

*மூலம்: data.worldbank.org, ** ஆ.அ.வ. எதிர்வுகூறல்*

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டு இலங்கை இரண்டாவது ஆகக் குறைந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வேகத்தைக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம். இலங்கை இரண்டாவது ஆகக் குறைந்த வளர்ச்சி வேகத்தைக் கொண்டிருந்த போதிலும், ஆளுக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் நோக்கும் போது அது இரண்டாவது கூடிய பெறுமானத்தைக் கொண்டுள்ளது. வெள்ளப் பெருக்கு மற்றும் வரட்சி காரணமாக விவசாய விளைச்சல் குறைவடைதல், நாணய மாற்று விகிதம் ஏற்ற இறக்கத்திற்கு உள்ளாதல், மொத்த தேசிய உள்நாட்டு உற்பத்தியை கணக்கிடும் போது நாட்டின் பொருளாதாரத்தின் ஏற்படும் முறையற்ற செயற்பாடுகளை நீக்குதல், இலங்கை குறைந்த வறுமை தலைப்பு எண்ணிக்கை வீதத்தை நெருங்கும் நிலையிலும் கூட குறைந்த வாழ்க்கைத் தரத்தை அடைந்திருத்தல் போன்ற விடயங்கள் மொத்த தேசிய உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதத்தினை நிர்ணயிக்கும் கருவிகளாக காணப்படுகின்றன. ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு 2018 ஆம் ஆண்டில் 3.8% மொத்த தேசிய உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வேகத்தை எதிர்பார்க்கின்றது. இலங்கைச் சூழலில் பொருளாதார கொடுக்கல் வாங்கல்களில் பெரும்பான்மையை கணக்கிட்டு விலை நிர்ணயிக்கப்படுவது ஏனைய வெளிநாட்டு நாணயங்களின் மூலம் செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்களுடன் ஒப்புநோக்கும் போது ஐக்கிய அமெரிக்க டொலரை அடிப்படையாகக் கொண்டாகும். பிரதானமாக ஐக்கிய அமெரிக்க டொலருடன் ஒப்பிடும் போது உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சி அடைந்து வந்துள்ளதை கடந்த வருடம் பூராகவும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

### ஆளுக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி (நடப்பு அ.டொ. அமைய)

| நாடு | 1960 | 1970 | 1980 | 1990 | 2000 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாலைத்தீவு | - | - | 268.10 | 963.60 | 2,226.72 | 9,821.69 | 10,319.10 | 11,151.07 |
| இலங்கை | 142.78 | 183.93 | 267.67 | 463.51 | 869.50 | 3,844.51 | 3,857.35 | 4,073.74 |
| பூட்டான் | - | - | 331.53 | 557.97 | 765.86 | 2,616.01 | 2,782.37 | 3,130.23 |
| இந்தியா | 81.28 | 111.26 | 263.84 | 363.96 | 438.86 | 1,606.04 | 1,717.47 | 1,942.10 |
| பாகிஸ்தான் | 82.55 | 172.61 | 303.45 | 371.57 | 533.86 | 1,428.64 | 1,442.29 | 1,547.85 |
| பங்களாதேஷ் | 88.69 | 138.25 | 222.63 | 297.57 | 405.60 | 1,210.16 | 1,358.78 | 1,516.51 |
| நேபாளம் | 50.52 | 72.18 | 130.58 | 193.48 | 231.43 | 747.16 | 730.98 | 849.01 |
| ஆப்கானிஸ்தான் | 59.78 | 157.19 | 274.88 | - | - | 590.08 | 549.58 | 550.07 |

*மூலம்: data.worldbank.org*







இலங்கை இறக்குமதியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தைக் கொண்டிருப்பதனால் இதன் மூலம் இறுதியில் வர்த்தக மீதியில் எதிர்மறையான பெறுமானங்கள் அறிக்கையிடப்படுவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. பாரிய முதலீகள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு அனுசரணைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வெளிநாட்டு நிதியுதவிகளுக்கான கேள்வி மற்றும் அரச வருமானம் மற்றும் செலவினம் என்பவற்றுக்கு இடையிலுள்ள இடைவெளி நாட்டின் வெளிநாட்டு கடன் சுமை வருந்தோறும் அதிகரிப்பதற்கு காரணமாக உள்ளது. ஆயினும், ஒதுக்குகளில் குறிப்பிடத்தக்க அளவு வலுவான தன்மையை அவதானிக்க முடிந்துள்ளது. பொருளாதார வளர்ச்சி நிகழ்ச்சி நிரலை இரண்டாம் நிலை முன்னுரிமைப்படுத்தலுக்கு இட்டுச் செல்லும் விஸ்தீரண நலன்புரி நடவடிக்கைகள், நட்டத்தில் இயங்கும் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள், குறைந்த உற்பத்தித்திறனைக் கொண்ட அரசாங்கத்துறை சேவைகளின் ஊழியர் படையின் தொடர்ச்சியான விரிவாக்கம், மத்தியதர வருமானப் பொறி மற்றும் பொருளாதார வளர்ச்சி வேகம் அசைவின்றி காணப்படுகின்றமை ஆகிய விடயங்கள் தற்போதுள்ள பாதீட்டு இடைவெளியின் பிரதான எதிர் விளைவுகளாகும்.




### மத்திய அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடன்

| உரிமையாண்மை மூலம் | 2008 | 2010 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| வணிக வங்கிகள் | 418,177 | 613,340 | 1,667,986 | 1,699,951 | 2,119,133 |
| சேமலாப நிதி மற்றும் ஓய்வூதிய நிதியம் | 698,192 | 884,279 | 1,655,336 | 1,826,633 | 1,942,739 |
| தனியார் வியாபரம் மற்றும் தனியாள் வியாபாரம் | 443,084 | 495,261 | 647,807 | 643,628 | 513,894 |
| சேமிப்பு நிறுவனங்கள் | 204,067 | 286,514 | 428,236 | 426,771 | 447,792 |
| உத்தியோகபூர்வ நிதியங்கள் | 107,234 | 167,374 | 252,615 | 271,630 | 289,154 |
| மத்திய வங்கி | 239,248 | 78,376 | 256,050 | 414,950 | 209,412 |
| காப்புறுதி நிதியங்கள் | 25,976 | 32,839 | 50,597 | 57,944 | 72,305 |

உரிமையாண்மைக்கு அமைய, மத்திய அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடன் தொடர்பில் வணிக வங்கிகள், சேமலாப நிதி மற்றும் ஓய்வூதிய நிதி என்பன உயர் பங்களிப்பை வழங்கின. மத்திய அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடன் தொடர்பில் குறிப்பிடத்தக்க அளவு திறைசேரி பிணைமுறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் விநியோகத்தின் மூலம் திரட்சியடைந்துள்ளன.




2017 ஆம் ஆண்டு இலங்கைக்கு வழங்கப்பட்ட நாணய நிலை மதிப்பீடுகளை ஒப்பு நோக்கும் போது 2018 ஆம் ஆண்டில் அந்த நாணய நிலை மதிப்பீடுகளின் சிறு வீழ்ச்சியை அவதானிக்க முடியும். 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை தொடர்பில் உயர் ஊகவணிக மற்றும் முதலீடுகள் அல்லாத தரங்களில் ஊகவணிக நாணய நிலை மதிப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு நாட்டின் கடன் பெறும் ஆற்றல், முதலீட்டு மற்றும் கடன் புறக்கணிப்பு ஆபத்து அந்த நாட்டின் கடன் நாணய நிலை மதிப்பீட்டுகளில் பிரதிபளிக்கின்றது. ஏதேனுமொரு நாட்டுக்கு வழங்கப்படும் கடன் தொகைக்கு அறவிட வேண்டிய வட்டியின் அளவும் அதனூடாக நிர்ணயிக்கப்படும்.

**இலங்கையின் கடன் நாணய நிலை மதிப்பீடு**

| முகவர் நிறுவனம் | 2010 | 2011 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| ஸ்டேன்டர்ட் என்ட் புவர் | பீ + நிலையான | பீ + நேர் | பீ + மறை | பீ + நிலையான | பீ நிலையான |
| பிச் | பீ + நேர் | பீ பீ - நிலையான | பீ + மறை | பீ + நிலையான | பீ நிலையான |
| மூட்ஸ் | பீ 1 நிலையான | பீ 1 நேர் | பீ 1 மறை | - | பீ 2 நிலையான |

*மூலம் : tradingeconomics.com*





# 02

# தாபன நிர்வாகம்

# பணிப்பாளர் சபை 2018

**திரு. மஹிந்த மடிஹஹேவா**
தவிசாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி
தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள்
அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

**திரு.பீ.பி. மெதகெதர**
செயற்பாட்டுப் பணிப்பாளர்
தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள்
அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

---

**திரு. கே.எஸ். குருகுலசிங்க**
பணிப்பாளர்
தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள்
அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

**திரு. டப்ளியூ.எம்.கே.எல். வீரசிங்க**
பணிப்பாளர்
இலங்கை தொழில் வழங்குநர்
பேரவையின் பிரதிநிதி

---

**திரு. எம்.ஏ. தாஜூதீன்**
பணிப்பாளர்
கௌரவ கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய
அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

**திரு. எல்.எஸ். தேவேந்திர**
பணிப்பாளர்
தொழிற்சங்கப் பிரதிநிதி

---

**திரு. பீ. ரணவக்கஆரச்சி**
பணிப்பாளர்
தொழிற்சங்கப் பிரதிநிதி

**திரு. பி.பீ.எஸ்.சீ.நோனிஸ்**
பணிப்பாளர்
நிதி அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

---

**திரு. ஜூட் டினால் பீரிஸ்**
பணிப்பாளர்
தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள்
அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

**திரு. எச்.எம்.ஏ.ஜே. குமார**
சபைச் செயலாளர்

## சிரேஷ்ட முகாமைத்துவம்

**தவிசாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி**
திரு. மஹிந்த மடிஹஹேவா

**செயற்பாட்டுப் பணிப்பாளர்**
திரு.பீ.பி. மெதகெதர

**மேலதிகப் பொது முகாமையாளர்**
திருமதி. ஆர்.என். ஞாணசேகர

## பிரதிப் பொது முகாமையாளர்கள்

| | |
|---|---|
| திரு. டப்ளியூ.எஸ். திசாநாயக்க | அங்கத்தவர் சேவைகள் |
| திரு. எல்.எச். நிஹால் | நிர்வாகம் மற்றும் மனித வளம் |
| திரு. கே.எஸ். வெலிவிட்ட | உள்ளகக் கணக்காய்வு |
| திரு. என்.டப்ளியூ. விமலவீர | நிதி |
| திரு. ஏ.ஜே.எம்.எஸ். ஜயசுந்தர | சேகரிப்பு மற்றும் தொழில்வழங்குநர் தொடர்புகள் |
| திரு. உதய விக்கிரமநாயக்க | முதலீடுகள் |

## உதவிப் பொது முகாமையாளர்கள்

| | |
|---|---|
| திரு. சீ. மல்லிகாரச்சி | அங்கத்தவர் சேவைகள் |
| திரு. எச். எம். செனெவிரத்ன | அங்கத்தவர் கணக்குகள் |
| திரு. எம்.ஏ.கே. அளுத்கமகே | (நிதி) |
| திரு. டப்ளியூ.எஸ். தர்மசிறி | (தகவல் தொழில்நுட்பம்) |
| திரு. ஜே.கே.பீ. ரஞ்சித் | (செயற்படுத்தல் - வலயம் I) |
| திரு. பி.ஆர். ஆரியவன்ச | (செயற்படுத்தல் - வலயம் II) |
| திரு. டபிள்யு. ஜினதாஸ (இருநிலை) | புள்ளிவிபரவியலாளர் |
| திரு. டபிள்யு. ஆர்.டி.சில்வா (ப.க) | பெறுகை |
| திருமதி. எஸ். ராஜபதிரண (ப.க.) | சட்டம் |
| திருமதி. வீ.என். ஜயரத்ன (ப.க) | பங்களிப்புத் தொகை சேகரித்தல் |

# தவிசாளரின் மீளாய்வு

> மீளாய்வுக்குரி வருடத்தில் நிதியத்தின் அங்கத்துவம் 14.6 மில்லியன் என அறிக்கையிடப்பட்டுள்ளது. அதில் 2.6 மில்லியன் அளவு தற்போது செயலூக்க நிலையில் காணப்படுகின்றது.

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் நாட்டின் இரண்டாவது பாரிய சமூகப் பாதுகாப்பு நிதியமாகக் காணப்படுகின்றது. ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை முன்வைப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். தனியார் துறை அதே போன்று அரச சார்பு துறையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சமூகப் பாதுகாப்பை வழங்குவது மற்றும் ஏனைய விடயங்களை நோக்காகக் கொண்டு 1980 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதயச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை தனது செயற்பாடுகளை 1981 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01 ஆம் திகதி ஆரம்பித்தது. அதன் பின்னர் சுயதொழிலாளர்கள் மற்றும் இடம்பெயர்ந்து தொழில்புரிபவர்கள் நிதியத்திற்குள் உள்வாங்கப்பட்டு நிதியத்தின் பரப்பு மேலும் விரிவுபடுத்தப்பட்டது. நிதியத்தின் அங்கத்தவர்கள் தமது அங்கத்துவ கணக்கில் காணப்படும் மீதியின் அடிப்படையில் வருடாந்த வட்டி மற்றும் பங்கிலாபத்தைப் பெற்றுக்கொள்வதோடு, அதற்கு மேலதிகமாக, கல்வி சுகாதாரம் மற்றும் வீடமைப்பு துறைகளை உள்ளடக்கிய பத்து விதமான நலன்கள் இந்த நிதியத்தின் மூலம் வழங்கப்படுகின்றது.

2018 வருடத்தினுள் நாட்டின் பொருளாதாரம் முகம்கொடுக்க நேரிட்ட பேரின பொருளாதார சவால்கள் பலவற்றுக்கு மத்தியிலும் நிதியம் சிறந்த செயலாற்றுகையை பேணி வந்துள்ளது. ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை தனது நிறுவனத் திட்டத்தில் மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ளவாறு வருடத்தினுள் பல்வேறுபட்ட மூலோபாய திட்டங்களுக்கு காலடி எடுத்து வைத்து தனது செயலாற்றுகையை உரிய முறையில் அளவிடுவதற்கும் தனது தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் எல்லைகளை பரீட்சிக்கும் பொருட்டும் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

மீளாய்வுக்குரிய வருடத்தில் நிதியத்திற்குரிய தேறிய சொத்துக்களின் பெறுமதி 308 பில்லியன் ரூபாவை நெருங்கியுள்ளதோடு மொத்த சொத்துக்களின் அளவு 29 பில்லியன் ரூபா என அறிக்கையிடப்பட்டுள்ளது. பொருளாதார சவால்களுக்கு மத்தியில் நிலவிய மந்தமான பங்குச் சந்தையின் கீழும் இவ்வாறான செயலாற்றுகையைப் பெற்றுக்கொள்ள முடிந்ததையிட்டு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் வலுவான நிதிய முகாமைத்துவம் மற்றும் முதலீட்டுப் பரீட்சியத்தை எடுத்துக்காட்டுகின்றது. ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் தனது மேலதிக நிதியங்களை ஆரம்பமாக அரசாங்க பிணையப் பத்திரங்களில் முதலீடு செய்வதோடு பங்குச் சந்தை பங்குகளிலும் முதலீடு செய்கின்றது. அத்தோடு, நிறுவனத்தின் கடன் செயலாற்றுகை பத்திரங்களில் முதலீடு செய்வதோடு பல்வேறுபட்ட தொடர்ச்சியான தொழிற்பாட்டு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. நாட்டின் பிரதான ஓய்வூதியப் பணிக்கொடை நிதியங்களில் ஒன்றாக அடிக்கடி நிதிச் சந்தையில் காணப்படும் தளம்பல்களுக்கு மத்தியிலும் தனது அங்கத்தவர்களுக்கு வருடாந்தம் நிலையான வட்டி வீதத்தை செலுத்துவதற்கு சபைக்கு இயலுமாகியுள்ளது.

மீளாய்வுக்குரிய வருடத்தில் நிதியத்தின் அங்கத்துவம் 14.6 மில்லியன் என அறிக்கையிடப்பட்டுள்ளது. அதில் 2.6 மில்லியன் அளவு தற்போது செயலூக்க நிலையில் காணப்படுகின்றது. ஏற்புடைய காலப்பகுதியல் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சமூகத்தின் அளவு 81515 ஆக அறிக்கையிடப்பட்டுள்ளது. நிதியத்திற்கு அனுப்பப்படும் மொத்த பணங்களின் அளவு 22.7 பில்லியன் ஆகும். அது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது நூற்றுக்கு 11 வீத விருத்தியாகும். அங்கத்துவ கணக்குகள் செயலூக்கமுள்ளதாக காணப்படுகின்றனவா அல்லது செயலூக்கமற்று காணப்படுகின்றனவா என்பதை கருத்திற்

கொள்ளாது முழுமொத்த அங்கத்துவ நிதியத்தின் மீது நூற்றுக்கு 09% உழைப்பு வீதத்தை வெளியிடுவதற்கு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபைக்கு முடியுமாகியுள்ளது. நாட்டின் நிதி மற்றும் மூலதனச் சந்தையில் காணப்பட்ட அசாதாரண நிலமையிலும் இவ்வாறான உழைப்பு வீதத்தை வழங்க முடியுமாகியது திருப்திகரமான நிலையை எடுத்துக்காட்டுகின்றது.

விசேடமாக கவனம் செருத்தப்பட வேண்டிய வியாபார உபாய முறைகளாக சுயதொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் குடிபெயர்ந்து தொழிற்படக்கூடிய அங்கத்தவர்களின் பங்களிப்பை மேலும் வரிவுபடுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் தற்போதுள்ள போக்குகள் மற்றும் அதன் பெறுபேறுகள் அடிப்படையில் அங்கத்துவ நிதி மீள் அளிப்புக்களின் அதிகரிப்பினையும் கருத்திற்கொண்டு நிதியத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை தனது நிதிய முகாமைத்துவ மூலோபாய வழிமுறைகளில் பொறுத்தமான மாற்றங்களையும் செய்துள்ளது.

மேற்படி நோக்கத்தை அடைந்துகொள்ளும் பொருட்டு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தொழில்நுட்ப உதவியுடன் மற்றும் நிதி அமைச்சின் நிதியுதவியுடன் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பரீட்சிப்பு செயன்முறையின் வினைத்திறனை விருத்திசெய்தவதற்காகவும் தொழில் வழங்குனர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகிய இரு தரப்பினர்களையும் உள்ளடக்கிய வகையில் விரிவாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் பரீட்சிப்பு கட்டமைப்பு உள்ளீடு (EISA) என புதியதொரு கருத் திட்டத்தை ஆரம்பித்தள்ளது. தற்போது புதிய தொழில்நுட்ப உபாய முறை குறித்து ஊழியர்களின் ஈடுபாடு பெருமளவு அதிகரித்துள்ளது.

திருகோணமலை நகரத்தில் புதிதாக கிளை அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டு சபையின் கிளை அலுவலக வலையமைப்பு மேலும் வரிவுபடுத்தப்பட்டது. எதிர்கால வியாபார தேவைப்பாடுகளை கருத்திற்கொண்டு இடவசதியுள்ள அங்கசம்பூரணமான கிளை அலுவலகங்களை அமைக்கும் நோக்கில் கம்பஹா, ஹம்பாந்தோட்டை மற்றும் வவுனியா ஆகிய நகரங்களில் காணி சுவீகரிப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆறு வங்கிகளின் ஊடாக பணம் அனுப்புவதற்கும் தனது அறிக்கைகளை சபைக்கு இணையத்தளத்தின் ஊடாக தொடரறா முறையில் அனுப்புவதற்கும் தொழில் வழங்குனர்களுக்கு வசதியளிக்கப்பட்டது. இந்த செயற்பாட்டின் மூலம் தற்போது அங்கத்தவர் பங்களிப்புத் தொகை சேகரிப்பு 50% க்கு மேலாகவும் அங்கத்தவர்கள் ஒரு மில்லியன் பேரின் நடவடிக்கைகளை நிர்வகிக்கவும் இயலுமாகியுள்ளது.

மேலும் தற்போது காணப்படும் தொழில்வழங்குனர் மையப்படுத்திய முறையை அங்கத்தவர் (தொழிலாளர்) மையப்படுத்திய முறையாக மாற்றுவதற்கும் பொது சமூக பாதுகாப்பு திட்டமுறையில் உள்ளடங்கும் சகல அங்கத்தவர்களுக்கும் ஒப்பற்ற முறையொன்றை பரீட்சித்துக் கொள்வதற்காக தேசிய அடையாள அட்டை இலக்கத்தை பொதுவாக செல்லுபடியாக்குவதனை நோக்காகக் கொண்டு ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம் மற்றும் தொழில் திணைக்களத்துடன் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. இதன் பொருட்டு நிறுவனத்தில் தற்போது நிறைவுபெற்றுவரும் கணினி கட்டமைப்பின் மீளாக்க நடவடிக்கைகள் (Re-engineering) முடிவடைந்த உடன் இந்த செயன்முறையை வெற்றிகரமான செயற்படுத்த முடியும் என்பது எமது நம்பிக்கையாகும்.

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் புதிதாக ஏற்படுத்திய மாற்றங்களில் நிருவாக மற்றும் நிதிய முகாமைத்துவ கட்டமைப்பிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட மற்றும் தனது சேவையை மிகவும் வினைத்திறனுடன் மற்றும் விளைபயனுடன் வழங்குவதற்காக தமது செயற்பாட்டு நடவடிக்கைகள் அனைத்தையும் தகவல் தொழில்நுட்பத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தும் பூரணமுறையொன்றை நோக்கி கொண்டு செல்வதற்கு நடவடிக்கையெடுத்தள்ளது. 2018 ஆம் ஆண்டில் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை (ICTA) நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் சபையின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு மறுசீரமைப்பு நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. எதிர்வரும் வருடத்தில் இந்த கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்படவுள்ளன.

மனிதவள அபிவிருத்தியை எடுத்து நோக்குமிடத்து அது நிறுவனத்தின் முன்னேற்றத்தில் முக்கிய அங்கம் என அடையாளம் காணப்பட்டுள்ளது. அதற்கமைய அண்மைய காலத்தில் மொத்த நிருவாக கட்டமைப்பிலும் ஏனைய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதோடு, ஆளணியினரிடமுள்ள திறமைகளை விருத்தி செய்துகொள்வதற்காக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் தனது கவனத்தை செலுத்தியுள்ளது. இந்த விடயத்தை பொறுத்த வரையில் வெளிநாட்டு வளத் திணைக்களம் மற்றும் வேறு உதவி வழங்கும் முகவராண்மை நிதியங்களின் உதவியையும் பெற்றுக்கொண்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தேவையான அறிவு ரீதியான மற்றும் பயிற்சிகளை வழங்குவதற்கும் வசதியளிக்கப்பட்டுள்ளது.

சபையின் அனைத்து பிரிவுகளிலும் மற்றும் கிளை அலுவலகங்களிலும் வினைத்திறனை அதிகரித்து எமது அங்கத்தவர்களுக்கும் தொழில் வழங்குநர்களுக்கும் மற்றும் ஏனைய தரப்பினர்களுக்கும் உயர் தரத்திலான

சேவையை வழங்கும் பொருட்டு அறிமுகம் செய்யபட்ட உற்பத்தித்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பெறுபேறாக 2018 ஆம் ஆண்டு நடைப்பெற்ற உற்பத்திறன் சேவை வழங்கல் பிரிவில் சிறிய வகையின் கீழான போட்டியில் வவுனியா கிளை அலுவலகம் மூன்றாம் இடத்தையும், அனுராதபுர கிளை அலுவலகத்திற்கு விசேட திறன் சான்றிதழும் யாழ்ப்பாணம் மற்றும் மாத்தறை பிராந்திய அலுவகங்களுக்கு திறமைச் சான்றிதழும் கிடைத்துள்ளது.

மொத்தமாக நோக்குகின்ற போது 2018 ஆம் ஆண்டு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் அடைந்து கொண்ட சகல வெற்றிகளுக்கும் எமது பெறுமதிமிக்க தொழில் வழங்குநர்களினால் உரிய முறையில் பங்களிப்புத் தொகைகளை செலுத்தியதன் மூலம் வழங்கிய ஒத்துழைப்பும் பணிப்பாளர் சபை மற்றும் நிதியத்தின் ஊழியர்களது சேவைக்கான அர்ப்பணிப்பு மற்றும் சேவை மீதுள்ள பற்று என்பன முக்கிய இடத்தை வகிக்கின்றது. இங்கு அவர்களது ஒப்பற்ற பங்களிப்பு தொடர்பில் மிகவும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன். ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தை நாட்டின் முக்கிய சமூக பாதுகாப்பு நிறுவனமாக பரிணமிப்பதற்கு அவர்களது செயலூக்கமுள்ள பங்களிப்பை எதிர்காலத்திலும் நான் எதிர்பார்கின்றேன்.

இறுதியாக எங்களுடைய சகல செயற்பாடுகளிலும் எங்களுக்கு தலைமைத்துவத்தையும் வழிகாட்டலையும் வழங்கிய தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களுக்கும் எமக்கு பின்னணியாக நின்று ஒத்துழைப்பு வழங்கிய அமைச்சின் செயலாளர் அவர்களுக்கும் அவர்களது ஆளணியினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.



**மஹிந்த மடிஹஹேவா**
தவிசாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை.

# பணிப்பாளர்
# சபையின் மீளாய்வு

2018 டிசம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் மற்றும் அந்நிதிசார் கூற்றுக்களுக்கான கணக்காய்வாளர்களின் அறிக்கை ஆகியவற்றுடனான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் 38 ஆவது வருடாந்த அறிக்கையை முன்வைப்பதில் பணிப்பாளர் சபை மகிழ்ச்சியடைகின்றது. இது அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள நல்லாட்சிக்கான வழிகாட்டல் கோவைக்கு அமைய அறிக்கையிடல் தேவைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்குவதாக உள்ளது.

### நிதி அறிக்கையிடல் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்புடமை

நிறுவனத்தின் நிதிசார் நிலைமை மற்றும் செயலாற்றுகையின் உண்மைத்தன்மை மற்றும் நியாயமான நோக்கினைப் பிரதிபலிக்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பணிப்பாளர்கள் பொறுப்புடையவர்களாவர். 161 முதல் 193 வரையிலான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ள வருமானக் கூற்று, விபரமான வருமானக் கூற்று, நிதி நிலைமைக் கூற்று, உரிமையாண்மையில் மாற்றங்கள் கூற்று, பணப்பாயச்சல்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் என்பன 1995 இன் 16 ஆவது இலக்க இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு நியதிகள் சட்டத்தினால் கட்டளையிடப்பட்டுள்ளவாறு இலங்கை கணக்கீட்டு நியதிகள் மற்றும் தேவைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

மேலுள்ளவற்றின் அடிப்படையில் பணிப்பாளர் சபையானது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி அறிக்கையிடல் முறைமை நம்பகத்தன்மை மற்றும் வெளிவாரி நோக்கங்களுக்கான நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு செய்யப்பட்டுள்ளன என்பது தொடர்பில் நியாயமான உத்தரவாதத்தினை வழங்குவதை உறுதிப்படுத்துகின்றது.

### பிரதான செயற்பாடுகளின் மீளாய்வு

2018 ஆம் ஆண்டில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை தனது செயற்பாட்டு மற்றும் சேவை நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போது அதன் பிரதான செயற்பாடுகள் பற்றிய மீளாய்வு பின்வருமாறு.

### பங்களிப்புத் தொகை சேகரிப்பு மற்றும் தொழில் வழங்குநர் உறவுகள்

2018 ஆம் ஆண்டில் தொழில் வழங்குநர்களிடமிருந்து அவர்களது ஊழியர்களின் சார்பாக பெறப்பட்ட மொத்த பங்களிப்புக்கள் ரூ.பில். 25.3 ஆகும். அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூ.பில். 2.5 அதிகரிப்பாகும். கடந்த ஆண்டின் இறுதியின் போது அங்கத்தவர் நிதியத்தின் பெறுமதி ரூ.பில். 274 ஆக இருந்தது. அது மீளாய்வுக்குரிய ஆண்டில் 306 பில்லியன் ரூபா வரை அதிகரித்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பிராந்திய அலுவலகங்கள் 19 ஊடாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பெறுபேறுகளின் பிரகாரம் தொழில் வழங்குநர்களின்

> 2018 ஆம் ஆண்டில் தொழில் வழங்குநர்களிடமிருந்து அவர்களது ஊழியர்களின் சார்பாக பெறப்பட்ட மொத்த பங்களிப்புக்கள் ரூ.பில். 25.3 ஆகும். அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூ.பில். 2.5 அதிகரிப்பாகும். கடந்த ஆண்டின் இறுதியின் போது அங்கத்தவர் நிதியத்தின் பெறுமதி ரூ.பில். 274 ஆக இருந்தது. அது மீளாய்வுக்குரிய ஆண்டில் 306 பில்லியன் ரூபா வரை அதிகரித்தது.

எண்ணிக்கை 82,416 வரை அதிகரித்திருந்தது. அதற்கு ஏற்புடைய தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் சபையின் தகவல் தொழில்நுட்ப வலையமைப்பின் ஊடாக வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

இணையத்தளத்தினூடாக தொடரறா முறையிலான வங்கிச் சேவைகள் ஊடாக பணம் செலுத்துதல் மற்றும் அங்கத்தவர் தகவல்களை அனுப்பும் நடவடிக்கைகள் வர்த்தக வங்கிகள், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, சம்பத் வங்கி, ஹற்றன் நெசனல் வங்கி மற்றும் தேசிய அபிவிருத்தி வங்கி ஆகிய வங்கிகள் ஊடாக வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டது. அதன் மூலம் சேகரிக்கப்பட்ட பங்களிப்புத் தொகைகள் மொத்த பங்களிப்புத் தோகை சேகரிப்பில் 50% ஐ நெருங்கியது. அத்தோடு இணக்கப்பாட்டை தெரிவிக்கும் வீதம் 2018 ஆம் ஆண்டில் 74% வரை கொண்டு செல்வதற்கு நிறுவனத்திற்கு இயலுமாகியது. பிராந்திய அலுவலகங்கள் ஊடாக தொடர்ச்சியான அடிப்படையில் செயற்படுத்தப்பட்ட அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த சாதகமான நிலையைப் பேணுவதற்கு பாரிய ஒத்துழைப்பு வழங்கின. பங்களிப்புத் தொகை சேகரிப்பு எல்லையை விரிவுபடுத்துவதற்கு தேவையான களப் பரிசோதனைகளை துரிதப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் பற்றி குறிப்பிடும் போது மீளாய்வுக்குரிய வருடத்தில் ஈசா EISA' (ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பரிசோதனை கட்டமைப்புக் கட்டுப்பாடு) கருத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டது.

சபையின் கிளை வலையமைப்பை விரிவுபடுத்தும் நோக்கில் 2018 ஆம் ஆண்டு திருகோணமலை நகரில் புதிய கிளை அலுவலகம் ஒன்று திறந்துவைக்கப்பட்டது. எமது தொழில் வழங்குநர்களுக்கு மற்றும் அங்கத்தவர்களுக்கு பரந்த சேவையை வழங்கும் நோக்கில் அங்க சம்பூர்ணமான கிளை அலுவலகங்களை நிர்மாணிப்பதற்காக கம்பஹா, ஹம்பாந்தோட்டை மற்றும் வவுனியா ஆகிய நகரங்களில் காணி கையகப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

### அங்கத்துவ சேவைகள்
### அங்கத்தவர் நலன்கள் மற்றும் நலன்புரி நலன்கள்

ஆண்டின் போது, 183,688 மீளளிப்புக் கோரல்கள் முறைவழியாக்கப்பட்டதுடன் செலுத்தப்பட்ட மொத்தத் தொகையானது 18.3 பில்லியன் ரூபாவாக இருந்தது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 179,176 கோரல்கள் முறைவழிாக்கப்பட்டு 16.8 பில்லியன் ரூபா செலுத்தப்பட்டிருந்தது. இவ்வருடத்தில் கோரல் ஒன்றிற்கான சராசரி கொடுப்பனவுத் தொகை கடந்த வருடத்தின் 93,983 ரூபாவிலிருந்து 99,581 ரூபா வரை அதிகரித்தது. 2018 ஆம் ஆண்டின் போது, 3194 நலன் கோரல்கள் முறைவழியாக்கப்பட்டு 281 மில்லியன் ரூபா செலுத்தபட்டு இருந்தது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 3302 கோரல்கள் முறைவழியாக்கப்பட்டு 280 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டு இருந்தது. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு 2018 ஆம் ஆண்டில் 90 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டதுடன், க.பொ.த. (உ/த)

பரீட்சையில் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு அவர்களது உயர் கல்விக்கு உதவும் வழியாக 55 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டது. அந்த வருடத்தில் மரண நலக் கொடுப்பனவாக ரூ.மில். 97 உம் இருதய சிகிச்சைகளுக்காக ரூ.மில். 161 உம் செலுத்த முடிந்தது.

### அங்கத்தவர் கணக்குகளைப் பேணுதல்

வருட இறுதியில், நிதியத்துக்கு பங்களிப்புச் செய்யும் செயற்படு மற்றும் செயற்பாடற்ற அங்கத்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஏறக்குறைய 14.6 மில்லியனை எட்டியுள்ளது. நிதியம் அனைத்து செயற்படு மற்றும் செயற்பாடற்ற அங்கத்தவர் கணக்குகளையும் பேணி வருகின்றது. 2018 ஆம் ஆண்டு வரை வருட இறுதியில் 96% அங்கத்தவர் கணக்குகள் இற்றைப்படுத்தப்பட்டன. இக்கணக்குகளில் 12 மில்லியன் செயற்பாடற்றவையாகவும் 2.6 மில்லியன் அங்கத்தவர் கணக்குகள் செயற்படுபவையாகவும் உள்ளதுடன் அவற்றிற்கான வருடாந்த அங்கத்தவர் கூற்றுக்கள் இவ்வருடத்தின் போது உரிய தொழில் வழங்குநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### முதலீடுகள்

கடந்த வருடத்தை விட 2018 ஆம் ஆண்டில் 11.1% அதிகரிப்பைக் கொண்டதாக, முதலீட்டுக் தொகை 262 பில்லியன் ரூபாவிலிருந்து 291 பில்லியன் ரூபா வரையில் அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் சபை முதலீட்டுக் கொள்கையின் வழிகாட்டல்களை கடுமையாகக் கடைப்பிடித்து, மூலதனத்தைப் பாதுகாத்துக் கொண்ட அதேவேளை, நியாயமானதொரு வருவாயையும் பெற்றுக் கொண்டது. முதலீட்டுக் கலவையின் பெரும் பகுதியான ரூபா 219 பில்லியன் (75%) அரசாங்கப் பிணைகளில் முதலீடு செய்யப்பட்டதுடன், ரூபா 1.2 பில்லியன் (0.6%) அரச உத்தரவாதமளிக்கப்பட்ட நிலையான வருமானக் கருவிகளிலும் ரூபா 11 பில்லியன் (3.7%) உரிமைப் பங்குகளிலும் ரூபா 59 பில்லியன் (20.7%) ஏனைய முதலீடுகளிலும் முதலீடு செய்யப்பட்டன.

2018 ஆம் ஆண்டு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் மொத்த முதலீட்டு வருமானம் ரூ.பில். 28.3 உழைக்கப்பட்டிருந்தது. அதில் ரூ.பில். 21.3 திறைசேரி பிணைமுறிகளில் முதலீடு செய்வதன் மூலமும் ரூ.பில். 6.0 நிலையான முதலீடுகள் மூலமும் உழைக்கப்பட்டது.

### தகவல் தொழில்நுட்பம்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் தகவல் தொழில்நுட்ப செயற்பாட்டுத் தொகுதியை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் (ICTA) தொழில்நுட்ப மற்றும் நிதி ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் இறுதியில் அந்த கருத்திட்டத்தின் ஆரம்ப கட்டம் அதாவது வியாபார செயல்முறை ஆய்வுப் (Business Process Studies) பகுதி வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டதோடு, அதன் இரண்டாம் கட்டமான கட்டமைப்பு பகுப்பாய்வு மற்றும் மென்பொருள் அபிவிருத்தி நடவடிக்கைகள் அந்த வருடத்தின் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த புதிய கருத்திட்டம் நிறைவடைந்தவுடன் சபையின் தகவல் தொழில்நுட்ப பாவனையில் பாரிய மாற்றம் நிகழவுள்ளது. அதற்கிணங்க, தற்போது அங்கத்துவ சேவை செயற்பாடுகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப தொகுதி மிகவும் பரந்த வட்டத்தில் சபையின் அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் செயற்படுத்தப்படும்.

மேலும், பங்களிப்புத் தொகை சேகரிப்பு வெளிக்கள விசாரணை நடவடிக்கைகளை மேலும் வினைத்திறனாக்குவதற்கு சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தொழில்நுட்ப ஒத்துழைப்பின் கீழ் 2017 ஆம் வருடத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ETF Inspection System Administration (EISA) கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டளவில் பாரிய முன்னேற்றத்தை கண்டுள்ளது. இந்த கருத்திட்டத்திற்காக மடிக் கணினிகள் 142 கொள்வனவுக்காக நிதி அமைச்சினால் நிதி அனுசரணை கிடைக்கப்பெற்றது.

சபைக்குரிய பதிவேட்டு அறைகளில் இட வசதி குறைவாக காணப்பட்டமையினால் அனைத்து முக்கியமான ஆவணங்களின் பாதுகாப்புக் கருதி அறிமுகம் செய்யப்பட்ட ஸ்கேன் (Document Scanning) கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக ஆரம்பிக்க முடியுமாகியது. ஆரம்பத்தில் இந்த செயன்முறை அங்கத்துவக் கணக்குகளுக்குரிய அறிக்கைகள் மற்றும் ஆவணங்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதோடு, எதிர்காலத்தில் நிறுவனத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் இந்த செயன்முறையை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### மனிதவள அபிவிருத்தி

மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தின் விசேட சொத்தாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இலங்கையின் இரண்டாவது மிகப் பெரிய சமூகப் பாதுகாப்பு நிதியமாக தனது அங்கத்தவர்களுக்கு மிகவும் உயர்ந்த தரத்திலான மற்றும் வினைத்திறன்மிக்க சேவையை வழங்குவது சபையின் அடிப்படை கடமையாகும். இந்த நோக்கத்தை அடைந்துகொள்ளும் பொருட்டு சிறந்த திறனுள்ள ஊழியர் படையணியொன்று இருப்பது அவசியமாகும்.

அதற்கிணங்க, எமது மனிதவளத்தை நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில் மனித வளத்தை மறுசீரமைக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று (HR Restruturing Programme) கடந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய இறுதி அறிக்கையை 2018 ஆம் ஆண்டிற்குள் நிறைவு செய்து வெளியிட முடியுமாகியது. சிறந்த கள ஆய்வொன்று செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கை ஊடாக வேலை அளவுகள் மதிப்பீடு, (Work Load Assessment), வேலை விவரணங்களை தயாரித்தல் (Create Job Description), மனிதவள அபிவிருத்தி திட்டம் (Human Resource Development Plan), செயலாற்றுகை மதிப்பீடு, (Performance Appraisal) மற்றும் ஊழியர் எண்ணிக்கை மதிப்பீட்டு அபிவிருத்தி (Cadre Development) ஆகிய 5 துறைகள் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஊழியர் படையணியின் அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் ஒவ்வொரு ஊழியருக்கும் ஏற்புடைய விடயப் பரப்பு அல்லது தொழிற் துறைக்கு அமைய தேவையான பயிற்சிப் பாடநெறியை தொடர்வதற்கு நிதி அனுசரணை வழங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் பாடநெறிக் கட்டணம் 75% க்கு உச்சமாக ரூ.300,000 க்கு கீழ் மீளளிக்கப்படுகின்றது. இந்தப் பாடநெறிகளை பல்கலைக்கழகங்களில் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் தொடர்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் இவ்வாறான பாடநெறிகள் 28 க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதோடு, ரூ.மில். 2.5 கட்டணங்கள் மீளளிப்புச் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் அனைத்து பிரிவுகளினதும் ஊழியர்களையும் உள்ளடக்கிய வகையில் ஏற்புடைய விடயத் துறைகளின் கீழ் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஏறக்குறைய 50 ஒழுங்கு செய்யப்பட்டது. அதன் பொருட்டு ரூ.மில். 1.2 நிதி செலவு செய்யப்பட்டது. வெளிநாட்டு வள திணைக்களம் மற்றும் வேறு அவ்வாறான முகவர் நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் வழங்கப்படும் வெளிநாட்டு அனுசரணையுடன் கூடிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு 15 உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

அதற்கமைய, கல்விசார் பாடநெறிகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் ஊழியர்களின் அறிவு மற்றும் வினைத்திறனை அதிகரித்து எமது சேவைப் பெறுநர்களுக்கு உயர் தரத்திலான வினைத்திறன்மிக்க சேவையை வழங்கும் பொருட்டு மனித வளத்தை நவீன உலகிற்கு ஏற்ற வகையில் வலுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## உற்பத்தித்திறன் அபிவிருத்தி

சபையின் அனைத்து பிரிவுகளினாலும் மேற்கொள்ளப்படும் பணிக் கடமைகளின் வினைத்திறனை அதிகரித்து எமது அனைத்து தரப்பினர்களுக்கும் உயரிய மற்றும் தரமான சேவையை வழங்கும் பொருட்டு 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட உற்பத்தித்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (Productivity Development Programme) தற்போது சிறந்த முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை ஒருங்கிணைப்புச் செய்வதற்கு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதோடு, நிறுவனத்தின் அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் தர வட்டங்கள் (Quality Circle) நிறுவப்பட்டுள்ளன. இந்த தர வட்டங்கள் மூலம் அவர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் ஒவ்வொரு பிரிவுக்கும் செயன்முறை கையேடு ஒன்று (Process Manual) தயாரிக்கப்படவுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றிக்கான பெறுபேறாக 2018 ஆம் ஆண்டு நடைப்பெற்ற தேசிய உற்பத்தித்திறன் போட்டியின் போது சேவைப் பிரிவின் சிறு தொகுதியின் கீழ் வவுனியா பிராந்திய அலுவலகம் மூன்றாம் இடத்தையும் அனுராதபுரம் பிராந்திய அலுவலகம் விசேட திறமைச் சான்றிதழையும் யாழ்ப்பாணம் மற்றும் மாத்தறை ஆகிய பிராந்திய அலுவலகங்கள் திறமைச் சான்றிதழையும் பெற்றுக்கொண்டன. மேலும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுத்துச் சென்று சபையை உயர் உற்பத்தித்திறன் கொண்ட நிறுவனமாக பரிணமிக்கச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் சார்பாக தவிசாளரினால் கையொப்பமிடப்பட்டது.



திரு. மஹிந்த மடிஹஹேவா
தவிசாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி

# ஆளுகை அறிக்கை

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அரசாங்க நிறுவனமாக இருக்கும் நிலையில், எல்லா நியதிச்சட்ட மற்றும் ஒழுங்குமுறை ரீதியான தேவைகளுக்கும் இணங்கக் கூடிய உறுதியான ஆளுகை நடைமுறைகள் ஊடாக அங்கத்தவர்களுக்கு உயர் பெறுமானத்தை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றது. சபையின் செயற்பாடுகளின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு வெளிப்படைத்தன்மையினை மிக உயர்ந்த தரத்திற்கு கடைபிடித்தல், நம்பகத்தன்மை மற்றும் இணங்கி ஒழுகுதல் என்பன நன்கு நிறுவப்பட்ட வழிகாட்டல் நெறிமுறைகளாகும். இந்த அறிக்கையானது தாபன ஆளுகையின் உயர்ந்த தரத்தினைப் பேணுவதற்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் எவ்வாறு தம்மை அர்ப்பணித்துள்ளனர் மற்றும் பொறுப்பக்களை ஏற்றுள்ளனர் என்ற தெளிவினை வழங்குகின்றது.

## தாபன ஆளுகையின் செயல் சட்டகம்



# தாபன ஆளுகை பற்றிய விவரணம்

| நிர்வாக செயற்பாட்டின் கொள்கைகள் | 2018 ஆம் ஆண்டுக்கு கருத்துத் தெரிவித்தல் |
|---|---|
| **1. பணிப்பாளர் சபை** | |
| 1.1. பணிப்பாளர் சபை | அரசாங்க மற்றும் அதன பங்குதாரர்கள் சார்பாக நிதியத்தின் நிர்வாகத்தில் பணிப்பாளர் சபைக்கு சட்டபூர்வமான பொறுப்பு உள்ளது. |
| 1.1.1. பணிப்பாளர் சபைக்கான நியமனங்கள் | சபையானது அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பின்வரும் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.<br>• அமைச்சரினால் நிமிக்கப்பட்ட நான்கு உறுப்பினர்கள்<br>• நிதி விடயம் தொடர்பாக பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர்<br>• வர்த்தக விடயம் தொடர்பாக பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர்<br>• இலங்கை பணிகொள்வோர் கழகத்தினால் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர்<br>• ஒவ்வொன்றும் 100,000 அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்சங்கங்களின் நிறைவேற்றுக் குழுவுடன் ஆலோசித்து அமைச்சரினால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் |
| 1.1.2. பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் | சபையானது வழமையாக ஒரு மாத இடைவெளியில் மற்றும் தேவைப்படும் போது ஒன்றுகூடும். இவ்வாண்டினுள் சபை பதின்மூன்று (12) தடவைகள் ஒன்றுகூடியது. சபைக் கூட்டங்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக சபைக் கூட்டங்களுக்கு மூன்று நாட்களுக்குக் குறையாத வேலை நாட்களுக்கு முன்னர் மற்றும் நன்கு முன்கூட்டியே சபை குறிப்பாணைகள் வழங்கப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டில் சபைக் கூட்டங்களின் போதான வரவு கீழே தரப்பட்டுள்ளது.<br><br> |
| 1.1.3. பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள் | பொதுமக்கள் வளங்களின் பாதுகாவலனாகப் பணிப்பாளர் சபையானது அதன் கட்டாயமான உரிமைகளையும் பொறுப்புக்களையும் நடைமுறைப்படுத்தல் வேண்டும். முறையான திட்டமிடலின்றி மேற்கொள்ளப்படும் எந்தவிதமான முடிவுகளும் நடவடிக்கைகளும் பொது மக்களைப் பெருமளவில் பாதிக்கும் என்பதால் சபையானது அதன் பாரதுரமிக்க பொறுப்புக்கள் குறித்து எல்லா வேளைகளிலும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.<br><br>பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்களும் பிரச்சினைகளும்:-<br><br>• கொள்கையாக்கம்<br>• நிதியத்தின் செயலாற்றுகையைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்<br>• துணை/கூட்டு மற்றும் ஏனைய முதலீடுகளின் செயலாற்றுகையைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்<br>• வருடாந்த செயலாற்றுகை மீள்நோக்கு<br>• தொழிற்படு மூலதனம்<br>• காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள்<br>• பணிப்பாளர் சபை குறிப்பாணைகள் |

| நிர்வாக செயற்பாட்டின் கொள்கைகள் | 2018 ஆம் ஆண்டுக்கு கருத்துத் தெரிவித்தல் |
|---|---|
| 1.1.4. சபையின் செயலாளர் | பணிப்பாளர் சபைக்குத் தேவையான நம்பகமான மற்றும் நம்பகமான மற்றும் பொருத்தமான தகவல்களை உரிய நேரத்தில் வழங்குவதை உறுதிப்படுத்தவதற்காக மற்றும் சபை நடைமுறைகள், சட்டங்கள் மற்றும் பொருத்தமான சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் இணங்கி ஒழுகுவது குறித்து சபைக்கு ஆலோசனை வழங்குவதற்காகப் பொறுப்பாகவுள்ள தொழில்வாண்மை தகுதியுள்ள தாபனச் செயலாளரின் ஆலோசனை மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுமதி உண்டு. உரிய நேரத்தில் சபை குறிப்பாணைகளை வழங்குவதுடன் சபையின் வினைத்திறன்மிக்க செயற்பாட்டினை மற்றும் சபைக் கூட்டங்கள் கொண்டிருக்க வேண்டிய நடைமுறைகளைச் செயலாளர் உறுதிப்படுத்துவார். |
| 1.1.5. சபைச் செயலாளரின் வகிபங்கு | சபை நடைமுறைகள் பின்பற்றுவது குறித்து சபைச் செயலாளர் உறுதிப்படுத்த வேண்டியதுடன், சபை நடைமுறைகள் டொடர்பான சட்டரீதியான தேவைகளைக் குறித்து வழிகாட்டல்களை வழங்குதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக செயலாளரின் கடமைகள் :<br>• சபைக் கூட்டங்களின் அறிவித்தல், கூட்ட நடவடிக்கைக் குறிப்புக்கள், சபைக் குறிப்பாணைகள் ஆகியவற்றுடன் ஏனைய உரிய ஆவணங்களைச் சுற்றனுப்புதல்.<br>• சபைத் தீர்மானங்கள் தொடர்பிலான பின்தொடர் நடவடிக்கைகள்<br>• உள்ளக மற்றும் வெளிவாரித் தகவல்களை வழங்குவதன் மூலம் சபை உறுப்பினர்களுக்கு உதவுதல் |
| 1.1.6. சபைச் சமநிலை | (நிதி, வர்த்தகம், பணிகொள்வோர் சம்மேளனம், தொழிற்சங்கம் போன்ற) வேறுபட்ட துறைகளிலிருந்து வரும் பணிப்பாளர்கள் சபைக்கு சமநிலையான தளத்தினை வழங்குவர். அவர்கள் ஒவ்வொரு விடயமும் தொடர்பாக அவர்களது சுதந்திரமான கருத்தக்களைத் தெரிவிப்பர். |
| 1.1.7. பயனுறுதிமிக்க சபைக் கூட்டத்திற்கான போதிய கால அவகாசம் | சபையானது வழமையாக மாதாந்த இடைவெளியில் கூடுகின்றது. ஒரு சபைக் கூட்டத்திற்குச் செலவிடப்படும் சராசரி நேரம் 3 மணித்தியாலங்களாகும். |
| **1.2. தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி** | |
| 1.2.1. தவிசாளரின் நியமனம் | சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரியானசபையின் தவிசாளர் அமைச்சரினால் நியமிக்கப்படுவார். |
| 1.2.2. தவிசாளரின் பொறுப்புக்கள் | ஒட்டுமொத்த நிர்வாக அமைப்பிலும் முக்கியமான இணைப்பாளராக உள்ள தவிசாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி அணியையும் நிறுவனத்தையும் சரியான திசையில் வழிநடத்திச் செல்வார். அவர் முன்னரே தீர்மானிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு முக்கிய நடவடிக்கைகள் தொடர்பிலான பொள்கைகளைச் செயற்படுத்துதல் மற்றும் திட்டங்களையும் நிகழ்ச்சிகளையும் தயாரித்தல் ஆகியவற்றிற்குப் பொறுப்பாயுள்ளார். |
| **2. கணக்கியல் மற்றும் கணக்காய்வு** | |
| 2.1 நிதி அறிக்கையிடல் | சபையின் நிதிக் கூற்றுக்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரமும் மற்றும் கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்களைக் கண்காணிக்கும் சபைச் சட்டத்திற்கு இணங்கவும் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படுகின்றன. |
| 2.1.1. நியதிச்சட்ட மற்றும் ஒழுங்குவிதி சார் அறிக்கையிடல் | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் சபையின் மற்றும் அதன் நிர்வாகத்தின் ஒன்றிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வுச் செய்யப்படல் வேண்டும். |
| 2.1.2. நிதிக் கூற்றுக்களுக்கான கணக்காய்வாளரின் பொறுப்பு | கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கையை உசாவவும். |
| 2.1.3. வருடாந்த அறிக்கையில் பணிப்பாளர்களின் அறிக்கை | பணிப்பாளர் சபையின் மீளாய்வினை உசாவவும். |
| 2.1.4. நிதிக் கூற்றுக்களுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு குறித்து கூற்று | பணிப்பாளர் சபையின் மீளாய்வினை உசாவவும். |
| **2.2. உள்ளகக் கட்டுப்பாடு** | |
| 2.2.1. உள்ளகக் கணக்காய்வு தொழிற்பாடு | ETFB அதன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினைக் கொண்டுள்ளது. |
| 2.2.2. கணக்காய்வுக் கமிட்டியினால் உள்ளகக் கட்டுப்பாட்டு பயனுறுதித் தன்மையின் மீளாய்வு | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள் உள்ளடங்கலாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் பயனுறுதித்தன்மை குறித்து கணக்காய்வுக் கமிட்டிக்கு தொடர்ந்தும் அறிக்கை அளிக்கின்றது. |

# துணைக் கமிட்டிகள்

நிறுவனத்தின் நிர்வாகத்திற்கு முழுமையான தேவைப்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சில நியமங்களுடன் இசைவாக செயற்படுவதற்கு சபையின் சிரேட்ட முகாமைத்துவம் கட்டுப்பட்டுள்ளது. அதன் பொருட்டு துணைக் கமிட்டிகள் அமைப்பது முக்கிய பணியாகும். வியாபார தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் பயனுறுதிவாய்ந்த செயற்பாட்டைம திப்பீடு செய்வதற்காக இந்த கமிட்டிகள் சபைக்கு உதவுகின்றன. அத்தோடு நிறுவனத்தின் மொத்த ஓட்டத்திலும் உறுதியான தீர்மானங்களை எடுப்பதிலும் இந்த கமிட்டிகள் பொறுப்பாக உள்ளன. சபையின் செயற்பாடுத்தன்மை தொடர்பாக குறிப்பிட்டதொரு தாக்கத்தை செலுத்தும் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக ஏற்புடைய துறையில் நிபுணத்துவம் மிக்க தொழில் வல்லுநர்களைக்கொண்டு இந்த கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. பணிப்பாளர் சபையினால் தாபிக்கப்பட்டுள்ள சில பிரதான கமிட்டிகள் பின்வருமாறு.

## I. கணக்காய்வுக் கமிட்டி

இக்கமிட்டி குறைந்தபட்சம் நிறைவேற்று சபை உறுப்பினர்களல்லாத மூவரைக் கொண்டிருக்க வேண்டியதுடன் முடிந்தால் திறைசேரிப் பிரதிநிதி ஒருவரால் அல்லது நிதி முகாமைத்துவத் திறன்களைக் கொண்ட ஒருவரால் தலைமைத் தாங்கப்படுதல் வேண்டும். இந்த கமிட்டி வழக்கமான அடிப்படையில் மூன்று மாதத்திற்கு ஒரு முறை அவைக் கூட்டுநராக பிரதான உள்ளகக் கணக்காய்வாளருடன் ஒன்றுகூடுவதுடன், தேவையான நடவடிக்கைகளுக்காக அதன் அவதானிப்புக்களை பரிந்துரைகளுடன் பணிப்பளர் சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

### பின்வரும் விடயங்கள் கணக்காய்வுக் கமிட்டியின் விடயப்பரப்பிற்குள் உள்ளடங்கும்.:

- உள்ளகக் கணக்காய்வு அலகின் பொறுப்புக்களை முடிவுசெய்தல் மற்றும் வருடாந்த கணக்காய்வுத் திட்டங்களை மீளாய்வு செய்தல்.
- நிறுவனத்தின் எல்லா செயற்பாடுகளுக்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் மீளாய்வு செய்தல்.
- குறிப்பிட்ட காலப் பிரிவுக்குள் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.
- வெளிப்புற கணக்காய்வாளர்களுடன் தொடர்புகொள்ளல் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நிர்வாகக் கடிதங்களைப் பின்பற்றி ஒழுகுதல்
- சட்டங்கள், ஒழுங்குவிதிகள், விதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் ஆகியவற்றுடன் இணங்கி நடப்பதை உறுதிப்படுத்தல்.
- கணக்கீட்டு நியமங்களுடன் நிதிக் கூற்றுக்கள் இணங்கிச் செல்வதை மீளாய்தல்.
- உள்ளகக் கணக்காய்வு/ வெளிவாரி கணக்காய்வாளர் அறிக்கைகள், நிர்வாகக் கடிதங்கள் என்பவற்றை மாற்று நடவடிக்கைகளுக்காக மீளாய்தல்.
- பொது முயற்சிகள் தொடர்பான கமிட்டியின் பரிந்துரைகள்/ அறிவுறுத்தல்களின் செயற்படுத்தலை மீளாய்வு செய்தல்
- வருடாந்த அறிக்கையில் உள்ளடக்குவதற்கு கணக்காய்வுக்குழு அறிக்கையை தயாரித்தல்.

### கணக்காய்வுக் கமிட்டியின் அமைப்பு

- **திரு. பி.பீ.எஸ்.சீ.நோனிஸ்**
  கணக்காய்வுக் கமிட்டியின் தலைவர்/பணிப்பாளர்
  நிதி அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்
- **திரு. எம்.ஏ. தாஜுதீன்**
  பணிப்பாளர்
  கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் பிரதிநிதி
- **திரு. பீ. ரணவக்கஆரச்சி**
  பணிப்பாளர்
  தொழிற்சங்கப் பிரதிநிதி
- **திருமதி. எஸ்.எம்.சீ.இந்திகா**
  கணக்காய்வு அத்தியட்சகர் - தேசிய கணக்காய்வு அலுவலகம்
- **மேலதிக பொது முகாமையாளர்**
- **அனைத்து பிரதிப் பொது முகாமையாளர்கள் மற்றும் அனைத்து உதவிப் பொது முகாமையாளர்கள்**

## II. முகாமைத்துவக் கமிட்டி

நிதியத்தின் செயற்பாடுகளின் முகாமைத்துவத்திற்கான பொறுப்பு தலைவர் மற்றும் சிரேக்ஷ்ட முகாமைத்துவத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்களை பயனுறுதிமிக்கதாகச் செயற்படுத்துவதற்கு அவர்கள் பொறுப்பாயுள்ளனர். நன்கு கவனத்திற்கொண்ட தீர்மானங்களைப் பெறுவதற்கு இயலுமாக்க சபைக்கு தகவல்களையும் தேவையான விளக்கங்களையும் தலைவரும் சிரேக்ஷ்ட முகாமைத்துவக் குழுவும் வழங்கும். சபையின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அடைவதுடன் நிதியத்தின் பயனுறுதிமிக்க முகாமைத்துவத்திற்கு செயற்படு திட்டங்கள், வரவுசெலவுகள், முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளைப் பேணுதல் ஆகியவற்றை அவர்கள் முறைப்படுத்துவார்.

எனவே, பருவகால முன்னேற்றக் கண்காணிப்பிற்காக சபையிலுள்ள முக்கியமானதொரு கருவியாக முகாமைத்தவக் கமிட்டி உள்ளது. இக்கமிட்டி கவனஞ் செலுத்தவேண்டிய முக்கிய விடயங்களாக உள்ளடங்க வேண்டியவை:

- இன்னும் செயற்படுத்தப்படாத முன்னைய கூட்டங்களில் எடுத்த சபைத் தீர்மானங்கள்
- மாற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு அவசியமான விலகல்களுக்கான காரணங்களை இனங்காணல் மற்றும் இலக்குகளுக்கு எதிரான உண்மையான செயலாற்றுகைகளை மீளாய்தல்
- பணப்பாய்ச்சல்களின் விமர்சனமிக்க மதிப்பீடு மற்றும் எதிர்வரும் காலாண்டிற்கான திட்டமிடப்பட்ட தேவைகள்
- கடன் /காசு முகாமைத்தவம்
- அவசரக் கொள்வனவுகளைத் தவிர்ப்பதற்கு கொள்வனவுத் தாமதங்களை (ஏதேனும் இருப்பின்) பின்னூட்டம் செய்தல்

- EPF, ETF மற்றும் வரிகள் போன்ற சட்ட ரீதியான கட்டணங்களின் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தல்
- சபையினால் தீர்மானங்களை எடுத்தலை எளிதாக்குவதற்கு நியாயப்படுத்துகைகளுடன் தேவையான தொழில்நுட்ப மேம்பாடு

- மேம்படுத்தல் ∴திருத்தியமைத்தல் ஆகியவற்றிற்கான மாற்று நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்கு ஊடகங்கள் ஊடான முறைபாடுகள் உள்ளடங்கலாக வாடிக்கையாளர் திருப்தி / அதிருப்தி குறித்து பின்னூட்டஞ் செய்தல்

- திருத்தப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய ஏதேனும் புதிய முன்மொழிவுகள்

- நிர்வாகம் மற்றும் தாபனத்துடன் தொடர்புடைய அனைத்து விடயங்களும்

- வேறு ஏதேனும் நாளாந்த செயற்பாட்டுப் பிரச்சினைகள்

### III. முதலீட்டுக் கமிட்டி

சபையின் நிதிக் கடப்பாடுகளை செலுத்துவதற்கு திரவத்தன்மையினை நிர்வகித்தல் மற்றும் அதிகாரம் பெற்ற முதலீடுகளைப் பயன்படுத்தி உகந்த முதலீட்டு வருவாயினை வழங்குதல் ஆகியவற்றுடன் சபையின் நிதியினை முதலீடு செய்வதில் சபையின் முதன்மை நோக்கமாவது அசல் தொகையின் பாதுகாப்பினை உறுதி செய்வதாகும். எனவே முதலீட்டுக் கமிட்டி அம்மூன்று இலக்குகளையும் உறுதிப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது.

- **பாதுகாப்பு**

மூலதனத்தின் பாதுகாப்பே சபையின் முதன்மைமிகு நோக்கமாகும். மூலதனத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு முதலீட்டுக் கலவையின் கணிசமான பகுதியினை சிறைகாப்புடைய அரசாங்க பிணையப் பத்திரங்களில் முதலீடு செய்யப்படும்.

- **திரவத்தன்மை**

நியாயமாகத் திட்டமிடப்பட்ட எல்லா செயற்பாட்டுத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு சபையினால் முடியுமாவதற்கு முதலீட்டுக் கலவையானது போதுமான திரவமாக இருத்தல் வேண்டும்.

- **முதலீடு மீதான வருவாய்**

அதிகாரம்பெற்ற முதலீட்டுக் கருவிகளைப் பயன்படுத்தி இருக்கும் உயர் வருவாயினைப் பெறுவதற்கு முதலீட்டுக் கலவை வடிவமைக்கப்படுதல் வேண்டும்.

முதலீட்டுக் கமிட்டி நாளாந்த அடிப்படையில் ஒவ்வொரு வேலை நாளிலும் ஒன்று கூடக்கூடிய ஆறு உறுப்பினர்களைக் கொண்டது. சந்தை நிலைமையை அடிப்படையாகக் கொண்டு நிதியத்திலிருந்து பொருத்தமான முதலீடுகளை அவர்கள் தீர்மானிப்பர்.

## துணைக் கமிட்டிகள் நிறைவேற்றுச் சுருக்கம்

| | | |
|---|---|---|
| I. கணக்காய்வுக் கமிட்டி | • உள்ளகக் கட்டுப்பாடுகளை மீளாய்தல்<br>• உள்ளகக் கணக்காய்வினை மீளாய்தல்<br>• வெளிவாரி கணக்காய்வினை மீளாய்தல்<br>• நிதிக் கூற்றுக்களை மீளாய்தல் | • மூன்று பணிப்பாளர்கள்<br>• எல்லா பிரதிப் பொது முகாமையாளர்களும் எல்லா உதவிப் பொது முகாமையாளர்களும் |
| II. முகாமைத்துவக் கமிட்டி | • செயற்பாட்டுன் பிரச்சினைகளை மீளாய்தல்<br>• தேவையான மேம்பாடுகளை மீளாய்தல்<br>• செயலாற்றுகைகளை மீளாய்தல் | • தவிசாளர்<br>• தொழிற்படுப் பணிப்பாளர்<br>• சிரேஷ்ட முகாமைத்துவம் |
| III. முதலீட்டுக்குழு | • பங்குகள் மற்றும் கடன் முதலீடுகள் | **முதலீட்டுக்குழு**<br>• திறைசேரி பிரதிநிதிகள்<br>• தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் பிரதிநிதி<br>• மேலதிக பொது முகாமையாளர்<br>• பிரதிப் பொது முகாமையாளர் (முதலீடு)<br>• பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)<br>• பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு)<br>• அவதனிப்பு பிரதிநிதி<br><br>**பங்குகள் முதலீட்டுக்குழு**<br>• உதவிப் பொது முகாமையாளர் (நிதி)<br>• நிதி முகாமையாளர்<br>• முகாமையாளர் / நிர்வாக உத்தியோகத்தர் (முதலீடு) |



# இடர்நேர்வு முகாமைத்துவ அறிக்கை

### இடர்நேர்வு முகாமைத்தவம்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை இலங்கையில் செயற்பட்டு வரும் முதன்மை ஓய்வூதியப் பணிக்கொடை நிதியமாக காணப்படுகின்றது. மாதாந்த அடிப்படையில் நிதியத்திற்கு கிடைக்கும் தனியார் மற்றும் அரச சார்பு நிறுவனங்களில் கடமையில் ஈடுபட்டுள்ள ஓய்வுதியத்திற்கு உரிமையற்ற ஊழியர்களிடமிருந்து நீண்ட காலத்திற்குப் பெற்றுக்கொள்ளப்படும் பங்களிப்புத் தொகைகளைப் பயன்படுத்தி அவர்களுக்கு நிதிப் பாதுகாப்பொன்றை வழங்கும் நன் நோக்கில் சபை தன்னை அர்ப்பணித்துள்ளது. மேலும், சகல ஊழியர்களும் தனது

சேவையிலிருந்து ஓய்வுபெறும் போது அவர்களுக்குரிய குறிப்பிட்ட நலன்கள் அவர்களுக்கு கிடைப்பதை சபை உறுதிசெய்ய வேண்டியுள்ளது. நிதியத்திற்குரிய பல்வேறுபட்ட முதலீட்டுக் கருவிகளில் முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் பாதுகாப்பையும் உறுதி செய்தல் வேண்டும். ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குரிய முதலீட்டுகளில் கனிசமானவை அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் கொழும்பு பங்குச் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட மொத்த சந்தை மூலதனம் 0.4% ஆக இருந்தது. அதற்கிணங்க, இடர்நேர்வு முகாமைத்துவம் வியாபார செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குரிய சகல கட்டங்களிலும் ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பிரதான விடயமாக கருதப்படுகின்றது.

சமகால வியாபார அமைப்பில் சபை முகங்கொடுக்கும் முக்கிய இடர்நேர்வுகளாவன கடன் இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு, செயற்பாட்டு இடர்நேர்வு என்பனவாகும்.

## கடன் இடர்நேர்வு

ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் கடன்பெறுநர் கடன் கொடுநருக்கு கடனனை திருப்பிச் செலுத்தாத போது கடன் இடர் நேர்வு நிகழ்கின்றது. இதனால் ஒரு கடனாளிக்காக ஏற்க வேண்டிய செலவு அதிகரிக்கின்றது. கடன் கொ்டனரின் பார்வையில் நோக்கும் போது அதனை கடன் ஒன்றுதிரள்வாகவும் கருதப்படும். இடர்நேர்வுகள், நிச்சயமாக பெறுமதிமிக்க நிதி வசதிகளின் பெறுபேறாக ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் கடன் கொடுநர் ஒருவர் அடைந்துகொள்ள இருந்த ஏதேனும் பொருளாதார அல்லது நிதிப் பெறுபேறுகள் மீது அது வரையறைகளை ஏற்படுத்தும். 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு சபையின் நிதியங்களில் 75.28 வீதம் இடர்நேர்வு அற்ற அரச பிணைப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. ஆகவே, கடன் இடர்நேர்வை குறைந்த மட்டத்தில் பேண முடிந்துள்ளது. எதிர்மறையான பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்ட மொத்த திரண்ட முதலீடு 0.88 ஆக கணக்கிடப்பட்டது. முழுமையாக பகுப்பாய்வுக்கு உட்படுத்திய பின்னர் தரப்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்களின் கடன் கடன் செயலாற்றுகைப் பத்திரங்களில் மாத்திரம் சபை பணத்தை முதலீடு செய்கின்றது. மேலும் உரிய மீளெடுத்தல் ஒப்பந்தங்கள் மற்றும் எதிர்பாரா ஓர் இரவில் நடைபெறும் மீளெடுத்தல் ஒப்பந்தங்கள் அரச பிணையப்பத்திரங்கள் ஊடாக போதியளவு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த இடர்நேர்வுகளை தவிர்க்கும் செயற்பாடானது கடன் இடர்நேர்வை குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதற்கு சபைக்கு உதவுகின்றது.

## சந்தை இடர்நேர்வு

சந்தை இடைநேர்வுகளுக்கு ஒரு நிறுவனம் உட்படுவதற்குரிய இடைநேர்வு நிதிச் சந்தையில் நிலவும் தளம்பல் நிலமைகள் மூலம் அதிகரிக்கின்றது. வட்டி வீதத்தில் காணப்படும் தளம்பல் மற்றும் பங்குரிமை இடைநேர்வுகள் சந்தை இடைநேர்வின் அடிப்படை அங்கங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. சந்தை இடைநேர்வு முதலீடுகளின் மீதான நலன்களின் வீழ்ச்சிக்கு காரணமாக அமையலாம். திறைசேரி பிணைமுறிகள் மீதான வட்டி வீதங்கள் உயர் பெறுமானத்தைக் காட்டும் போது பெறுமதியில் குறைவு ஏற்படலாம். அதற்கு நேர் மாற்றமாக வட்டி வீதத்தில் படிப்படியான வீழ்ச்சி (விலை இடைநேர்வு) காணப்படும் போது குறைந்த வட்டி வீதத்தின் மீது நிதியங்களை மீள் முதலீடு செய்ய வேண்டி ஏற்படும். அதன் மூலம் வருமான உருவாக்கத்தின் கொள்திறன் வீழ்ச்சியடையும். மாறுபட்ட காலப் பிரிவுகள் மற்றும் நலன்களின் கீழ் திறைசேரி பிணைமுறிகளைப் பெற்றுக்கொள்ளும் மூலோபாயத்துடன் நடவடிக்கை எடுக்கப்படுவதன் மூலம் சந்தை இடைநேர்வுக்கு உட்படும் நிலையை ஓரளவுக்கு தணிக்க முடியும். மூலதனச் சந்தைகளில் நிகழும் ஏதேனும் எதிர்மறையான தளம்பல்கள் பிரதானமாக பங்குகளின் மூலதனச் சந்தைப் பத்திரங்களின் பெறுமதியை குறைப்பதற்கு காரணமாக அமையலாம். முதன்மை செயற்பாட்டுடன் பல்துறை சந்தைகளில் நிலைத்திருப்பதை விரிவு படுத்துவதன் மூலம் பல்வேறுபட்ட முதலீட்டுப் பணிகளுக்கான பிரவேசத்தை ஏற்படுத்திக்கொள்ளல் மற்றும் விலைத் தொகுதிகளை பின்பற்றுதல் போன்ற தணிப்பு நடவடிக்கைகள் நிகழும் ஏதேனும் நிதி இழப்புக்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எதிர்மறையான முதலீடுகளில் பணத்தை இடுவதற்கு முன்னர் அது தொடர்பான பூரண பகுப்பாய்வொன்றை மேற்கொள்ளல் வேண்டும். ஆயினும், சபையின் சிறு முதலீட்டு விபரக் குறிப்பில் பங்குகள் மீது செய்யப்படும் முதலீடு நூற்றுக்கு 3.99 வீதமாக கணக்கிடப்பட்டதனால் சபையின் பங்கு உரிமைகள் திரட்சியின் மீது ஏற்படுத்திய மொத்த தாக்கம் ஒப்பீட்டளவில் குறைந்த பெறுமானத்தைக் கொண்டுள்ளது.

## திரவத்தன்மை இடர்நேர்வு

திரவத்தன்மை இடர் நேர்வு என்பது குறுகிய கால நிதிக் கேள்விகளைப் பூர்த்தி செய்ய முடியாமையினால் எழும் இடர் நேர்வு என சரளமாக வரைவிலக்கணப்படுத்தலாம். சபையின் கண்ணோட்டத்தில் இந்தப் பிரிவுக்குள் உள்ளடக்கப்படும் இடைநேர்வின் மூலம் அதிகார முதலீட்டுக்கான சந்தர்ப்பங்களை தடுக்க முடியும். நிதி செயலாற்றுகைப் பத்திரங்களின் மூலம் விற்பனை செய்வதன் மூலமும் அது வீழ்ச்சியடையக் கூடும். சாதாரணமாக

நலன்களை செலுத்திய பின்னர் சபையின் தேறிய பங்களிப்புத் தொகைகளின் மூலம் மாதந்தம் ரூ.மில். 583 நேர்மறையான நிதி உட்பாய்ச்சல் உருவாக்கப்பட்டதோடு, அதன் மூலம் சபையின் திரவத்தன்மை நிலையான உயர் பெறுமானத்தைக் காட்டியது. 2018 ஆம் ஆண்டின் இறுதியில் வருமானம் மற்றும் முதிர்வுத் தொகை போன்ற ஏனைய நிதிஉட்பாய்ச்சல் நூற்றுக்கு 72 வீத உழைப்பைக் காட்டியது. மிகவும் திரவத்தன்மையான முறையில் முதலீட்டு வகையினுள் உள்ளடங்கும் அரசாங்க பிணையப் பத்திரங்களின் குறிப்பிட்டதொரு அளவு முதலீடு செய்யப்படுவதனால் திரவத்தன்மை பொறியில் சிக்காது தவிர்ந்திருப்பதற்கு சபைக்கு இயலுமாகியது. இந்தப் பொறிமுறையினூடாக ஏற்பட முடியுமான எந்தவொரு திரவத்தன்மை பின்னடைவுக்கும் எதிராக மேலதிக பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்படுகின்றது. செயலிழந்த நிதியங்களின் நியாயமான நலனொன்றை உருவாக்கிக் கொள்ளும் நோக்கில் நாளாந்த திரவத்தன்மையை முகாமை செய்யும் கருவியொன்றாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை நாளாந்தம் ஓரிரவில் பணம் ஈட்டிக்கொள்ளும் மீள் கொள்வனவு சந்தையில் நிதியங்களை முதலீடு செய்துள்ளது. எனவே, நிதியம் தொடர்பான விடயத்தில் காணப்படும் திரவத்தன்மை இடைநேர்வு குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது.

### செயற்பாட்டு இடர் நேர்வு

செயற்பாட்டு இடைநேர்வுகளுக்கு நிறுவனமொன்றுக்கு உள்ள தொழிற்பாட்டு இயலுமை வீழ்ச்சியடைவதற்கு காரணமாக அமையலாம், அது நிதியிடல் மற்றும் முறையான இடைநேர்வை தீர்மானித்ததன் பின்னர் தோற்றம் பெறும் விசேட இடைநேர்வு ஆகும். அதற்கு உள்ளக நடவடிக்கை முறையின் வீழ்ச்சி மற்றும் தனிநபர் மற்றும் தொகுதி தகர்ந்து விழும் இடைநேர்வுகளும் உள்ளடக்கப்படும். சபையின் தொழிற்பாட்டு இடைநேர்வின் பிரதான மூலங்களாக தகவல் தொழில்நுட்ப அழிவுகள், மானிட தவறுகள், தலையீடுகள் மற்றும் இயற்கை அழிவுகள் போன்றன காணப்படுகின்றன. இந்த இடைநேர்வினை கட்டுப்படுத்துவதற்கு வலுவான தொழிற்பாட்டு இடைநேர்வு முகாமைத்துவ செயன்முறையொன்று சபையினால் உருவாக்கப்பட்டுள்ளது. ஏற்புடைய தொழிற்பாட்டு நடவடிக்கைகள் சுயாதீன உள்ளக கணக்காய்வாளர் ஒருவரால் கணக்காய்வு செய்யப்படுவதோடு, அவற்றின் குறைபாடுகள் மற்றும் முரண்பாடுகளை உடனடியாக தீர்ப்பதற்கு மாதாந்தம் அத்தகைய கணக்காய்வின் மூலம் எழக்கூடிய முடிவுகள் தொடர்பில் கலந்துரையாடப்படுகின்றது.





# 03

# நிதித் தகவல்கள்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

# இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விபரமான வருமானக் கூற்று

2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | | குழுமம் | | சபை | |
|---|---|---|---|---|---|
| | | 2018 | 2017 | 2018 | 2017 |
| | குறிப்பு | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **மொத்த வருமானம்** | | | | | |
| வட்டி வருமானம் | 4 | 28,330,988 | 27,303,884 | 28,301,818 | 27,239,114 |
| '(-) வட்டிச் செலவினம்- 3.0% ஊழியர் ந.பொ.நிதியச் சட்டத்தின் 22ஆவது பிரிவின் பிரகாரம்) ' | | (8,434,536) | (7,545,681) | (8,434,536) | (7,545,681) |
| தேறிய வியாபார வருமானம் | 5 | 201,061 | 596,369 | - | - |
| பங்கிலாப வருமானம் | 6 | 346,254 | 373,739 | 346,254 | 373,739 |
| நட்டம்/இலாபத்தின் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் மீதான ஆதாயம்/இழப்பு | 7 | (307,891) | 535,345 | (307,891) | 535,345 |
| ஏனைய வருமானங்கள் | 8 | 484,282 | 860,876 | 462,952 | 851,903 |
| | | **20,620,158** | **22,124,532** | **20,368,597** | **21,454,420** |
| **மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள்** | | | | | |
| ஊழியர் செலவினங்கள் | 9 | 1,243,448 | 1,174,842 | 1,144,968 | 1,053,611 |
| நிர்வாகச் செலவினங்கள் | 10 | 249,587 | 262,510 | 183,496 | 167,809 |
| நிதிச் செலவினங்கள் | 11 | 20,648 | 11,529 | 5,184 | 2,401 |
| அங்கத்தவர் செலவினங்கள் | 12 | 488,148 | 460,603 | 488,148 | 460,603 |
| பெறுமானத் தேய்வு மற்றும் கடன்கழிப்பு | 13 | 73,094 | 61,622 | 14,219 | 14,196 |
| நடப்பு ஆண்டில் அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்ட வட்டி | | 240,937 | 208,429 | 240,937 | 208,429 |
| உரிமையாண்மை முதலீடுகளின் பெறுமதி இழப்பு | | - | 13,050 | - | 13,050 |
| | | **2,315,863** | **2,192,584** | **2,076,953** | **1,920,098** |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | | **18,304,295** | **19,931,948** | **18,291,644** | **19,534,322** |
| வருமானவரிச் செலவினங்கள் | 14 | (3,410,284) | (2,779,214) | (3,394,806) | (2,705,842) |
| **வரிக்கு பின்னரான இலாபம்** | | **14,894,011** | **17,152,734** | **14,896,838** | **16,828,480** |
| நடப்பு ஆண்டு இலாபத்திற்கான திருத்தம் | | (45,925) | - | (45,925) | - |
| **ஆண்டிற்கான இலாபம்** | | **14,848,086** | **17,152,734** | **14,850,912** | **16,828,480** |
| **இலாபம் குறிக்கக்கூடியது:** | | | | | |
| கம்பனி பங்குதார்கள் | | 14,847,816 | 17,120,308 | 14,850,912 | 16,828,480 |
| கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சொத்துக்கள் | | 270 | 32,425 | - | - |
| **ஆண்டிற்கான இலாபம்** | | **14,848,086** | **17,152,734** | **14,850,912** | **16,828,480** |
| நிறுத்தி வைத்த இலாபம் முன் கொண்டுவரப்பட்ட | | 5,210,398 | 3,473,280 | 5,210,398 | 3,473,280 |
| **ஒதுக்கீட்டுக்கு கிடைககக்கூடிய இலாபம்** | | **14,848,086** | **17,152,734** | **14,850,912** | **16,828,480** |
| **ஒதுக்கீட்டுக்கு கிடைககக்கூடிய மொத்த இலாபம்** | | **20,058,484** | **20,626,014** | **20,061,310** | **20,301,760** |
| கழிக்க: உத்தேசிக்கப்பட்ட பகிர்வு -பங்கிலாபம் 6.0% | | 16,869,072 | 15,091,362 | 16,869,072 | 15,091,362 |
| கழிக்க: பங்கிலாபம் - இலங்கை உப்புக் கம்பனி | | - | - | - | - |
| **ஒதுக்கீட்டுக்குப் பின்னரான இலாபம்** | | **3,189,412** | **5,534,652** | **3,192,238** | **5,210,398** |

161 முதல் 193 வரையிலான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒன்றிணைந்த பகுதியாகும்.

சரியென உறுதிப்படுத்தப்பட்டது.

.........................................................
எம்.ஏ.வீ. குமுதுனீ
நிதி முகாமையாளர்

.........................................................
என்.டப்ளியூ. விமலவீர
பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)

பணிப்பாளர் சபை இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் தொடர்பில் பொறுப்புடையவர்கள் சபைக்காகவும் சபை சார்பாகவும் அனுமதித்து கையொப்பமிடப்பட்டது.

.........................................................
மஹிந்த மடிஹஹேவா
தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி

.........................................................
ப.பீ.மெதகெதர
தொழிற்பாட்டுப் பணிப்பாளர்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

## இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விபரமான வருமானக் கூற்று

2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | | குழுமம் | | சபை | |
|---|---|---|---|---|---|
| | | 2018 | 2017 | 2018 | 2017 |
| | குறிப்பு | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **ஏனைய விபரமான வருமானம்** | | | | | |
| **விபரமான வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தக்கூடிய அல்லது மீள்வகைப்படுத்தப்படும் உருப்படிகள்** | | | | | |
| விற்பனைக்கு கிடைக்கக்கூடிய நிதிச் சாதனங்கள் ஒதுக்கீட்டுக்கு மாற்றம் | | (593,418) | (211,202) | (593,418) | (211,202) |
| விற்பனைக்கு கிடைக்கக்கூடிய ஒதுக்கு (அலகுகள்) | | (45,261) | 8,484 | (45,261) | 8,484 |
| **விபரமான வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்படாத உருப்படிகள்** | | | | | |
| இளைப்பாற்று நலன் கடப்பாடு மீது காப்பீட்டு ஆதாயம்/ (இழப்பு) | | 13,560 | (11,599) | 13,560 | (11,599) |
| ஆண்டிற்கான ஏனைய விபரமான வருமானம் மீது வருமான வரி / (செலவினங்கள்) | | - | - | - | - |
| **ஆண்டிற்கான மொத்த ஏனைய விபரமான வருமானம் தேறிய வரி** | | **(625,118)** | **(214,317)** | **(625,118)** | **(214,317)** |
| **ஆண்டிற்கான மொத்த விபரமான வருமானம் தேறிய வரி** | | **14,268,893** | **16,938,416** | **14,271,719** | **16,614,163** |
| **மொத்த விபரமான வருமானம் குறிக்கக் கூடியது** | | | | | |
| கம்பனி பங்குதார்கள் | | 14,269,175 | 16,905,991 | 14,271,719 | 16,614,163 |
| கட்டுப்பாடற்ற உரிமைகள் | | (283) | 32,425 | - | - |
| **வரிக்குப் பின்னரான மொத்த விபரமான வருமானம் தேறிய வரி** | | **14,268,893** | **16,938,416** | **14,271,719** | **16,614,163** |

161 முதல் 193 வரையிலான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒன்றிணைந்த பகுதியாகும்.

சரியென உறுதிப்படுத்தப்பட்டது.

எம்.ஏ.வீ. குமுதுனீ
நிதி முகாமையாளர்

என்.டப்ளியூ. விமலவீர
பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)

பணிப்பாளர் சபை இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் தொடர்பில் பொறுப்புடையவர்கள் சபைக்காகவும் சபை சார்பாகவும் அனுமதித்து கையொப்பமிடப்பட்டது.

மஹிந்த மடிஹஹேவா
தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி

ப.பீ.மெதகெதர
தொழிற்பாட்டுப் பணிப்பாளர்

# நிதி நிலைமைக் கூற்று

2018 டிசம்பர் 31 ஆந் திகதியன்று

| | | குழுமம் | | சபை | |
|---|---|---|---|---|---|
| | | 2018 | 2017 | 2018 | 2017 |
| | குறிப்பு | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **சொத்துக்கள்** | | | | | |
| காசும் காசுக்கு சமமானவையும் | | 781,142 | 929,141 | 738,070 | 743,124 |
| இலாப நட்ட அடிப்படையில் சாதாரண பெறுமதிக்கு மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | 15 | 2,886,959 | 2,511,005 | 2,886,959 | 2,511,005 |
| துணை நிறுவனங்களில் முதலீடு | 16 | - | - | 470,961 | 470,961 |
| வேறு விஸ்தீரண வருமானத்தின் அடிப்படையில் சாதாரண பெறுமதிக்கு மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | 17 | 7,563,896 | 7,845,694 | 7,563,896 | 7,845,694 |
| கடன் செலவில் நிதிச் சொத்துக்கள் | 18 | 280,883,808 | 252,652,439 | 280,623,627 | 252,399,232 |
| ஏனைய சொத்துக்கள் | 19 | 15,381,984 | 11,920,568 | 14,456,522 | 11,050,045 |
| சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் | 20 | 1,196,569 | 1,184,809 | 218,161 | 173,586 |
| குத்தகைச் சொத்துக்கள் | 21 | 4,182 | 4,879 | - | - |
| அருவச் சொத்துக்கள் | 22 | 102 | 140 | 102 | 140 |
| முதலீட்டுச் சொத்துக்கள் | 23 | 3,812,500 | 3,812,500 | 3,812,500 | 3,812,500 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **312,511,143** | **280,861,175** | **310,770,798** | **279,006,286** |
| | | | | | |
| **பொறுப்புக்கள்** | | | | | |
| வட்டிக் கடன்களும் கடன்களும் | 24 | 155,545 | 183,045 | - | - |
| மானியங்கள் மற்றும் உதவித் தொகைகள் | 25 | 30,198 | 35,521 | - | - |
| நிலையான நலன் கடப்பாடு | 26 | 433,819 | 454,311 | 212,163 | 225,391 |
| நடப்பு வரிப் பொறுப்புக்கள் | 27 | 1,903,071 | 266,777 | 1,903,071 | 211,536 |
| ஏனைய பொறுப்புக்கள் | 28 | 965,699 | 604,068 | 540,815 | 157,269 |
| ஏற்பாடுகள் | 29 | 132,784 | 81,910 | 132,784 | 81,910 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **3,621,116** | **1,625,632** | **2,788,833** | **676,106** |
| | | | | | |
| உரிமையாண்மை | | 308,752,125 | 279,097,911 | 307,981,965 | 278,330,180 |
| கட்டுப்பாடற்ற வட்டிகள் | | 137,902 | 137,632 | - | - |
| **மொத்த உரிமையாண்மை** | | **308,890,027** | **279,235,543** | **307,981,965** | **278,330,180** |
| **மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் உரிமையாண்மை** | | **312,511,143** | **280,861,175** | **310,770,798** | **279,006,286** |

161 முதல் 193 வரையிலான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்ககள் இந்நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒன்றிணைந்த பகுதியாகும்.

சரியென உறுதிப்படுத்தப்பட்டது.

எம்.ஏ.வீ. குமுதுனீ
நிதி முகாமையாளர்

என்.டப்ளியூ. விமலவீர
பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)

பணிப்பாளர் சபை இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் தொடர்பில் பொறுப்புடையவர்கள் சபைக்காகவும் சபை சார்பாகவும் அனுமதித்து கையொப்பமிடப்பட்டது.

மஹிந்த மடிஹஹேவா
தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி

ப.பீ.மெதகெதர
தொழிற்பாட்டுப் பணிப்பாளர்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

## உரிமையாண்மை மாற்றக் கூற்று

2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது

| குழுமம் | கம்பனியின் பங்குதாரர்களுக்கு குறிக்கப்பட்டவை | | | | | | | | | கட்டுப் படுத்தப்பட்ட உரிமை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கத்தவர் நிதியம் | | | | | | | | | | |
| | பங்களிப்பு | வட்டி | பங்கிலாபம் | அங்கத்தவர் நிதியம் | நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | விற்பனைக்கு கிடைக்கக் கூடியவை | ஏனைய ஒதுக்குகள் | பங்கிலாபம் சமப்படுத்தும் ஒதுக்கு நிதியம் | ஏற்கனவே கையகப்படுத்திய ஒதுக்குகள் | | |
| **2017.01.01.ஆந் திகதியில் நிலுவை** | | | | | 3,473,280 | (800,805) | (29,295) | 142,000 | 475,902 | 105,207 | 248,974,526 |
| கடந்த ஆண்டு சரிப்படுத்தல்கள் - (வலுவிழந்த பங்குகள்) | - | - | - | - | - | 283 | - | - | | | 283 |
| விற்பனைக்கு உள்ள ஒதுக்குகள் | - | - | - | - | - | (211,202) | - | - | | | (211,202) |
| விற்பனைக்கு உள்ள ஒதுக்குகள் (அலகுகள்) | - | - | - | - | - | 8,484 | - | - | | | 8,484 |
| பங்குகள் மீது தேறக்கூடிய மூலதன ஆதாயம் - பங்கு ஒதுக்கு கணக்கு | - | - | - | - | - | (150,881) | - | - | | | (150,881) |
| உரிமை முதலீடுகள் பலவீனமடைதல் | - | - | - | - | - | 13,050 | - | - | | | 13,050 |
| கடந்த ஆண்டு பங்களிப்புத் தொகை சீறாக்கம் | - | - | - | (10,718) | - | - | - | - | | | (10,718) |
| கிடைக்கப்பெற்ற பங்களிப்பு தொகை | 22,764,642 | - | - | 22,764,642 | - | - | - | - | | | 22,764,642 |
| பங்களிப்பு தொகை மீளளித்தல் | (16,839,456) | - | - | (16,839,456) | - | - | - | - | | | (16,839,456) |
| அங்கத்தவர் நிதிய நிலுவை மீது வட்டி 3.0% | - | 7,545,681 | - | 7,545,681 | (7,545,681) | - | - | - | | | - |
| பங்கிலாபம் 6.0% | - | - | 15,091,362 | 15,091,362 | (15,091,362) | - | - | - | | | - |
| ஆண்டிற்கான திரண்ட இலாபம் | - | - | - | - | 24,374,161 | - | - | - | | 32,425 | 24,406,586 |
| காப்பீட்டு ஆதாயம் / (இழப்பு) | - | - | - | - | - | - | (11,599) | - | | | (11,599) |
| துணை நிறுவனங்களால் செலுத்தப்பட்ட பங்கிலாபம் | | | | | | | | | | - | - |
| துணை நிறுவன உரிமையாண்மையில் அசைவு | | | | | | | | | 291,828 | | 291,828 |
| **2017 டிசம்பர் 31 ஆந் திகதியில் நிலுவை** | 5,925,186 | 7,545,681 | 15,091,362 | 274,159,747 | 5,210,398 | (1,141,071) | (40,894) | 142,000 | 767,730 | 137,632 | 279,235,543 |
| **2018 ஜனவரி 01 ஆந் திகதியில் நிலுவை** | | | | 274,159,747 | 5,210,398 | (1,141,071) | (40,894) | 142,000 | 767,730 | 137,632 | 279,235,543 |
| கடந்த வருட சீராக்கங்கள் (வலுவிழந்த பங்குகள்) | - | - | - | - | (45,925) | - | - | - | | | (45,925) |
| பங்குகள் மீது உழைக்கப்பட்ட மூலதனங்கள் - பங்கு ஒதுக்குக் கணக்கு | - | - | - | - | - | (638,679) | - | - | | | (638,679) |
| கடந்த வருட பங்களிப்புத் தொகை சீராக்கம் | - | - | - | 1,035 | - | - | - | - | | | 1,035 |
| கிடைக்கப்பெற்ற பங்களிப்புத் தொகை | 25,282,293 | - | - | 25,282,293 | - | - | - | - | | | 25,282,293 |
| பங்களிப்புத் தொகை மீளளித்தல் | (18,291,873) | - | - | (18,291,873) | - | - | - | - | | | (18,291,873) |
| அங்கத்துவ நிதியத்திற்கான வட்டி 3.0% | - | 8,434,536 | - | 8,434,536 | (8,434,536) | - | - | - | | | - |
| பங்கிலாபம் 6.0% | - | - | 16,869,072 | 16,869,072 | (16,869,072) | - | - | - | | | - |
| ஆண்டுக்கான திரண்ட இலாபம் | - | - | - | - | 23,331,374 | - | - | - | | 270 | 23,331,644 |
| காப்பீட்டு ஆதாயம் / (இழப்பு) | - | - | - | - | - | - | 13,560 | - | | | 13,560 |
| துணை நிறுவனங்களால் செலுத்தப்பட்ட பங்கிலாபம் | | | | | | | | | | - | - |
| துணை நிறுவன உரிமையாண்மையில் அசைவு | | | | | | | | | 2,429 | | 2,429 |
| **2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிலுவை** | 6,990,420 | 8,434,536 | 16,869,072 | 306,454,810 | 3,192,238 | (1,779,750) | (27,334) | 142,000 | 770,160 | 137,902 | 308,890,027 |

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

## உரிமையாண்மை மாற்றக் கூற்று

2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது

| சபை | கம்பனியின் பங்குதாரர்களுக்கு குறிக்கப்பட்டவை | | | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கத்தவர் நிதியம் | | | | நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் | விற்பனைக்கு கிடைக்கக் கூடியவை | ஏனைய ஒதுக்குகள் | பங்கிலாபம் சமப்படுத்தும் ஒதுக்கு நிதியம் | |
| | பங்களிப்பு | வட்டி | பங்கிலாபம் | அங்கத்தவர் நிதியம் | | | | | |
| **2017.01.01.ஆந் திகதியில் நிலுவை** | | | | | 3,473,280 | (800,805) | (29,295) | 142,000 | 248,393,417 |
| கடந்த ஆண்டு சரிப்படுத்தல்கள் - (வலுவிழந்த பங்குகள்) | - | - | - | - | - | 283 | - | - | 283 |
| விற்பனைக்கு உள்ள ஒதுக்குகள் | - | - | - | - | - | (211,202) | - | - | (211,202) |
| விற்பனைக்கு உள்ள ஒதுக்குகள் (அலகுகள்) | - | - | - | - | - | 8,484 | - | - | 8,484 |
| பங்குகள் மீது உழைக்கப்பட்ட மூலதனங்கள் - பங்கு ஒதுக்குக் கணக்கு | - | - | - | - | - | (150,881) | - | - | (150,881) |
| பங்கு முதலீடுகளின் வலுக்குறைவு | - | - | - | - | - | 13,050 | - | - | 13,050 |
| கடந்த வருட பங்களிப்புத் தொகை சீராக்கங்கள் | - | - | - | (10,718) | - | - | - | - | (10,718) |
| கிடைக்கப்பெற்ற பங்களிப்புத் தொகை | 22,764,642 | - | - | 22,764,642 | - | - | - | - | 22,764,642 |
| பங்களிப்புத் தொகை மிளளித்தல் | (16,839,456) | - | - | (16,839,456) | - | - | - | - | (16,839,456) |
| அங்கத்துவ நிதியத்திற்கான வட்டி 3.0% | - | 7,545,681 | - | 7,545,681 | (7,545,681) | - | - | - | - |
| பங்கிலாபம் 6.0% | - | - | 15,091,362 | 15,091,362 | (15,091,362) | - | - | - | - |
| ஆண்டுக்கான திரண்ட இலாபம் | - | - | - | - | 24,374,161 | - | - | - | 24,374,161 |
| காப்பீட்டு ஆதாயம் / (இழப்பு) | - | - | - | - | - | - | (11,599) | - | (11,599) |
| **2017.12.31.ஆந் திகதியில் நிலுவை** | 5,925,186 | 7,545,681 | 15,091,362 | 274,159,747 | 5,210,398 | (1,141,071) | (40,894) | 142,000 | 278,330,180 |
| **2018.01.01.ஆந் திகதியில் நிலுவை** | | | | 274,159,747 | 5,210,398 | (1,141,071) | (40,894) | 142,000 | 278,330,180 |
| கடந்த வருட சீராக்கங்கள் | - | - | - | - | (45,925) | - | - | - | (45,925) |
| பங்குகள் மீது உழைக்கப்பட்ட மூலதனங்கள் - பங்கு ஒதுக்குக் கணக்கு | - | - | - | - | - | (638,679) | - | - | (638,679) |
| கடந்த வருட பங்களிப்புத் தொகை சீராக்கங்கள் | - | - | - | 1,035 | - | - | - | - | 1,035 |
| கிடைக்கப்பெற்ற பங்களிப்புத் தொகை | 25,282,293 | - | - | 25,282,293 | - | - | - | - | 25,282,293 |
| பங்களிப்புத் தொகை மிளளித்தல் | (18,291,873) | - | - | (18,291,873) | - | - | - | - | (18,291,873) |
| அங்கத்துவ நிதியத்திற்கான வட்டி 3.0% | - | 8,434,536 | - | 8,434,536 | (8,434,536) | - | - | - | - |
| பங்கிலாபம் 6.0% | - | - | 16,869,072 | 16,869,072 | (16,869,072) | - | - | - | - |
| ஆண்டுக்கான திரண்ட இலாபம் | - | - | - | - | 23,331,374 | - | - | - | 23,331,374 |
| காப்பீட்டு ஆதாயம் / (இழப்பு) | - | - | - | - | - | - | 13,560 | - | 13,560 |
| **2018.12.31.ஆந் திகதியில் நிலுவை** | 6,990,420 | 8,434,536 | 16,869,072 | 306,454,810 | 3,192,238 | (1,779,750) | (27,334) | 142,000 | 307,981,965 |

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

## காசுப் பாய்ச்சல் கூற்று

2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது

| | குழுமம் | | சபை | |
|---|---|---|---|---|
| | 2018 | 2017 | 2018 | 2017 |
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகள்** | | | | |
| இலாப நட்டக் கணக்கின் நிதிச் சாதனத்தின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட வருமானம் | 335,452 | 2,004,630 | 335,452 | 2,004,630 |
| முதிர்ச்சிக்கு விடப்பட்ட நிதிச் சாதனங்ளின் முதிர்வுகள் | 95,688,858 | 144,902,638 | 95,688,858 | 144,902,638 |
| நிதிச் சாதனங்கள் கடன் மற்றும் வருமதிகளின் முதிர்வுகள் | 105,939 | 100,047 | 105,939 | 100,047 |
| இலாப நட்டக் கணக்கின் நிதிச் சாதனத்தின் கொள்வனவிற்கான செலவு | (1,508,499) | (1,230,718) | (1,508,499) | (1,230,718) |
| முதிர்ச்சிக்கு விடப்பட்ட நிதிச் சாதனத்தின் கொள்வனவிற்கான கொடுப்பனவு | (124,860,207) | (172,194,646) | (124,860,207) | (172,194,646) |
| நிதிச் சாதனங்கள் கடன் மற்றும் வருமதிகளைப் பெறுவதற்கு வழங்கப்பட்ட கடன் | (288,605) | (628,139) | (288,605) | (628,139) |
| வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட பணங்கள் | 1,633,286 | 1,797,418 | - | - |
| வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்ட பணங்கள் | (1,595,326) | (1,748,242) | - | - |
| கிடைக்கப்பெற்ற வட்டி | 25,164,823 | 21,957,755 | 25,164,823 | 21,957,755 |
| கிடைக்கப்பெற்ற பங்கிலாபம் | 162,387 | 590,871 | 162,387 | 590,871 |
| கிடைக்கப்பெற்ற ஏனைய வருமானம் | 489,164 | 574,201 | 489,164 | 574,201 |
| செலுத்தப்பட்ட செயற்பாட்டுச் செலவினங்கள் | (1,230,308) | (1,137,322) | (1,230,308) | (1,137,322) |
| செலுத்தப்பட்ட அங்கத்தவர் செலவினங்கள் | (170,128) | (296,644) | (170,128) | (296,644) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | (199,596) | 29,219 | (199,596) | 29,219 |
| செலுத்தப்பட்ட வட்டி | (260,052) | (220,011) | (244,589) | (211,060) |
| செலுத்தப்பட்ட நிலையான நலன் திட்டச் செலவுகள் | (22,225) | (13,947) | - | - |
| பிரதேச செயலகங்களுக்கு செலுத்தப்பட்ட நில வாடகை | (1,458) | (9,477) | - | - |
| ஆண்டு 5 புலமைப்பரிசில் கொடுப்பனவு/ மீளளித்தல் | (89,664) | (83,641) | (89,664) | (83,641) |
| உயர்கல்விப் புலமைப்பரிசில் கொடுப்பனவு / மீளளித்தல் | (19,284) | (41,496) | (19,284) | (41,496) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் தேறிய காசுப் பாய்ச்சல்** | **(6,665,441)** | **(5,647,503)** | **(6,664,255)** | **(5,664,304)** |
| **முதலீட்டு நடவடிக்கைகள்** | | | | |
| சொத்துக்கள் மற்றும் கருவிகளின் கொள்வனவு | (90,400) | (195,460) | (36,144) | (20,544) |
| சொத்துக்கள் மற்றும் கருவிகளின் விற்பனை மூலம் வருமானம் | 7,993 | 503 | 6,548 | 218 |
| முதலீடுகளின் கையக்கப்படுத்துகை | (9,527) | 408,652 | - | - |
| கிடைக்கப் பெற்ற வட்டி | 29,715 | 66,092 | - | - |
| பணிக்குழாத்தினர் கடன்கள் மீள்கொடுப்பனவுகள் ∴ தேறிய (ஆதாயங்கள்) | 2,553 | 8,177 | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் தேறிய காசுப் பாய்ச்சல்** | **(59,667)** | **287,964** | **(29,596)** | **(20,326)** |
| **நிதியிடல் நடவடிக்கைகள்** | | | | |
| கிடைக்கப் பெற்ற பங்களிப்பு | 25,007,383 | 22,630,429 | 25,007,383 | 22,630,429 |
| நலக் கொடுப்பனவுகள் | (18,314,698) | (16,814,982) | (18,314,698) | (16,814,982) |
| செலுத்தப்பட்ட நிதிச் செலவினங்கள் | (3,889) | (2,026) | (3,889) | (2,026) |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | (69,842) | (228,695) | - | - |
| வட்டிக் கடன்களும் கடன்களின் மீள்கொடுப்பனவுகள் | - | (7,260) | - | - |
| நிதிக் குத்தகைப் பொறுப்புக்களின் கீழ் பிரதான கொடுப்பனவு | (8,112) | (5,157) | - | - |
| **நிதியிடல் நடவடிக்கைகள் மூலம் தேறிய காசுப் பாய்ச்சல்** | **6,610,843** | **5,572,309** | **6,688,797** | **5,813,421** |
| **காசும் காசுக்கு சமமானவையில் தேறிய அதிகரிப்பு** | **(114,265)** | **212,770** | **(5,053)** | **128,791** |
| ஜனவரி 01ஆந் திகதியில் காசும் காசுக்கு சமமானவையும் | 758,474 | 545,704 | 743,124 | 614,332 |
| **திசெம்பர் 31ஆந் திகதியில் காசும் காசுக்கு சமமானவையும்** | **644,209** | **758,474** | **738,070** | **743,124** |

விற்பனை செய்யப்படவுள்ள பட்டியலிடப்பட்ட பங்குச் சந்தை முதலீடுகள்

| | நிறுவனத்தின் பெயர் | கொள்வனவு விலை (ரூ) | சாதாரண பெறுமதி (ரூ) | சந்தைப் பெறுமதி (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | ஏசீஎல் கேபல்ஸ் பீஎல்சீ | 98,712,050.18 | 78,532,090.00 | 68,855,150.00 |
| 2 | ஏஹொடி ஆதனக் கம்பனி | 58,216,639.61 | 40,522,838.40 | 33,001,554.00 |
| 3 | எயிட்கன் ஸ்பேன்ஸ் பீஎல்சீ | 381,225,195.71 | 141,843,167.00 | 125,325,386.00 |
| 4 | எயிட்கன் ஸ்பேன்ஸ் ஹொடல் பீஎல்சீ | 206,276,390.25 | 69,698,727.00 | 64,009,035.00 |
| 5 | பைரஹா பார்ம்ஸ் பீஎல்சீ | 287,636,682.68 | 175,668,580.80 | 148,910,320.20 |
| 6 | காசன் கம்பர்பெச் பீஎல்சீ | 16,146,881.46 | 6,499,260.00 | 6,210,404.00 |
| 7 | சென்ட்ரல் பினேன்ஸ் பீஎல்சீ | 257,114,693.18 | 208,680,593.40 | 205,261,747.70 |
| 8 | சிலோன் இன்வென்ஸ்ட்மென்ட்ஸ் | 8,523,353.47 | 3,057,569.40 | 2,667,678.00 |
| 9 | சிலோன் காடியன் முதலீட்டுக் கம்பனி | 143,302,105.61 | 42,716,826.00 | 34,124,361.00 |
| 10 | கலம்பு போட்லன்ட் பீஎல்சீ | 55,326,764.09 | 13,300,570.00 | 10,500,450.00 |
| 11 | கொமர்க்ஷல் வங்கி பீஎல்சீ | 1,122,018,683.30 | 1,101,675,336.00 | 940,865,633.30 |
| | கொமர்க்ஷல் வங்கி (டீஒ) பீஎல்சீ | 464,740,358.81 | 382,421,340.00 | 358,913,239.50 |
| 12 | சீஜசீ ஹோல்டின்ஸ் பீஎல்சீ | 28,169,480.29 | 15,177,051.40 | 8,987,909.00 |
| 13 | டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ | 646,951,842.34 | 494,506,048.00 | 370,879,536.00 |
| 14 | டொக்யார்ட் பீஎல்சீ | 437,865,195.10 | 152,478,748.00 | 96,384,630.00 |
| 15 | டயலொக் ஆக்சிடா பீஎல்சீ | 56,248,610.41 | 56,248,610.41 | 43,244,180.20 |
| 16 | டிப்ட் புரொடக்ட்ஸ் பீஎல்சீ | 2,119,707.78 | 1,401,650.00 | 1,401,650.00 |
| 17 | ஈடன் ஹொடல்ஸ் பீஎல்சீ | 75,884,504.37 | 22,463,590.60 | 21,356,230.50 |
| 18 | எக்ஸ்போ லங்கா பீஎல்சீ | 43,035,286.61 | 18,828,180.00 | 13,946,800.00 |
| 19 | ஹேர்காபி பீஎல்சீ | 140,778,782.38 | 113,610,619.50 | 98,384,454.00 |
| 20 | ஹற்றன் நெக்ஷனல் வங்கி (டீஒ) பீஎல்சீ | 98,997,549.52 | 110,485,050.00 | 96,370,036.50 |
| 21 | ஜோன் கீல்ஸ் பீஎல்சீ | 15,799,867.57 | 9,162,353.20 | 8,839,376.00 |
| 22 | ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பீஎல்சீ | 2,836,575,220.20 | 2,560,768,617.92 | 2,736,157,860.00 |
| 23 | களனி கேபல்ஸ் பீஎல்சீ | 9,031,561.02 | 9,461,133.00 | 6,737,473.50 |
| 24 | லங்கெம் சிலோன் பீஎல்சீ | 16,823,135.76 | 3,291,320.00 | 1,983,020.30 |
| 25 | லாப் கேஸ் பீஎல்சீ | 1,630,691.47 | 1,082,786.00 | 866,228.80 |
| 26 | தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ | 1,030,818,538.45 | 1,024,669,663.50 | 875,878,460.00 |
| 27 | பீபல்ஸ் லீசிங்க பீஎல்சீ | 57,407,127.76 | 40,053,479.00 | 38,404,218.10 |
| 28 | பிரமல் கிளாஸ் பீஎல்சீ | 32,227,612.25 | 21,925,484.80 | 14,364,972.80 |
| 29 | புரொபர்டி டிவலொப்மன்ட்ஸ் பீஎல்சீ | 4,937.00 | 29,100.00 | 39,870.00 |
| 30 | ரேணுகா ஹோல்டிங்ஸ் பீஎல்சீ | 114,531,974.04 | 71,983,951.00 | 49,252,177.00 |
| 31 | ரிசர்ஸ் வலுச்சக்தி பீஎல்சீ | 48,539,489.11 | 28,713,840.00 | 33,314,400.00 |
| 32 | ரிசர்ட் பீரிஸ் நிறுவனம் பீஎல்சீ | 4,272,032.74 | 4,272,032.74 | 4,348,165.50 |
| 33 | ரோயல் செரமிக் பீஎல்சீ | 52,566,675.44 | 54,885,460.50 | 35,807,370.30 |
| 34 | சம்பத் வங்கி பீஎல்சீ | 168,106,891.35 | 198,342,273.01 | 159,338,695.00 |
| 35 | செலான் வங்கி பீஎல்சீ | 303,013,660.14 | 267,431,997.00 | 243,240,138.80 |
| | செலான் வங்கி (டீஒ) பீஎல்சீ | 63,895,097.31 | 55,955,463.62 | 46,184,325.00 |
| 36 | சிங்கர் பினேன்ஸ் பீஎல்சீ | 23,608,129.87 | 17,540,340.00 | 16,254,048.40 |
| 37 | இலங்கை டெலிகொம் பீஎல்சீ | 110,340,299.24 | 93,782,139.20 | 77,601,418.00 |
| 38 | டிரான்ஸ் ஏசியா பீஎல்சீ | 37,071,514.05 | 50,902,749.00 | 50,559,584.40 |
| 39 | வெலிபல் பவர் பீஎல்சீ | 47,175,248.43 | 39,502,634.00 | 33,785,147.50 |
| 40 | வெலிபல் வன் பீஎல்சீ | 43,284,081.77 | 30,481,878.00 | 29,276,380.00 |
| | **மொத்தம்** | **9,646,014,542.12** | **7,834,055,141.40** | **7,211,833,714.30** |

## முதலீட்டுக் கூற்று

2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு

பட்டியல் படுத்தப்படாத கம்பனிகளின் பங்குகள் 2018.12.31 ஆம் திகதிக்கு

| | நிறுவனத்தின் பெயர் | விற்பனை விலை (ரூ) | தேறிய சொத்துக்களின் பெறுமதி (ரூ) |
|---|---|---|---|
| 1 | வரையறுக்கப்பட்ட பிச் ரேடிங் லங்கா | 2,405,625.00 | 2,186,250.00 |
| 2 | வரையறுக்கப்பட்ட பெஸ்ட் கெபிடல் டிசரீஸ் | 87,586,200.00 | 158,773,500.00 |
| | **மொத்தம்** | 89,991,825.00 | 160,959,750.00 |

31.12.2018 ஆம் திகதியன்று துணை நிறுவனங்களின் முதலீடுகள்

| | நிறுவனத்தின் பெயர் | விற்பனை விலை (ரூ) |
|---|---|---|
| 3 | இலங்கை உப்புக் கம்பனி | 470,960,937.50 |
| | **மொத்தம்** | 470,960,937.50 |

பட்டியலிடப்பட்ட பங்குகள் – வியாபாரம் செய்தல்

| | நிறுவனத்தின் பெயர் | விற்பனை விலை (ரூ) | சாதாரண பெறுமதி (ரூ. '000) | சந்தை பெறுமதி (ரூ. '000) |
|---|---|---|---|---|
| 1 | ஏசீஎல் கேபல்ஸ் பீஎல்சீ | 153,062,370.43 | 108,289,715.40 | 94,945,959.00 |
| 2 | ஆசிரி அறுவைசிகிச்சை மருத்துவமனை பீஎல்சீ | 1,439,651.61 | 1,439,651.61 | 1,395,513.90 |
| 3 | கொமர்ஷல் வங்கி பீஎல்சீ | 1,196,160,068.01 | 1,151,387,894.62 | 984,215,924.80 |
| | கொமர்ஷல் வங்கி (X) பீஎல்சீ | 146,738,498.64 | 138,784,747.43 | 131,168,200.50 |
| 4 | டிப்ட் புரொடக்ட்ஸ் பீஎல்சீ | 163,099,054.69 | 111,763,525.00 | 111,763,525.00 |
| 5 | ஹற்றன் நெசஷனல் வங்கி பீஎல்சீ | 351,994,224.74 | 379,335,965.43 | 334,183,470.00 |
| | ஹற்றன் நெசஷனல் வங்கி (X) பீஎல்சீ | 100,019,215.21 | 107,444,800.82 | 95,286,750.00 |
| 6 | ஜோன் கீல்ஸ் பீஎல்சீ | 376,878,998.86 | 386,693,490.10 | 416,090,757.00 |
| 7 | இலங்கை ஐஓசீ பீஎல்சீ | 92,233,028.95 | 65,946,513.10 | 57,028,479.30 |
| 8 | லாப் கேஸ் பீஎல்சீ | 6,392,892.51 | 3,741,858.00 | 2,993,486.40 |
| 9 | சம்பத் வங்கி பீஎல்சீ | 556,434,917.64 | 556,434,917.64 | 470,754,820.00 |
| 10 | செலான் வங்கி பீஎல்சீ | 65,056,374.03 | 63,422,866.37 | 58,986,744.40 |
| | செலான் வங்கி (X) பீஎல்சீ | 101,784,054.97 | 98,553,047.27 | 82,662,977.50 |
| 11 | சிங்கர் பினேன்ஸ் பீஎல்சீ | 48,442,640.91 | 34,072,830.00 | 31,574,155.80 |
| 12 | டிபே லங்கா பீஎல்சீ | 11,528,977.85 | 14,549,960.00 | 13,908,050.00 |
| | **மொத்தம்** | 3,371,264,969.05 | 3,221,861,782.79 | 2,886,958,813.60 |

31.12.2018 ஆம் திகதியன்று பட்டியலிடப்பட்ட அலகு பொறுப்புக்கள்

| | நிறுவனத்தின் பெயர் | விற்பனை விலை (ரூ) | சாதாரண பெறுமதி (ரூ. '000) | சந்தை பெறுமதி (ரூ. '000) |
|---|---|---|---|---|
| 1 | கொம்டிரஸ்ட் பங்கு நிதியம் | 14,261,338.98 | 28,246,096.17 | 25,146,090.72 |
| 2 | தேசிய பங்கு நிதியம் | 41,680,707.58 | 143,567,886.74 | 114,893,964.31 |
| 3 | நாமல் குரொத் நிதியம் | 4,500,000.00 | 61,020,000.00 | 51,062,355.00 |
| | **மொத்தம்** | 60,442,046.56 | 232,833,982.91 | 191,102,410.03 |

## 1. தாபனத் தகவல்கள்

### 1.1. சட்ட மற்றும் இட அமைவு

1980ம் ஆண்டின் 46 ஆவது இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் 1981ம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி நிறுவப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை (ETF) ஓர் அரசாங்கக் கூட்டுத்தாபனமாகும். ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அபிவிருத்திப் பணிகள் அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது.

இலங்கை சோல்ட் லிமிடட் எனப்படும் வரையறுக்கப்பட்ட உப்புக் கம்பனி இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு வரையறுக்கப்பட்ட பொது கம்பனியாகும். கம்பனியின் பிரதான வர்த்தகத் தளம் மற்றும் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் ஹம்பாந்தோட்டை, மகாலேவாயாவில் அமைந்துள்ளது.

### 1.2. பிரதான செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை

இவ்வாண்டினுள், இந்நிதிக் கூற்றுக்களுக்குள் இருந்த வண்ணம் செயற்படுத்தப்பட்ட கம்பனியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு :

| கம்பனியின் பெயர் | வியாபாரத்தின் தன்மை |
|---|---|
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை | அரசாங்க ஓய்வூதியத் திட்டத்திற்கு உரித்தாகாத எல்லா அரசாங்கத் துறை ஊழியர்களும் எல்லா தனியார் துறை ஊழியர்களும் இந்நிதியத்தின் உறுப்பினர்களாவதுடன், அவர்களின் தொழில்தருநர்கள் அவ்வூழியர்கின் மொத்த வருவாயில் 3% இனை மாதாந்தம் நிதியத்திற்குப் பங்களித்தல் வேண்டும். மேலும் இந்த நிதியமானது புலம்பெயர் மற்றும் சுய தொழில் துறையினரையும் உள்ளடக்குகின்றது. இது எதிர்காலத்தில் மேலும் விரிவுபடுத்தப்படவுள்ளது. நிதியத்தினை நிர்வகித்தல் தவிர, ETF சபை, அதன் உறுப்பினர்களுக்கு அவர்களது பணிபுரியும் காலப்பகுதியில் சமூக மற்றும் நலன்புரி நன்மைகள் பலவற்றை நிறைவேற்றுவதில் ஈடுபடுகின்றது. |
| இலங்கை உப்புக் கம்பனி | கம்பனியின் பிரதான செயற்பாடுகளாக உப்பு உற்பத்தியும் விநியோகித்தலும் காணப்படுகின்றது. |

### 1.3 தாய் நிறுவனம் மற்றும் இறுதித் தாய் நிறுவனம்

கம்பனிக்கான இறுதித் தாய் நிறுவனம் ஒன்று இல்லை. - ETFB தாய் நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது.

### 1.4 வெளியிடுவதற்கான அதிகாரம் பெறும் திகதி

2018 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான ETF சபையின் நிதிக் கூற்றுக்களை 2019 பெப்ரவரி மாதம் 28 ஆந் திகதியன்று பணிப்பாளர் சபையின் தீர்மானம் பிரகாரம் வெளியிடுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 2. முக்கியமான கணக்கியற் கொள்கைகளின் சுருக்கம்

### 2.1 பொதுவான கொள்கைகள்

#### 2.1.1 நிதி நிலைமைக் கூற்றுக்களை முன்வைத்தல்

நிதி நிலைமைக் கூற்றில் முன்வைக்கப்பட்ட நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தன்மையைக் கொண்டு வகைப்படுத்தப்பட்டு மற்றும் அவை தொடர்பில் திரவத்தன்மையைப் பிரதிபலிக்கும் பொருட்டு பட்டியலிடப்படுகின்றன. நிதிக் கூற்றுக்களைப் பாதிக்கும் பணவீக்கக் காரணிகளுக்கு சரிப்படுத்தல்கள் ஏற்படுத்தப்படவில்லை. 12 மாதங்களுக்குள் மற்றும் அறிக்கையிடும் திகதியிலிருந்து 12 மாதங்களுக்குப் பிறகு மீட்சி அல்லது தீர்த்தல் மீதான பகுப்பாய்வொன்று இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

#### 2.1.2 இணக்கக் கூற்று

2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மற்றும் அப்போது முடிவுற்ற ஆண்டிற்கான, நிறுவனத்தின் கணக்கியற் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் ('நிதிக் கூற்றுக்கள்') உள்ளடங்கலாக நிதி நிலைமைக் கூற்று, விபரமான வருமானக் கூற்று, உரிமையாண்மை மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (SLFRS/LKAS) இணங்குகின்றன. இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் என்பன 2007 இன் கம்பனிகள் சட்ட இல. 07 இன் தேவைகளின் பிரகாரம் இணங்குகின்றன.

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் (SME களுக்கான SLFRS) வழங்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் டுளுடு இன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் என்பன 2007 இன் கம்பனிகள் சட்ட இல. 07 இன் தேவைகளின் பிரகாரம் ஆகும்.

### 2.1.3 முக்கியமான கணக்குகளின் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

சபை எதிர்காலத்திற்காக குறிப்பிட்ட சில மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை மேற்கொள்கின்றது. எதிர்காலத்திற்கான எதிர்பார்ப்புகள் உட்பட வரலாற்று ரீதியான அனுபவம் மற்றும் ஏனைய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புக்கள் தொடர்ச்சியாக கணிக்கப்படுகின்றன.

SME களுக்கான SLFRS உடன் இணங்குமாறு இலங்கை உப்புக் கம்பனி நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு சில தீர்க்கமான கணக்கீட்டு மதிப்பீடுகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. நிதிக் கூற்றுக்களுக்கு முக்கியமான ஊகங்கள் மற்றும் மதிப்பீடுகள் கொண்ட விடயங்கள் அல்லது உயர்ந்த அளவிலான தீர்ப்பு அல்லது சிக்கல் கொண்ட விடயங்கள் என்பன பின்வருமாறு எடுத்துக்காட்டப்படுகின்றன.

**தீர்ப்புக்கள்**

**பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்:**

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள், இழப்புக்கள் பயன்படுத்தக்கூடியதற்கு மாறாக வரிக்குட்பட்ட இலாபம் கிடைப்பதில் சாத்தியப்பாடு உள்ளது என்ற அளவிற்கு எல்லா பயன்படுத்தப்படாத வரி இழப்புக்களும் இனங்காணப்படும். முக்கியமான முகாமைத்துவத் தீர்ப்பு, எதிர்கால வரித் திட்டமிடல் உபாயங்களுடன் எதிர்கால வரிக்குட்பட்ட இலாபங்களின் வாய்ப்பு மற்றும் மட்டத்தின் அடிப்படையில் இனங்காண முடியுமான பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் அளவினைத் தீர்மானிப்பதற்கு தேவைப்படுகின்றது.

### 2.1.4 அளவிடுதலின் அடிப்படை

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சிலவற்றைத் தவிர நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவின் அடிப்படையாகக் கொண்டு நியாயமான விலையில் அளவிடப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

LSL இன் நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.1.5 தொழிற்படு மற்றும் முன்வைத்தல் நாணயம்

கம்பனியின் புழக்கத்திலுள்ள நாணயமான இலங்கை ரூபாவில் இந்நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எல்லா நிதிசார் தகவல்களும் இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்டுள்ளன.

### 2.1.6 தொடர்ச்சியான வியாபார நிலமை

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் முகாமை தொடர்ச்சியான நிலைப்பாட்டினைத் தொடர்வதற்கான சபையின் இயலுமையை மதிப்பீடு செய்துள்ளதுடன், எதிர்வரும் எதிர்காலத்திற்கு வர்த்தகத்தில தொடர்ந்தும் ஈடுபடுவதற்கான வளங்களை சபை கொண்டுள்ளது என்பதில் திருப்தியடைந்துள்ளது. மேலும், தொடர்ச்சியான நிலைப்பாட்டினைத் தொடருவதற்கு சபையின் இயலுமை மீது குறிப்பிடத்தக்க சந்தேகத்தினை ஏற்படுத்தக் கூடிய ஏதேனும் நிச்சயமற்ற தன்மைகள் குறித்து முகாமை அறியவில்லை. அதனால், நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்தும் தொடர்ச்சியான நிலைப்பாட்டின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

இலங்கை உப்புக் கம்பனியின் பணிப்பாளர்கள் தொடர்ச்சியான நிலைப்பாட்டினைத் தொடர்வதற்கான சபையின் இயலுமையை மதிப்பீடு செய்துள்ளதுடன், அவர்கள் வர்த்தகத்தை நிறுத்தவோ அல்லது கலைப்பதற்கோ எண்ணவில்லை.

### 2.1.7 ஒப்பீட்டுத் தகவல்

கணக்கியற் கொள்கைகள் கம்பனியால் தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன் கடந்த ஆண்டுடன் இசைவானவையாகவும் உள்ளன.

### 2.2 ஒருங்கிணைவின் அடிப்படை

**அ) ஒருங்கிணைவு**

ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2018 டிசம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு கம்பனியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் நிதிக் கூற்றுக்களை உள்ளடக்குகின்றன.

துணை நிறுவனமானது, குழுமம் கட்டுப்பாட்டினைப் பெற்றுக்கொண்ட நாளாகிய, கையகப்படுத்திய நாள் முதல் ஒருங்கிணைக்கபட்டுள்ளதுடன் அத்தகைய கட்டுப்பாடு முடிவடையும் நாள் வரை தொடர்ந்தும் ஒருங்கிணைக்கபட்டிருக்கும். துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் தாய் நிறுவனத்தைப் போன்றே அறிக்கையிடும் அதே காலப்பகுதியில் தயாரிக்கப்படும்.

எனினும், குழு கணக்கியற் கொள்கைகளுள் முன்னிலைப்படுத்தப்பட்ட இரு நிறுவனங்களினதும் கணக்கியற் கொள்கைகள் வித்தியாசமானவை. அவை குழுமத்திற்குரிய கணக்கீட்டுக் கொள்கைகளில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

### ஆ) துணை நிறுவனங்கள்

துணை நிறுவனங்களாவன, வாக்குரிமைகளின் அரைப்பகுதிக்கும் மேலாக பங்குரிமையினைப் பொதுவாகக் கொண்ட செயற்பாட்டு மற்றும் நிதிசார் கொள்கைகளை நிர்வகிப்பதற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆற்றலைக் கொண்ட குழுமத்தாலான நிறுவனங்களாகும். குழுமம் வேறோரு நிறுவனத்தைக் கட்டுப்படுத்துகின்றதா என மதிப்பிடும் போது நடைமுறைப்படுத்தக் கூடியதும் அல்லது மாற்றக்கூடியதுமான சாத்தியமான வாக்குரிமைகளின் நிலைப்பாடு மற்றும் விளைவு கருத்திற் கொள்ளப்படும். குழுமத்திற்கு கட்டுப்பாட்டினை மாற்றப்பட்ட நாள் முதல் துணை நிறுவனங்கள் முற்றாக ஒருங்கிணைக்கப்படும். கட்டுப்பாடு நிறுத்தப்பட்ட நாளிலிருந்து அவை ஒருங்கிப்பினை இழக்கும்.

கம்பனியிதும் மற்றும் அதன் துணை நிறுவனங்களினதும் எல்லா சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களிலும் மற்றும் ஒருங்கிணைப்பிலும உள்ளடங்கிய கம்பனியின் மற்றும் ஒருங்கிணைப்பில் உள்ளடங்கிய அதன் துணை நிறுவனங்களின் வருடத்திற்கான மொத்த இலாபங்கள் மற்றும் நட்டங்கள் முறையே விபரமான வருமானத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட கூற்றில் மற்றும் நிதி நிலைமைக் கூற்றிலும் காட்டப்பட்டுள்ளன.

### இ) அறிக்கையிடும் திகதி

12 மாதங்களுடன் முடிவடையும் டிசம்பர் 31ஆந் திகதியான பொதுவான அறிக்கையிடும் காலப்பகுதியில் துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும்.

## 2.3 இலாபம் மற்றும் நட்டத்தினை அளவிடுவதன் அடிப்படை

### 2.3.1 வருவாய்

பொருட்களின் விற்பனை மூலமான வருவாய் பொருட்கள் வழங்கப்படும் போது மற்றும் உரிமை கடந்து விட்ட போதும் இனங்காணப்படும். கிடைத்தவை அல்லது கிடைக்க வேண்டியவை, கழிவுகளின் தேறிய தொகை மற்றும் அரசாங்கத்தின் சார்பாக சேகரிக்கப்பட்ட விற்பனை தொடர்பிலான வரிகள் ஆகியவற்றின் நியாயமான பெறுமதியினைக் கருத்திற் கொண்டு வருவாய் அளக்கப்படும். வருவாய் இனங்காண்பதற்கு முன்னர் பின்வரும் திட்டவட்டமான இனங்காணல் பிரமாணங்கள் நிறைவு செய்யப்படல் வேண்டும்.

#### பொருட்களின் விற்பனை

பொருட்களின் விற்பனை மூலமான வருவாய் சாதாரணமாக பொருட்களை வழங்குகையில் கொள்வனவாளருக்கு பொருட்களின் உடைமையுரிமையின் குறிப்பிடத்தக்க இடர்கள் மற்றும் வெகுமதிகள் மாற்றப்படும் போது இனங்காணப்படும்.

#### சேவைகளை வழங்குதல்

சேவைகளை வழங்குவதன் மூலமான வருவாயானது, ஒவ்வொரு ஒப்பந்தத்திற்குமான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட ஊழிய மணித்தியாலங்களின் வீதமாக நடைபெற்ற ஊழிய மணித்தியாலத்தினைக் கணக்கிடுவதன் மூலம் தீர்மானித்து நிறைவடையும் கட்டத்திற்கு குறிப்பிடுவதன் மூலம் இனங்காணப்படும். ஒப்பந்த முடிவின் நம்பகத்தன்மையை அளவிட முடியாத சந்தர்ப்பத்தில் வருவாய் மீட்டெடுக்கக் கூடிய செலவினங்களுக்கு இனங்காணப்படும்.

#### வட்டி

வருவாய் சொத்து மீதான பயனுறுதிமிக்க வட்டியை கணிப்பிடும் நேர விகித அடிப்படையில் வருவாய் இனங்காணப்படும்.

### 2.3.2 வட்டி மற்றும் ஒத்த வருமானமும் செலவும்

கடன் தீர்ப்பனவுச் செலவில் அளவிடப்படும் எல்லா நிதிச் சாதனங்களுக்காக நிதிச் சொத்துக்களையுடைய வட்டி விற்பனைக்கு உள்ளவையாகவும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் பெயர் குறிப்பிடப்பட்ட நிதிச் சாதனங்களாகவும் வகைப்படுத்தப்படுவதுடன், வட்டி வருமானம் அல்லது செலவு பயனுறுதிமிக்க வட்டி

வீதத்தைப் (EIR) பயன்படுத்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. நிதிச்சொத்துக்கள் அல்லது நிதிப் பொறுப்புக்கள் மீதான தேறிய காவுகைத் தொகைக்கு பொருத்தமான விதத்தில், மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுக் கொடுப்பனவுகள் அல்லது கிடைப்பனவுகளை நிதிச் சொத்துக்களின் குறுகிய கால அல்லது எதிர்பார்க்கப்பட்ட ஆயுட் காலத்தினூடாக நுஜசு துல்லியமாகக் தள்ளுபடி செய்கின்றது. நிதிச் சாதனங்களின் எல்லா ஒப்பந்த ரீதியான நிபந்தனைகளையும் (உதாரணமாக, முன்கொடுப்பனவு விருப்பப்பபடிகள்) மதிப்பீட்டுக் கணக்கில் வைப்பதுடன், எதிர்கால பற்று நட்டங்கள் அல்லாமல், EIR இன் முக்கிய அங்கமாக உள்ளதும் சாதனங்களுக்கு நேரடியான காரணிகளாக இருக்கக்கூடியதுமான ஏதேனும் கட்டணங்களை அல்லது ஆதாயம் சார் செலவினங்களை உள்ளடக்குகின்றது. வட்டி வருமானம் கூப்பன் வருமானத்தை மற்றும் சாதனங்களின் தவனைப்பணம் அல்லது விலைக்கழிவின் கடன்கழிப்பு மீதான ஏதேனும் இலாபத்தையோ அல்லது நட்டத்தையோ உள்ளடக்குகின்றது.

நிதிச்சொத்தொன்றின் பெறுமதி அல்லது பெறுமதி இழப்பு நட்டம் காரணமாக குறைக்கப்பட்ட ஒத்த நிதிச் சொத்துக்களின் தொகுதி பதிவு செய்யப்பட்டதும், பெறுமதி இழப்பு நட்டத்தினை அளவிடும் நோக்கத்திற்காக எதிர்கால காசுப்பாய்ச்சலை தள்ளுபடி செய்வதற்கு பயன்படும் மூல வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி வட்டி வருமானம் தொடர்ந்தும் இனங்காணப்படும்.

அவ்வருடத்தின் டிசம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு நிதியத்தின் ஒவ்வொரு அங்கத்தவரினதும் தனிப்பட்ட கணக்கின் பற்றுக்கான தொகை மீதான, நிதியத்தின் பண முதலீட்டிலிருந்து வருமானத்தின் மூலம், அவ்வப்போது அமைச்சரின் மற்றும் நிதிசார் விடயங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒப்புதலோடு சபை நிர்ணயிக்கும் ஒவ்வொரு வருடமும் செலுத்தப்பட வேண்டிய, மூன்று சதவீதத்திற்கு குறையாத, சபை அவ்வாறான வீதத்தில் வட்டி செலுத்த வேண்டும் என்ற நுவுகுடீ சட்டத்தின் 22ஆவது பிரிவின் பிரகாரம் வட்டிச் செலவினம் இனங்காணப்படும்.

#### 2.3.3 பங்கிலாப வருமானம்

பங்கிலாப இலாபமானது கொடுப்பனவைப் பெறுவதற்கான தாபனத்தின் உரிமை ஏற்றுக்கொள்ளப்படும் போது இனங்காணப்படுகின்றது. நிதியத்தின் பண முதலீட்டினால் தேறக்கூடிய இலாபங்களில் இருந்து சபை பங்கிலாபங்களைப் பிரகடனப்படுத்த வேண்டும் என்ற ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் பங்கிலாபச் செலவு இனங்காணப்படும்.

#### 2.3.4 ஏனைய வருமானங்கள்

ஊழியர்களின் சேவைக் காலத்துள் கடன் கழிப்பு செய்யப்பட்ட அலுவலர் கடன்களின் நியாயமான பெறுமதி அறவீடு மீதான வட்டி வருமானத்தை தவிர்ந்த கொடுப்பனவைப் பெறுவதற்கான தாபனத்தின் உரிமை ஏற்றுக்கொள்ளப்படும் போது ஏனைய வருமானங்கள் இனங்காணப்படுகின்றன.

### 2.4 வரிவிதிப்பு

#### 2.4.1 தற்போதைய வரிகள்

கடந்த ஆண்டுகளில் செலுத்த வேண்டிய வரிக்கு ஏதேனும் சரிப்படுத்தல்கள் மற்றும் அமுலாக்கப்பட்ட அல்லது அறிக்கையிடும் திகதியில் குறிப்பிடத் தக்க வகையில் அமுலாக்கப்பட்ட வட்டி வீதங்களைப் பயன்படுத்தி வருடத்திற்கான வசிக்குட்பட்ட வருமானம் அல்லது நட்டதின் மீதான எதிர்பார்க்கப்பட்ட வரி செலுத்த வேண்டியவை அல்லது கிடைக்க வேண்டியவையே தற்போதைய வரி ஆகும்.

கடன் கழிப்பு ஆதாயம் மற்றும் வருமான வரிச் செலவினம் குறித்து ஒரு நியாயமான நோக்கினை வழங்குவதற்கு கடன்கழிப்பு ஆதாயக் கணக்கிற்கு மீளச் சேர்ப்பதற்கு ஆண்டிற்கான திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்கள் மீதான ஈட்டப்பட்ட வருமானத்திற்கு பொருந்தக்கூடிய நிறுத்தி வைப்பு வரியின் (WHT) விகிதாசாரத்தினை இனங்காண்பதற்கு சபை அதன் கணக்கியற் கொள்கைகளை மாற்றியது.

தற்போதைய செலுத்தவேண்டிய வரி வருடத்திற்கான வரிக்குட்பட்ட இலாபத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. வருமான வரிக்கான ஏற்பாடு உள்நாட்டு வருவாய் சட்டத்தின் ஏற்பாட்டின் பிரகாரம் கணக்கிடப்பட்ட மற்றும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிட்டுள்ள வாறு வருமானம் மற்றும் செலவினக் கூறுகளின் அடிப்படையில் உள்ளது.

#### 2.4.2 பிற்போடப்பட்ட விரிவிதிப்பு

ஐந்தொகைத் திகதியில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படைகளுக்கு இடையிலான எல்லா தற்காலிக வித்தியாசங்கள் மற்றும் அறிக்கையிடும் காலத்திற்கான அவற்றின் காவுகைத் தொகைகள் மீது பொறுப்பு முறைமையினைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி வழங்கப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் எதிர்காலத்தில் வரிக்குட்பட்ட இலாபத்தினை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் எல்லா தற்காலிக வித்தியாசங்களுக்கும் இனங்காணப்படும். பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் எதிர்காலத்தில் வரிக்குட்பட்ட இலாபத்தினை மற்றும் ஏதேனும் பயன்படுத்தப்படா வரி இழப்புக்களை அல்லது பயன்படுத்தப்படா

வரிக்கடன்களைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் எல்லா தற்காலிக வித்தியாசங்களுக்கும் இனங்காணப்பட்டு மீட்கப்படமாட்டாது என்பதை விட வாய்ப்பு உள்ள தற்போதைய அல்லது மதிப்பிடப்பட்ட எதிர்கால வரிக்குட்பட்ட இலாபம் மீதான உயர்ந்த தொகையில் பிற்போடப்பட்ட சொத்துக்கள் அளவிடப்படும்.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் தேறிய காவுகைத் தொகை ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் எதிர்கால வரிக்குட்பட்ட இலாபங்களின் தற்போதைய மதிப்பீட்டினைப் பிரதிபலிப்பதற்கு சரிப்படுத்தப்படும். சரிப்படுத்தல்கள் இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும்.

அமுலாக்கப்பட்ட அல்லது அறிக்கையிடும் திகதியில் குறிப்பிடத் தக்க வகையில் அமுலாக்கப்பட்ட வரி வீதங்களின் அடிப்படையில் பிற்போடப்பட்ட வரிச் சொத்து தேறப்பட வேண்டும் அல்லது பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு தீர்க்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கும் காலங்களில் வரிக்குட்பட்ட இலாபத்திற்கு (வரி இழப்பு) பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வரி வீதங்களில் பிற்போடப்பட்ட வரி கணக்கிடப்படும்.

### 2.5 வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம்

கம்பனியின் புழக்கத்திலுள்ள நாணயமான இலங்கை ரூபாவில் நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பரிவர்த்தனை திகதியில் நடைமுறையிலுள்ள தொழிற்பாட்டு நாணய விகிதத்தில் ஆரம்பத்தில் வெளிநாட்டு நாணயங்களில் பரிவர்த்தனைகள் பதிவுசெய்யப்படும். ஐந்தொகைத் திகதியில் நடைமுறையில் உள்ள பரிமாற்றத்தின் தொழிற்பாட்டு நாணய விகிதத்தில் மீள்பரிமாற்றம் செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் நாணயச் சொத்துக்களும் பொறுப்புக்களும் நிர்ணயிக்கப்படும். எல்லா வித்தியாசங்களும் இலாபம் அல்லது நட்டத்திற்கு எடுக்கப்படும். வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்றுச் செலவின் பிரகாரம் அளவிடப்படும் நாணயமற்ற உருப்படிகள் ஆரம்ப கொடுக்கல் வாங்கல்களின் திகதியகளில் உள்ளவாறு பரிமாற்ற வீதங்களைப் பயன்படுத்தி பரிமாற்றம் செய்யப்படும். வெளிநாட்டு நாணயத்தில் நியாயமான பெறுமதியில் அளவிடப்படும் நாணயமற்ற உருப்படிகள் நியாயமான பெறுமதி தீர்மானிக்கப்பட்ட திகதியில் பரிமாற்ற வீதங்களைப் பயன்படுத்தி பரிமாற்றம் செய்யப்படும்.

### 2.6 கடந்த ஆண்டு இலாபத்திற்கு சரிப்படுத்தல்

நிதிக் கூற்றுக்களின் ஒப்பிடுகையினை மேம்படுத்துவதால் தவறுகளைத் திருத்துதல் கடந்தகால அடிப்படையில் சரிப்படுத்தப்பட்டுள்ளன. அதன் படி, வைத்திருக்கும் வருவாய்களின் ஆரம்ப நிலுவை அவ்வாறான தவறுகளைத் திருத்தியதன் பின்னர் மீளக்குறிப்பிடப்படும். பின்வரும் முன்கூட்டிய தவறுகள் 2017 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டு திருத்தப்பட்டுள்ளன.

அ) கடந்த ஆண்டுக்குரிய செம்மையாக்கல்களின் போது பின்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டன.

| வழுவின் தன்மை | ரூ. (000) |
|---|---|
| நிலையான வைப்பு மீதான WHT வரி திரும்ப (2%) | 52,074 |
| டிபன்ச்சர் மீது WHT வரிக்கு ஏற்புடையது | (1,224) |
| டிவிடென்ட் வட்டி பரிமாற்றம்-மீட்டப்பட்ட நன்மை (காசோலை) | (1,565) |
| டிவிடென்ட் வட்டி பரிமாற்றம்-மீட்டல் நன்மை (ஸ்லீப்) | (8,017) |
| கருவூல பாண்ட் வட்டி அதிகரித்துள்ளது | (79,176) |
| கடன் பத்திரங்கள் வழங்குதல் | (8,017) |
| | **(45,925)** |

### 2.7 முதலீடுகள் மற்றும் ஏனைய நிதிச் சொத்துக்கள்

#### 2.7.1 வகைமீடு

சபையானது தனது நிதிச் சொத்துக்களை பின்வரும் அளவீட்டுத் தொகுதிக்குள் இருந்த வண்ணம் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் வகையீடு செய்கின்றது.

சாதாரணப் பெறுமதியின் பின்னர் சமகாலத்தில் கணக்கிடப்பட வேண்டியுள்ள நிதிச் சொத்துக்கள் (வேறு விஸ்தீரண வருமானங்கள் ஊடாகவோ அல்லது இலாப நட்டத்தின் ஊடகவோ) மற்றும் கடன் கழிப்பு செலவின் மீது கணக்கிடப்படவுள்ள நிதிச் சொத்துக்கள்.

இந்த வகையீடு நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பாய்ச்சலின் ஒப்பந்தம் மற்றும் நிபந்தனைகளை முகாமை செய்வதற்கான நிறுவன ரீதியான வியாபார மாதிரியின் மீது தங்கியுள்ளது.

சாதாரணப் பெறுமதியின் மீது கணக்கிடப்படும் சொத்துக்கள் தொடர்பில் நலன்கள் மற்றும் நட்டம் அடைதல் இலாபம் அல்லது நட்டத்தினுள் அல்லது வேறு விஸ்தீரண வருமானத்தினுள் அறிக்கையிடப்படும். விற்பனைக்காக தடுத்துவைக்கப்படாத பங்குரிமை செயலாற்றுகை கருவிகள் தொடர்பில் நோக்கும் போது, இது தங்கியிருப்பது வேறு விஸ்தீரண வருமானங்கள் ஊடாக சாதாரண பெறுமதியின் ரீகுஏஙுஊஜரூ மீது பங்குரிமை முதலீடுகளை கணக்கிடுவதற்காக ஆரம்ப இனம்காணும் சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்ய முடியாத தேர்வொன்று நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டதா என்ற விடயத்தின் அடிப்படையிலாகும்.

### 2.7.2 இனம்காணல் மற்றும் இனம்காணாப்படாமை

நிதிச் சொத்துக்களின் நிலையான கொள்வனவுகள் மற்றும் விற்பனை முறைகள் இனம்காணப்படுவது நிதியம் அந்தச் சொத்துக்களை கொள்வனவு செய்த அல்லது விற்பனை செய்த ஏற்புடைய வியாபார தினத்திற்காகும். நிதிச் சொத்துக்கள் இனம்காணப்படாமை அந்த நிதிச் சொத்துக்களின் நிதிப் பாய்ச்சலொன்றைப் பெற்றுக்கொள்ளும் உரிமை நிறைவடைந்துள்ள போது அல்லது கையளிக்கும் போது மற்றும் உரிமை பற்றிய அனைத்து ஆபத்துக்கள் மற்றும் கொடைகள் நிதியத்தினால் போதியளவு கையளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலாகும்.

### 2.7.3. கணக்கிடுதல்

ஆரம்ப இனங்காணலின் போது நிதியத்தினால் தனது நிதிச் சொத்தொன்றை இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரணப் பெறுமதியின் மீது அல்லாத தனது நிதிச் சொத்தொன்று தொடர்பில் கணக்கிடப்படுவது அந்த நிதிச் சொத்தை கையகப்படுத்திக்கொள்வதற்கு நேரடியாக பொறுப்பேற்க முடியுமான அங்கு கொடுக்கல் வாங்கல் செய்ய முடியுமான செலவினத்திற்கு மேலதிகமாக அதன் சாதாரண பெறுமதியின் மீதாகும். இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரண பெறுமதியின் மீது முன்கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துக்களின் கொடுக்கல் வாங்கல் செலவினங்கள் செலவு வைக்கப்படுவது இலாப அல்லது நட்டக் கணக்கிலாகும்.

நிதிச் சொத்துக்களின் காசுப் பாய்ச்சல், வெறுமனே முதலீடு செய்யப்பட்ட ஆரம்ப நிதியின் மற்றும் வட்டியின் கொடுப்பனவுகள் மாத்திரமா என தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில் இடைதொடர்புள்ள பெறப்பட்ட நிதிச் சொத்துக்கள் அவற்றின் சராசரியாக கணிக்கப்படும்.

### 2.7.3.1 கடன் செயலாற்றுகைக் கருவி

கடன் செயலாற்றுகைக் கருவி தொடர்பில் பிற்காலத்தில் செய்யப்படும் கணக்கிடல் தங்கியிருப்பது, சொத்துக்களை முகாமை செய்வதற்காக நிதியத்தின் வியாபார மாதிரி மற்றும் சொத்துக்கு ஏற்புடைய நிதிப் பாய்ச்சலின் அடையாளங்களின் மீதாகும். நிதியத்தினால் தனது கடன் செயலாற்றுகை கருவிகளை வகையீடு செய்யும் அளவீடுகள் மூன்று வகைப்படும்.

**கடன்கழிப்புச் செலவினம்** : ஒப்பந்தம் செய்யப்பட்ட நிதிப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்காக தடுத்துவைக்கப்படும் சொத்துக்கள் அந்த காசுப் பாய்ச்சலில் வெறுமனே ஆரம்ப முதலீட்டு தொகையில் மற்றும் அதன் வட்டியுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளை மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்யும் சந்தர்ப்பங்களில் கடன் கழிப்பு செலவுக்கு அமைய கணக்கீடு செய்யப்படும். இந்த நிதிச் சொத்துக்கள் மூலம் உழைக்கப்படும் வட்டி வருமானம் செயலுக்கமுள்ள வட்டி வீத முறையைப் பயன்படுத்தி நிதி வருமானங்களில் உள்ளடக்கப்படும். சொத்துக்கள் இனம்காணலின் மீது எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் ஏற்படின் அது இலாபம் அல்லது நட்டத்திற்குள் நேரடியாக இனம் காணப்பட்டு அன்னியச் செலாவணி காரணமாக எழும் இலாபம் அல்லது நட்டத்துடன் வேறு இலாபம் கூ ரீநட்டம்ரூ இற்குள் உள்ளடக்கப்படும். சொத்துக்கள் பலவீனமடையயும் காரணத்தினால் நிகழும் நட்டம், இலாபம் அல்லது நட்டக் கூற்றில் தனியான நிரல் விடயமொன்றாக சமர்ப்பிக்கப்படும்.

**வேறு விஸ்தீரண வருமானத்தின் ஊடாக சாதாரணப் பெறுமதி** : ஒப்பந்தம் செய்யப்பட்ட நிதிப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்காக மற்றும் நிதிச் சொத்துக்களை விற்பனை செய்வதற்காக தடுத்துவைக்கப்படும் சொத்துக்கள் அந்த காசுப் பாய்ச்சலில் வெறுமனே ஆரம்ப முதலீட்டு தொகையில் மற்றும் அதன் வட்டியுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளை மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்யும் சந்தர்ப்பங்களில் வேறு விஸ்தீரண வருமானத்தின் ஊடாக சாதாரண பெறுமதிக்கு அமைய கணக்கீடு செய்யப்படும். இலாபம் அல்லது நட்டம் பலவீனமடைவதை இனம் காணல், வட்டி வருமானம் மற்றும் இலாபம் அல்லது நட்டத்திற்குள் இனம் காணப்படும் அன்னியச் செலாவணி இலாபம் அல்லது நட்டம் தவிர முன்கொண்டு செல்லப்படும் பணத்தில் ஏற்படும் அசைவுகள் வேறு விஸ்தீரண வருமானங்கள் ஊடாக கணக்கிடப்படும். நிதிச் சொத்தொன்று இனம்காணப்படாத போது வேறு விஸ்தீரண வருமானத்திற்குள் ஏற்கனவே இனம்காணப்பட்ட திரண்ட இலாபம் அல்லது நட்டத்தை நோக்கி மீள்வகையீடு செய்யப்பட்டு வேறு இலாபம் ∴ நட்டத்தில் காட்டப்படும். இந்த நிதிச் சொத்துக்கள் மூலம் உழைக்கப்படும் வட்டி வருமானம் பயனுள்ள வட்டி வீத முறையைப் பயன்படுத்தி நிதி வருமானங்களில் உள்ளடக்கப்படும். அன்னியச் செலாவணி காரணமாக எழும் இலாபம் அல்லது நட்டத்துடன் வேறு இலாபம் கூ ரீநட்டம்ரூ இற்குள் உள்ளடக்கப்படும். சொத்துக்கள் பலவீனமடையயும் காரணத்தினால் நிகழும் நட்டம், இலாபம் அல்லது நட்டக் கூற்றில் தனியான நிரல் விடயமொன்றாக சமர்ப்பிக்கப்படும்.

**இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரண பெறுமதி** : கடன் கழிப்பு செலவினம் அல்லது வேறு விஸ்தீரண வருமானத்தின் ஊடாக சாதாரண பெறுமதிக்கான நியதிகளை பூரணப்படுத்தாத சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரண பெறுமதியின் கீழ் கணிப்பீடு செய்யப்படும். இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரண பெறுமதியின் கீழ் பிற்காலத்தில் கணிப்பீடு செய்யப்படும் கடன் முதலீடு ஒன்றின் இலாபம் அல்லது நட்டத்திற்குள் இனம் காணப்பட்டு அது நிகழ்ந்த காலப் பிரிவில் வேறு இலாபம் அல்லது (நட்டத்தின்) கீழ் தேறியதாக சமர்ப்பிக்கப்படும்.

### 2.7.3.2 பங்குரிமை செயலாற்றுகை கருவிகள்

நிதியம் தனது அனைத்து பங்குரிமை முதலீடுகளையும் சாதாரணப் பெறுமதிக்கு அமைய பிற்காலத்தில் கணிப்பீடு செய்யும். நிதிய முகாமைத்துவத்தினால் வேறு விஸ்தீரன வருமானத்திற்குள் பங்குரிமை முதலீடுகளை சாதாரண பெறுமதியுடன் கூடிய இலாபம் அல்லது நட்டத்தை சமர்ப்பிக்க தெரிவுசெய்யப்பட்டிருக்குமிடத்து ஏற்புடைய முதலீட்டை இனம்காணாத காரணத்தினால் நிகழும் சாதாரண பெறுமதியுடன் கூடிய இலாபம் அல்லது நட்டம், இலாபம் அல்லது நட்டத்தை நோக்கி பிற்காலத்தில் மீள்வகைபீட்டுக்கு உட்படமாட்டாது. கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் நிதியத்திற்குச் சொந்தமான தனது உரிமையை உறுதிசெய்யுமிடத்து இலாபம் அல்லது நட்டத்திற்குள் அந்த முதலீகளின் மூலம் உழைக்கப்படும் பங்கிலாபம் தொடர்ச்சியாக வேறு விஸ்தீரண வருமானமாக இனம் காணப்படும். இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சாதாரண பெறுமதி மீது கணக்கிடப்பட்ட நிதிச் சொத்துக்களின் சாதாரண பெறுமதியில் நிகழும் மாற்றங்கள், ஏற்புடையவாறு இலாபம் அல்லது நட்டத்தின் கீழ் இனம்காணப்படும். வேறு விஸ்தீரண வருமானத்தின் ஊடாக கணிப்பிடப்படும் பங்குரிமைகள் முதலீட்டின் மீது மேற்கொள்ளப்படும் வலுக்குறை நட்டம் (மற்றும் வலுக்குறை நட்டங்களின் மாற்று) சாதாரண பெறுமதி விடயத்தில் நிகழும் மாற்றங்களினால் பிரித்தறியப்பட்டு அறிக்கையிடப்படுவதில்லை.

### 2.7.4 பலவீனமடைதல்

கடன் கழிப்பு செலவினம் மற்றும் வேறு விஸ்தீரண வருமானத்தின் ஊடாக சாதாரண பெறுமதியின் கீழ் முன்கொண்டு செல்லப்படும் தனது கடன் செயலாற்றுகை கருவிகள் மூலம் எதிர்பார்க்கப்படும் கடன் நிதியத்தினால் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து விலைமதிப்புச் செய்யப்படுவது முன்னேற்ற நோக்குடன் கூடிய அடிப்படையின் மீதாகும். பயன்படுத்தும் வலுக்குறை முறைமை கடன் ஆபத்திற்குள் குறிப்பிட்டளவு விருத்தி காணப்பட்டதா எனும் காரணிகளின் மீது தங்கியுள்ளது.

#### அடிப்படை நிதிச் சாதனங்கள்

நிதிச் சொத்துக்கள் வியாபரத்திற்கு விடப்பட்ட நிதிச் சொத்துக்கள், முதிர்ச்சிக்கு விடப்பட்டவை, கடன்கள் மற்றும் வருமதிகள் மற்றும் விற்பனைக்கு உள்ள நிதிச் சொத்துக்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. கம்பனி அதன் நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தலை ஆரம்ப இனங்காணலின் போது தீர்மானிக்கின்றது.

#### கடன்கள் மற்றும் வருமதிகள்

கடன்கள் மற்றும் வருமதிகள் குறுங்கால வைப்புக்கள், நிலையான வைப்பு மற்றும் வியாபாரமும் ஏனைய வருமதிகளும் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. எல்லா நிதிச் சாதனங்களும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் தொடர்பில் தவிர அவற்றின் நியாயமான பெறுமதியில் மற்றும் கொடுக்கல் வாங்கல் செலவுகளில் ஆரம்பத்தில் அளவிடப்படும்.

கடன்களும் வருமதிகளும் செயற்படு சந்தையொன்றில் விலை குறிக்கப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான மரபு சாரா நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப அளவீட்டின் பின்னர், அவ்வகை நிதிச் சொத்துக்கள் கடன்கழிப்புச் செலவில் பிற்பகுதியில் அளவிடப்படும். பெறுமதி இழப்பின் காரணமாக எழும் நட்டங்கள் விபரமான வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

#### நிதிப் பொறுப்புக்கள்

நிதிப்பொறுப்புக்களின் வரையறை மற்றும் ஒப்பந்திரீதியான உடன்படிக்கையின் உள்ளடக்கத்தின் பிரகாரம் இலாபம் அல்லது நட்டம் அல்லது ஏனைய நிதிப் பொறுப்புக்கள் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிப் பொறுப்புக்களாக நிதிப் பொறுப்புக்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

எல்லா நிதிச் சாதனங்களும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதியில் நிதிச் சொத்துக்கள் தொடர்பில் தவிர அவற்றின் நியாயமான பெறுமதியில் மற்றும் கொடுக்கல் வாங்கல் செலவுகளில் ஆரம்பத்தில் அளவிடப்படும்.

வட்டிக் கடன்கள் மற்றும் கடன்கள் மற்றும் ஏனைய நிதிப் பொறுப்புக்கள் (வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை) உள்ளடங்கலான நிதிப் பொறுப்புக்கள் முதலில் கையகப்படுத்துவதற்கு நேரடியாகக் கரணமாயுள்ள குறைந்த கொடுக்கல் வாங்கல் செலவில் நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டு, தொடர்நதும் EIR

முறைமையினைப் பயன்படுத்தி கடன்கழிப்புச் செலவில் அளவிடப்படுகின்றன. EIR இன் ஒன்றிணைந்த பகுதியான ஏதேனும் விலைக்கழிவு அல்லது தவணைப்பணம் மற்றும் செலவுகள் ஆகியவற்றைக் கணக்கில் எடுப்பதன் மூலம் கடன்கழிப்புச் செலவு கணிக்கப்படுகின்றது.

பொறுப்பின் கீழுள்ள கடப்பாடு முடிவுறச் செய்தாலோ அல்லது இரத்துச் செய்தாலோ அல்லது காலாவதியானாலோ நிதிப் பொறுப்பினை இனங்காண்பது நிறுத்தப்படும். கணிசமான அளவு மாற்றப்பட்ட நடப்பிலுள்ள பொறுப்பொன்றின் விதிகள் அல்லது அதே தரப்பிலிருந்து கணிசமான அளவு வித்தியாசமான விதிகள் ஒன்றினால ஏற்கனவே உள்ள நிதிப்பொறுப்பு மாற்றீடு செய்யப்படும்போது அவ்வகை பரிமாற்றம் அல்லது மாற்றம் ஒரு புதிய பொறுப்பின் இனங்காணல் மற்றும் மூலப் பொறுப்பின் இணங்காணல் நிறுத்தப்படல் ஆகக் கருதப்படும். மூல நிதிப் பொறுப்பின் காவுகைப் பெறுமதி மற்றும் செலுத்தப்பட்ட கவனம் ஆகியவற்றுக்கு இடையிலான வித்தியாசம் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

### 2.8 சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள்

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் உருப்படிகள் ஆரம்பத்தில் செலவில் இனங்காணப்படும். செலவானது கொள்வனவு விலை, நேரடியாக ஈர்க்கக்கூடிய செலவு மற்றும் பிரித்தெடுத்தல் மற்றும் அகற்றும் பொருட்களின் எதிர்கால தவிர்க்கமுடியாத செலவுகளின் மதிப்பிடப்பட்ட நடப்புப் பெறுமதி ஆகியவற்றை உள்ளடக்கும். தொடர்புறும் பொறுப்பு ஏற்பாடுகளுள் இனங்காணப்படும்.

மீள உபயோகத்திற்கு எடுத்தல் அல்லது ஆரம்பத்தில் மதிப்படப்பட்ட செயலாற்றுகை அளவிற்கு எதிர்பார்க்கும் எதிர்கால பொருளாதார நன்மைகளைப் பேணுதல் பொருட்டு, சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் கருவிகள் மீதான பழுதுபார்த்தல் அல்லது பராமரிப்புச் செலவுகள் நடைபெறும் போது வருமானக் கூற்றில் செலவினமாக இனங்காணப்படும்.

(முதலீட்டுச் சொத்துக்கள்) மெய் ஆதனங்களைத் தவிர ஒடுக்கிய சமப்படுத்தல் முறைமைப் பயன்படுத்தி பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடுகள் கணிக்கப்படும். இறையில் காணி பெறுமானத் தேய்விற்கு உட்படுவதில்லை. சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் கருவிகளின் ஏனைய எல்லா உருப்படிகளும் மீது மீதிப் பெறுமானத்தைக் கழித்து, ஏதும் இருப்பின், அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்தினுள் அவற்றின் காவுகைப் பெறுமானத்தை பதிவழிப்பதற்கு பெறுமானத் தேய்வு வழங்கப்படுகின்றது. சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்தரு பொருளாதார ஆயுட்காலம் பின்வருமாறு:

| | |
|---|---|
| கணினி கருவிகள் | - 20% |
| ஏனைய கருவிகள் | - 20% |
| தளபாடங்கள் | - 15% |
| மோட்டார் வாகனங்கள் | - 25% |
| பொருத்திகளும் துணைக்கருவிகளும் | - 33.33% |

கட்டடங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரு பொருளாதார ஆயுட்காலம் எஞ்சிய சமப்படுத்தற் முறைமை மீது ஆண்டுக்கு 6.67% ஆக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

சொத்துக்களின் பெறுமானத் தேய்வு மாதத்தில் அது பாவனைக்கு கிடைக்கும் போது ஆரம்பிக்கின்றதுடன் அகற்றுகை மாதத்தில் பெறுமதி குறைக்கப்படுவதில்லை.

சொத்துக்கள், பொறித் தொகுதி சார்ந்த வற்றின் அகற்றுகை அல்லது எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகள் இல்லாத போது இனங்காண்பது நிறுத்தப்படும். அவ்வாறு இனங்காணப்படாத காரணத்தினால் எழக்கூடிய ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் அந்த சொத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படாத வருடத்திற்குரிய வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படமாட்டாது.

சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் கருவிகளின் உருப்படிகள் திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் ஏதேனும் திரண்ட பெறுமதி இழப்பு நட்டங்களைக் கழித்து வரலாற்றுச் செலவில் அளவிடப்படும். சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் பெறுமானத் தேய்விற்கு பயன்படுத்தப்படும் வருடாந்த வீதங்களைக் கழித்து சொத்துக்களின் செலவினை ஒதுக்கீடு செய்யும் பொது பெறுமானத் தேய்வு விதிக்கப்படும்:

| | |
|---|---|
| கட்டடங்கள் மற்றும் அறுதியுள்ள காணிகள் | 2.5% |
| பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் | 10% |
| கருவிகள் | 10% |
| தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | 10% |

| | |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | |
| - சாலை வாகனங்கள் | 10% |
| - டிராக்டர்கள் மற்றும் டிரெய்லர்கள் | 20% |
| அபிவிருத்திப் பணிகள் | 20% |
| முதர்ச்சியுற்ற பெருந்தோட்டங்கள் - தென்னை | 2% |

பெறுமானத் தேய்வு வீதம், பயன்தரு ஆயுட்காலம் அல்லது ஒரு சொத்தின் எஞ்சிய பெறுமதி ஆகியவற்றில் முக்கியமான மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளமைக்கான அறிகுறி இருப்பின், சொத்தின் பெறுமானத் தேய்வு புதிய எதிர்பார்ப்புக்களைப் பிரதிபலிப்பதற்கு எதிர்காலத்தில் திருத்தியமைக்கப்படும்.

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் ஓர் உருப்படியானது அகற்றுகை அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றுகை மூலம் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகள் இல்லாத போது இனங்காண்பது நிறுத்தப்படும். சொத்தினை இனங்காண்பது நிறுத்தப்படுவதால் எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (தேறிய அகற்றுகை வருவாய்கள் மற்றும் சொத்தின் காவுகைத் தொகை ஆகியவற்றிற்கு இடையிலான வித்தயாசமாகக் கணிக்கப்பட்ட) சொத்து இனங்காண்பது நிறுத்தப்பட்ட ஆண்டில் இலாபம் அல்லது நட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- **உயிர் சொத்துக்கள்**

உயிர் சொத்துக்கள், முதிர்ச்சி அடைந்த உயிர் சொத்துக்கள் மற்றும் முதிர்ச்சி அடையாத உயிர் சொத்துக்கள் என இரு வகைப்படும். முதிர்ச்சி அடைந்த உயிர் சொத்துக்களாக அறுவடையைப் பெற்றுக்கொள்ள முடியுமான விசேட தரத்திலுள்ள அல்லது அடிக்கடி அறுவடையயைப் பெற்றுக்கொள்ள முடியுமான சொத்துக்களாகும். முதிர்ச்சி அடையாத உயிர் சொத்துக்களாக தற்காலம் அளவில் அறுவடையைப் பெற்றுக்கொள்ள முடியாத விசேட தரத்திற்கு உட்படாத சொத்துக்களாகும். தெங்குப் பயிர்ச் செய்கை மற்றும் நாற்று மேடைகள் உயிர் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. உடமை உயிர் சொத்துக்கள் விற்பனை செய்வதற்கோ அல்லது அறுவடையைப் பெற்றுக்கொள்வதற்கோ எண்ணமில்லாத போதும் விவசாய உற்பத்திகளாக அறுவடையைப் பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்தாத உயிர் சொத்துக்கள் உள்ளடக்கப்படும். கடந்தகால நிகழ்வொன்றின் பெறுபேறாக ஏற்புடைய சொத்துக்களுடன் பின்னிப் பிணைந்து காணப்படும் எதிர்கால பொருளாதார நலன்கள் தன்னை நோக்கி வரும் என மற்றும் அந்தச் சொத்துக்களின் சாதாரணப் பெறுமதி அல்லது செலவு நம்பகமான முறையில் அளவிட முடியுமென நிறுவனம் அனுமானிக்கும் போது மற்றும் நிறுவனத்தினால் அந்த ஏற்புடைய சொத்துக்களை கட்டுப்படுத்துகின்ற போது மாத்திரம் அந்த நிறுவனம் தனது உயிர் சொத்துக்களை இனம் காணுகின்றது. உயிர் சொத்துக்கள் தொடர்பில் நிகழும் தேய்வு முழுமையாக இலாபம் அல்லது நட்டம் பற்றிய கூற்றுக்களில் அறவீடாக காட்டப்பட்டு ஏற்புடைய நட்டத்தை உறுதியாக அறிந்துகொண்ட பின்னர் அந்த நட்டம் ஏற்பட்ட ஆண்டில் அந்த சொத்துக்களுக்குரிய தேறியவைகள் முன்கொண்டு செல்லப்படும் கணக்குகளுக்கு குறைவு செய்யப்படும்.

- **உடமையுள்ள உயிர் சொத்துக்கள்**

உடமையுள்ள உயிர் சொத்துக்கள், இல 16 இலங்கை கணக்கீட்டுத் தரங்கள் - சொத்துக்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கு அமைய அவற்றின் திரண்ட தேய்மாணம் மற்றும் மற்றும் திரண்ட குறைவு நட்டங்கள் இருப்பின் அவையும் கழிக்கப்பட்ட செலவுகளின் மீது, அளவிடப்படும். கன்றுகளை நட்டுதல் மற்றும் அறுவடையபைப் பெற்றுக்கொள்ளும் (மரக் கன்றுகள் நடப்பட்ட பிரதேசம் முதிர்ச்சியடைந்து வளர்ந்த பின்னர்) காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட காணி சீறாக்கம், மறுசீரமைப்பு, புதிதாக கன்று நடல், மீண்டும் கன்று நடல், பயிர்களை பல்வகைப்படுத்தல், துணைப் பயிர்களை நடல் மற்றும் உரம் இடல் போன்றவற்றுக்கான செலவுகள் முதிர்ச்சியடையாத பயிர்செய்கைகள் என வகைப்படுத்தப்படும். இந்த முதிர்ச்சி அடையாத பயிர்ச் செய்கைகளுக்கான நிதியிடலுக்காக பயன்படுத்தப்படும் நீண்ட கால கடன் தொகைகளுக்குரிய வட்டி உட்பட ஏனைய ஏற்புடை அவசிய செலவுகளுக்குரிய நேரடிச் செலவுகளுக்கு அமைய எடுத்துக்காட்டப்படும். வருடத்தினுள் பயன்தரக்கூடிய உடமை உயிர்ச் சொத்துக்கள் (தெங்கு) மீது ஏற்படுத்தப்படும் செலவுகள் முதிர்ச்சியடைந்த சொத்துக்களுக்கு மாற்றப்படும்.

## 2.9 முதலீட்டுச் சொத்து

கொடுக்கல் வாங்கல் செலவுகள் உட்பட முதலீட்டுச் சொத்தக்கள் ஆரம்பத்தில் செலவில் அளவிடப்பட்டன. ஆரம்ப இனங்காணலின் பிற்பாடு, அறிக்கையிடும் தினத்தில் சந்தை நிலைமைகளைப் பிரதிபலிக்கும் நியாயமான பெறுமதியில் முதலீட்டுச் சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. முதலீட்டுச் சொத்துக்கள் மீதான நியாயமான விலையில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் காரணமாக எழக்கூடிய இலாபங்கள் மற்றும் நட்டங்கள் அவை ஏற்பட்ட காலப்பிரிவில் வருமானக் கூற்றில் உள்ளடங்குகின்றன.

சபையின் முதலீட்டுச் சொத்து விபரமான வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ள காவுகைப் பெறுமதியில் உள்ள மாற்றங்களுடன் திறந்த சந்தைப் பெறுமதிக்கு ஒவ்வொரு மூன்று வருடத்திலும் மீள் மதிப்பீடு செய்யப்படும்.

கிடைக்க வேண்டிய வாடகை குத்தகைக்கு விடப்பட்ட காலப்பகுதிக்குள் நேர் கோட்டு முறைமையின் அடிப்படையில் அமைக்கப்படும். வாடகைக் குடியிருப்பாளனுக்கு ஊக்குவிப்பொன்று (வாடகை அறவிடப்படாத காலப்பகுதி போன்ற) வழங்கப்படுகையில், முதலீட்டுச் சொத்தின் காவுகைப் பெறுமதி இவ்வடிப்படையில் வாடகை வருமானமாக இனங்காணப்பட்டதன் விளைவாக பிரத்தியேகமான சொத்தொன்றாக பதியப்பட்ட ஏதேனும் தொகையை நீக்கும்.

சபைக்குச் சொந்தமான கொழும்பு 02, நவம் மாவத்தையில் அமைந்துள்ள 2 ஏக்கர் 1 ரூட் 28 பேர்சஸ் விஸ்தீரணமுள்ள காணியொன்று காணப்படுகின்றது. அரசாங்க விலைமதிப்பீட்டாளரினால் 2017 நவம்பர் 15 ஆம் திகதி விலைமதிப்பு செய்யப்பட்டுள்ளது. அரசாங்க விலைமதிப்பாளரின் அறிக்கைகக்கு அமைய இந்தக் காணியின் சாதாரணப் பெறுமதி ரூ. 3,812,500,000/- ஆக அதிகரித்துள்ளது.

### 2.10 அருவச் சொத்துக்கள்

### 2.10.1 வெளிவாரியாகப் பெறப்பட்ட அருவச் சொத்துக்கள்

பிரத்தியேகமாகப் பெறப்பட்ட அருவச் சொத்துக்கள் ஆரம்ப இனங்காணலின் போது செலவில் அளவிடப்பட்டன. அருவச் சொத்துக்கள் மீதான பின்வரும் ஆரம்ப இனங்காணல்கள், திரண்ட கடன் தீர்ப்பனவு மற்றும் திரண்ட பெறுமதி இழப்பு நட்டங்களைக் கழித்து செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அருவச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வரையறுக்கபட்ட அல்லது வரையறுக்கப்படாத விதத்தில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

அருவச் சொத்துக்கு பெறுமதி இழப்பு ஏற்படக் கூடும் என்ற குறிகாட்டி உள்ள போதெல்லாம், வரையறைக்குள்ளான ஆயுட்காலத்தை கொண்ட அருவச் சொத்துக்கள் அவற்றின் பயன்தரு பொருளாதார ஆயுட்கலத்தினுள் கடன் தீர்ப்பனவு செய்யப்படுவதுடன், பெறுமதி இழப்புக்காக மதிப்பீடு செய்யப்படும். வரையறைக்குள்ளான பயன்தரு ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்திற்கான கடன் தீர்ப்பனவு காலம் மற்றும் கடன் தீர்ப்பனவு முறைமை குறைந்தபட்சம் ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் மீளாய்வு செய்யப்படும். எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்தில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது சொத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகளின் கொள்வனவின் எதிர்பார்க்கப்பட்ட முறைமை கடன்தீர்ப்பனவு காலம் அல்லது முறையை மாற்றுவதன் மூலம் கணிப்பீடு செய்யப்படுவதுடன், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்களாகக் கருதப்படும். வரையறைக்குள்ளான ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கள் மீதான கடன் தீர்ப்பனவு செலவினமானது அருவச் சொத்துக்களின் தொழிற்பாட்டுடனான செலவின வகை இணக்கப்பாட்டில் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

அருவச் சொத்து ஒன்றின் இனங்காணலை நிறுத்துவதனால் ஏற்படும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் தேறிய அகற்றுகை வருவாய்களுக்கும் சொத்தின் காவுகைத் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாக அளவிடப்படுகின்றன. மேலும் சொத்தினை இனங்காணுவதை நிறுத்தும் போது, அது வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

### 2.10.2 கணினி மென்பொருள் பொதியங்கள்

கணினி மென்பொருள் பொதியங்களைப் பெறுதல்/தரமுயர்த்துதலால் ஏற்படும் தொகை அருவச் சொத்தக்களாக இனங்காணப்படுவதுடன், 3 வருடங்களுக்கு மேலாகக் கடன் தீர்ப்பனவு செய்யப்படும்.

### 2.11 குத்தகைச் சொத்துக்கள்

மதிப்பீட்டில் குறிக்கப்பட்ட மற்றும் சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் கீழ் முன்னர் வகைப்படுத்தப்பட்ட நிலப் பயன்பாட்டு உரிமைகளைக் கொண்ட குத்தகைச் சொத்து ‘குத்தகைச் சொத்தாக’ மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஹம்பாந்தோட்டையில் உள்ள காணிக்கு செலுத்தப்பட்ட குத்தகைத் தொகை மூலதனமாக்கப்பட்டு 30 வருட குத்தகைக் காலத்திற்கு கடன்கழிப்புச் செய்யப்பட்டுள்ளது.

### 2.11.1 தொழிற்படு குத்தகை

உடைமையுரிமைக்கு உட்பட்ட கணிசமான அளவு இடர்கள் மற்றும் வெகுமதிகள் (தொழிற்படு குத்தகை) சபைக்கு மாற்றஞ் செய்யப்படாத போது, குத்தகையின் கீழ் செலுத்த வேண்டிய மொத்த வாடகை குத்தகைத் தவணைக்குள் நேர் கோட்டு முறைமை அடிப்படையில் விபரமான வருமானக் கூற்றுக்குச் சாட்டப்படும்.

### 2.12 பொருட்பதிவேடுகள்

வழக்கற்று போன மற்றும் மெதுவாக அசையும் உருப்படிகளுக்கு உரிய முற்பணங்கள் தீர்க்கப்பட்டதன் பின்னர் பொருட் பதிவேகள் குறைந்தளவிலான செலவிலும் தேறிய பணமாக மாறக்கூடிய பெறுமதியிலும் மதிப்பிடப்படும்.

வழக்கற்று போன மற்றும் மெதுவாக அசையும் உருப்படிகளுக்கு உரிய முற்பணங்கள் தீர்க்கப்பட்டதன் பின்னர் பொருட்பதிவேகள் குறைந்தளவிலான செலவிலும் தேறிய பணமாக மாறக்கூடிய பெறுமதியிலும் மதிப்பிடப்படும். பூர்த்தி செய்தல் மதிப்பீடு செய்யப்பட்ட செலவு மற்றும் விற்பனை மேற்கொள்வதற்கு தேவையான மதிப்பீடு செய்யப்பட்ட செலவு கழித்து பொருட்பதிவேடுகளை சாதாரண வியாபாரத்தில் விற்கக்கூடிய விலையே தேறிய பணமாக மாறக்கூடிய பெறுமதி ஆகும்.

பொருட்பதிவேடுகளை அதன் தற்போதைய இடத்திற்கும் நிலைக்கும் கொண்டுவருவதில் ஏற்பட்ட செலவு பின்வரும் செலவுச் சூத்திரங்களைப் பிரயோகித்து கணக்கிடப்படும்:-

| | | |
|---|---|---|
| மூலப் பொருட்கள் | - | முதலில் வந்தது முதலில் வெளியேறல் என்ற செலவு அடிப்படையில் கொள்வனவுச் செலவில் |
| முடிவுப் பொருட்கள் | - | நேரடிப் பொருட்கள், நேரடி உழைப்பு மற்றும் பிராந்திய உற்பத்தி மேந்தலைகளின் பொருத்தமான விகிதம் ஆகியவற்றின் செலவில் |
| முடிவுறா வேலைகள் | - | 12 மற்றும் அதற்கு மேற்பட்ட அடர்த்தியான மட்டத்தில் உட்செலுத்தப்பட்ட உபபின் கணக்கிடப்பட்ட அளவை விட பகிர்ந்தளிக்கப்பட்ட கடந்த பருவத்தில் உப்புநீர் சுத்திகரிப்பு மற்றும் உப்புப் படுக்கைகளைத் தயாரித்தல் செலவினங்கள் 25% இல் நுகர்வுகள் மற்றும் |
| உதிரிப்பாகங்கள் | - | முதலில் வந்தது முதலில் வெளியேறல் அடிப்படையில் கொள்வனவுச் செலவில் |

பூர்த்தி செய்தல் மதிப்பீடு செய்யப்பட்ட செலவு மற்றும் விற்பனை மேற்கொள்வதற்கு தேவையான மதிப்பீடு செய்யப்பட்ட செலவு கழித்து சாதாரண வியாபாரத்தில் விற்கக்கூடிய மதிப்பிடப்பட்ட விற்பனை விலையே தேறிய பணமாக மாறக்கூடிய பெறுமதி ஆகும்.

### 2.13. இளைப்பாற்று நலன் பொறுப்புக்கள்

#### 2.13.1. ஊழியர் நலன்கள்

கம்பனி நிலையான நலன்கள் மற்றும் நிலையான பொறுப்புக்கள் திட்டங்களைக் கொண்டுள்ளது. நிலையான பங்களிப்புத் திட்டம் என்பது கம்பனி இன்னொரு நிறுவனத்திற்கு நிலையான பங்களிப்புக்களைச் செலுத்துகின்ற இளைப்பாற்றுத் திட்டம் ஆகும். நிலையான நலன் திட்டங்கள் சேவைக் காலம் மற்றும் இழப்பீட்டின் அடிப்படையில் இளைப்பாறுகையில் ஓர் ஊழியர் பெற்றுக் கொள்ளும் இளைப்பாற்று நலன் தொகையினை நிர்ணயிக்கின்றது.

#### 2.13.2 நிலையான பங்களிப்புத் திட்டங்கள்

உரிய சட்ட விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்க, சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புக்களை மேற்கொள்வதற்கு ஊழியர்கள் தகுதியுடையவர்களாவர். ஊழியர்களின் மொத்த வருவாயிலிருந்து 15% மற்றும் 3% இனை முறையே ஊழியர்கள் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புக்களை சபை வழங்குகின்றது.

வழக்கிலுள்ள சட்ட விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்க, சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புக்களை மேற்கொள்வதற்கு ஊழியர்கள் தகுதியுடையவர்களாவர். ஊழியர்களின் மொத்த வருவாயிலிருந்து 12% மற்றும் 3% இனை முறையே ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புக்களை கம்பனி வழங்குகின்றது.

#### 2.13.3 நிலையான நலன் திட்டங்கள் - பணிக்கொடை

ஊழியர் நன்மைகள் - இலங்கை கணக்கீட்டு நியமங்கள் LKAS 19 இன் உறுதிப்பாட்டுடன் எல்லா ஊழியர்களினதும் சேவைக்காலத்தின் முதல் வருடத்திலிருந்தே இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. எவ்வாறெனினும், 1983 இன் பணிக்கொடைக் கொடுப்பனவு சட்ட இல 12 இன் கீழ் ஓர் ஊழியருக்கான பொறுப்பு தொடர்ச்சியான ஐந்து வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யும் போதே எழுகின்றது. பொறுப்பானது வெளிவாரியாக நிதியிடப்படுவதில்லை.

நிலையான பங்களிப்புத் திட்டத்திற்கு மாறாக நிலையான நலன்கள் திட்டமானது தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டமாகும். நிலையான இளைப்பாற்றுத் திட்டம் தொடர்பில் தாபனத்தின் தேறிய கடப்பாடு, நடப்பு மற்றும் முன்னைய காலப்பகுதிகளில் ஊழியர்கள் தமது பணிக்காக ஈட்டிய எதிர்கால நன்மை மீதான தொகையை மதிப்பீடு செய்வதன் மூலம் கணிக்கப்படுகின்றது. அந்நன்மையானது அதன் நடப்புப் பெறுமதியைத் தீர்மானிப்பதற்கு கழிவீடு செய்யப்படும். இனங்காணப்படாத கடந்த சேவைச் செலவினங்கள் கழிக்கப்படும்.

கழிவீட்டு வீதமானது அறிக்கையிடும் காலப்பகுதியில் தாபனத்தின் கடப்பாட்டு நிபந்தனைகளைப் பெரிதும் ஒத்திருக்கக்கூடிய முதிர்ச்சி நாட்களைக் கொண்ட உயர் தரக் கூட்டு முறிகள் மீதான வருவாயாகும். மேலும் அவை நன்மைகள் செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் அதே நாணயத்தில் குறிக்கப்படும். நிலையான நன்மைகள் கடப்பாடு வருடாந்தம் நெறிப்படுத்தப்பட்ட அலகுப் பற்று முறைமையைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது.

ஒரு திட்டத்தின் நன்மைகள் விருத்தி செய்யப்படும் போது, ஊழியர்களால் வழங்கப்பட்ட கடந்த சேவை காலம் தொடர்பாக அதிகரிக்கப்பட்ட நன்மையில் ஒரு பகுதி, நன்மைகள் பொறுப்பில் விடப்படும் வரையிலான சராசரி காலப்பகுதிக்குள் நேர் கோட்டு முறைமை அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும். நன்மைகள் உடனடியாக அளிக்கப்படும் அளவின் படி செலவினம் இலாபத்தில் அல்லது நட்டத்தில் உடனடியாக இனங்காணப்படும். தாபனமானது நிலையான நலன்கள் திட்டங்களினால் எழும் எல்லா காப்புறுதி இலாபங்களையும் நட்டங்களையும் ஏனைய விபரமான வருமானத்தில் இனங்காண்கின்றது.

கம்பனி நிதியளிக்கப்படாத, சேவை செய்த வருடங்கள் மற்றும் சமீபத்திய மாதாந்த சம்பள வீதம் ஆகியவற்றின் அடிப்படையிலான நலன்கள் கொண்ட அதன் வழமையான ஊழியர்களையும் உள்ளடக்கிய பங்களிக்காத நிலையான நலன் திட்டத்தைக் கொண்டுள்ளது. மதிப்பிடப்பட்ட எதிர்கால சம்பள அதிகரிப்புகள், தற்போதைய ஊழியர்களின் எதிர்கால சேவை மற்றும் 28.19 ஆம் பிரிவின் பிரகாரம் தற்போதைய ஊழியர்களின் பணியில் உள்ளபோது இறப்பு ஆகியவற்றின் மீதான எளிமையாக்கல்கள் பொறுப்பின் பெறுமதியை கணக்கிடுவதில் பயன்படுத்தப்படும். பணிக்கொடைக்கு ஏற்புடைய பொறுப்புக்கள் தொடர்பில் நிதியங்கள் வழங்கப்படவில்லை. அத்தோடு அது ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்டும் கணக்கிடப்படவில்லை.

### 2.14 உரிமையாண்மை

#### 2.14.1 அங்கத்தவர் நிதி

அங்கத்தவர்களிடமிருந்து கிடைத்த மற்றும் கிடைக்க வேண்டிய பங்களிப்பு, ஆண்டிற்குள் அவரக்ளுக்கான சேரும் பங்கிலாபம் மற்றும் வட்டியுடனான தேறிய மீளளிப்புக்கள் அங்கத்தவர் நிதியத்தில் உள்ளடங்குகின்றன.

#### 2.14.2 பங்கிலாபங்கள்

பங்கிலாபங்களாவன பெறுவதற்கான நிதியத்தின் உரிமை உறுதிப்படுத்தும் போது இனங்காணப்படுகின்றன.

#### 2.14.3 ஒதுக்குகள்

மீள்மதிப்பீட்டு ஒதுக்கு இறையில் காணி மற்றும் கட்டடங்களின் மீள்மதிப்பீட்டினை தொடர்புறுத்துகின்றதுடன் மீள்மதிப்பீட்டு திகதியில் உள்ளவாறு காணி மற்றும் கட்டடங்களின் நியாயமான பெறுமதி மாற்றங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அதன்படி, நவம் மாவத்தை காணியின் கொள்வனவுக் கிரயம் மீதான சந்தைப் பெறுமதி அதிகரிப்பால் ஒதுக்கு கட்டியெழுப்பபட்டுள்ளது.

பங்கிலாபத்தினையும் வட்டியையும் பொடுப்பனவு செய்த பின்னர் நிறுத்திவைத்த வருவாய்கள் மற்றும் மிகை இலாபம் சபையினால் பங்கிலாபம் சமப்படுத்தும் ஒதுக்கக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது. இவ் ஒதுக்கினை அமைப்பதற்கான நோக்கம் சாத்தியமான பங்கிலாபக் கொடுப்பனவுகளைப் பூர்த்தி செய்வதும் நிறுத்தி வைத்த வருவாய்களலிருந்து வெளிப்பாய்ச்சல்களைக் குறைப்பதும் ஆகும்.

சொத்துக்களை இனங்காண்பது நிறுத்தப்படல் அல்லது மதிப்பிழக்கப்படல் வரை விற்பனைக்கு கிடைக்கக்கூடிய நிதி முதலீடுகளின் நியாயமான பெறுமதியில் திரண்ட தேறிய மாற்றத்தினை விற்பனைக்கு கிடைக்கக்கூடிய ஒதுக்கு கொண்டுள்ளது.

### 2.15 ஏற்பாடுகள்

நிச்சயமற்ற கால முன்னேற்பாடு மற்றும் தொகைகள் மீதான பொறுப்புக்களுக்கான ஏற்பாடுகளை சபை இனங்கண்டுளளது. ஏற்பாடானது அறிக்கையிடும் காலப்பகுதியல் கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு தேவைப்படும் செலவினத்தின் மிகச் சிறந்த மதிப்பீட்டில் அளவிடப்படுவதுடன், பொறுப்புக்கான குறிக்கப்பட்ட இடர்கள் மற்றும் பணத்தின் காலப் பெறுமதி மீதான நடைமுறைச் சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கக் கூடிய வரிக்கு முன்பான கழிவு வீதத்தினைப் பயன்படுத்தி அவற்றின் நடப்புப் பெறுமதிக்கு கழிவீடு செய்யப்படும்.

சட்டரீதியான கோரல்களுக்கான ஏற்பாடுகள், கடந்த கால நிகழ்வுகளின் விளைவாகக் கம்பனி தற்போதைய சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாட்டினைக் கொண்டுள்ள போது இனங்காணப்படும், பொருளாதார நலன்களின் மாற்றம் கடப்பாடுகளைத் தீர்ப்பதற்கு தேவைப்படும் என்பதும் தொகை நம்பகமான முறையில் மதிப்பீடு செய்யப்படலாம் என்பதும் சாத்தியமாகின்றது.

ஏற்பாடுகளானது பொறுப்புக்கான குறிக்கப்பட்ட இடர்கள் மற்றும் பணத்தின் காலப் பெறுமதி மீதான நடைமுறை மதிப்பீட்டினைப் பிரதிபலிக்கும் வரிக்கு முன்பான கழிவு வீதத்தினைப் பயன்படுத்தி கடப்பாட்டினைத் தீர்ப்பதற்குத் தேவையான எதிர்காலத் தொகையின் தற்போதைய பெறுமதியில் அளவிடப்படும். காலஎல்லை காரணமாக ஏற்பாட்டில் அதிகரிப்பானது வட்டிச் செலவினமாக இனங்காணக்கட்டுள்ளது.

### 2.16 வியாபாரம் மற்றும் வருமதிகள்

| | கணக்காய்வு கட்டனங்களுக்கான ஏற்பாடுகள் | 2,820 | 1,810 | 2,820 | 1,810 |
| | தொலைபேசிக் கட்டணங்களுக்கான ஏற்பாடுகள் | 1,854 | 255 | 1,854 | 255 |
| | மின்சாரக் கட்டணங்களுக்கான ஏற்பாடுகள் | 61 | 46 | 61 | 46 |
| | நீர் கட்டணங்களுக்கான ஏற்பாடுகள் | 19 | 34 | 19 | 34 |
| | ஊழியர் விபத்து நட்டஈட்டுத் திட்டத்திற்கான ஏற்பர்டுகள் | 2,000 | 2,000 | 2,000 | 2,000 |
| | ஊக்குவிப்பு கொடுப்பனவுக்கான ஏற்புாடுகள் | 48 | 113 | 48 | 113 |
| | பெற்றுக்கொள்ளாத விடுமுறைக்கான கொடுப்பனவு ஏற்பாடுகள் | 13,946 | 11,492 | 13,946 | 11,492 |
| | தபால் செலவுக்கான ஏற்பாடுகள் | 430 | 302 | 430 | 302 |
| | உயர் கல்வி புலமைப் பரிசில்களுக்கான ஏற்பாடுகள் | 101,640 | 65,844 | 101,640 | 65,844 |
| | 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில்களுக்கான ஏற்பாடுகள் | 1,995 | 15 | 1,995 | 15 |
| | | 132,784 | 81,910 | 132,784 | 81,910 |





# 04

# துணைத் தகவல்கள்

# கணக்காய்வாளர் அறிக்கை 2018

මගේ අංකය / எனது இல. / My No. } எல்ஈடபிள்யு/பீ/ஈரீஎப்/எப்ஏ/2018 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 2019 ஜூன் 07

தலைவர்,
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை,

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் மற்றும் அதன் நிர்வாகத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டமுறையான தேவைப்பாடுகள் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1. அபிப்பிராயம்

2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, உரிமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் ("சபை") நிதிக் கூற்றுக்கள் மற்றும் சபையின் மற்றும் அதன் நிர்வாகத்தின் ("குழுமம்") ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை வருங்காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை எனும் பிரிவில் விளக்கியுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தை தவிர சபையின் மற்றும் குழுமத்தின் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியல் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) சபையினால் சேவைப் பெறும் நிறுவனங்களினால் 1981 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் அறவீடு செய்யப்பட்டிருந்த 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மொத்தம் ரூ.2,002,707,920 பெறுமதியான பங்களிப்புத் தொகைகள் நிதியச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் அந்தந்த அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகளில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 07 (SLFRS 7) பிரகாரம், நிறுவனத்தினால் அனைத்து நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் வகுப்புக்கான பிடிமானப் பெறுமதியுடன் ஒப்புநோக்குவதற்கு இடமளிக்கும் வகையில் அந்த வகுப்புக்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் சாதாரணப் பெறுமதியை வெளிக்காட்ட வேண்டியிருப்பினும் சபையினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව  இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.  No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34  +94 11 2 88 72 23  ag@auditorgeneral.gov.lk  www.auditorgeneral.gov.lk

(இ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 09 (SLFRS 9) பிரகாரம் கடன்கழிப்புச் செய்யப்பட்ட செலவின் மீது வைக்கப்படும் நிதிச் சொத்துக்கள் ீகுயையெஉெயை யுளளநவளவ யவ யுஅழசவளைநன ஊழளவரூ கடன்கழிப்பு செய்யப்பட்ட செலவுக்கு அறிக்கையிடப்பட வேண்டியிருப்பினும் சபையினால் ரூ.மில். 61,192 பெறுமதியான சொத்துக்கள் கடன் கழிப்புச் செய்யப்பட்ட செலவுக்கு அறிக்கையிடப்பட வேண்டியிருப்பினும் அதற்கு பதிலாக செலவுக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 08 (LKAS 8) பிரகாரம், இலங்கை கணக்கீட்டு நியமமொன்றை முதற் தடவையாக பயன்படுத்தும் போது நடப்பு காலப் பிரிவுக்கு அல்லது முன்னைய காலப் பிரிவொன்றுக்கு அல்லது எதிர்கால காலப் பிரிவுகளுக்கு தாக்கம் செலுத்த முடியுமெனின் நிறுவனமொன்றினால் கணக்கீட்டு கொள்கையின் வித்தியாசம் மாறும் ஏற்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டுள்ளதென, கணக்கீட்டுக் கொள்கையின் மாறும் தன்மை, மாறும் ஏற்பாடுகளின் விபரமொன்று மற்றும் எதிர்காலத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் மாறும் ஏற்பாடுகள் போன்ற விடயங்களை வெளிப்படுத்தல் வேண்டும். ஆயினும், 2018 ஜனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் இலங்கை கணக்கீட்டு நிதியங்கள் இலக்கம் 09 இன் கீழ் செய்யப்பட வேண்டிய வெளிப்படுத்துகை சபையினால் செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 12 (LKAS 12) பிரகாரம், வரிச் செலவு மற்றும் கணக்கீட்டு இலாபம் என்பவற்றுக்கு இடையிலுள்ள தொடர்பை தெளிவுபடுத்துவதற்கு இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. காலம் கடந்த கணக்கீட்டு காலப்பிரிவுடன் ஒப்பிடும் போது 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் 2018 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி முதல் வரி வீதங்களில் நிகழ்ந்த வித்தியாசங்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 16 (LKAS 16) இன் 34 ஆம் பிரிவின் பிரகாரம் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு சபையின் செலவு ரூ. 502,896,000 நிலையான சொத்துக்களினுள் 25 வருட காலத்திற்கும் மேலாக குறைந்து செல்லும் மீதி முறையின் கீழ் மேலும் தேய்வடைந்து வரும் சொத்துக்கள் இருந்த போதிலும் அதன் சாதாரண பெறுமதியைக் காட்டுவதற்கு சொத்துக்கள் மீள்மதிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) அமைய என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் தலைப்பின் கீழ் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சியங்கள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் பற்றிய முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வகிக்கும் தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிப்பதற்காக மற்றும் நியாயமாக முன்வைப்பதற்காக மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிகழுவதற்கு இடம்பாடுள்ள எண்ணிக்கை ரீதியாக பிழையான கூற்றுக்கள் இன்றி நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் பொருட்டு தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கின்ற போது சபையினால் தொடர்ச்சியாக பேண முடியுமான ஆற்றலை தீர்மானிக்கும் பொறுப்பு முகாமைத்துவத்துக்கு உரியதாகும். முகாமைத்துவம் சபையை கலைப்பதற்கு உத்தேசிக்குமாயின் அல்லது வேறு மாற்றீடு இல்லாத விடத்து செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் அன்றி தொடர்ந்தேர்ச்சியான இருப்புக்கு ஏற்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறைப் பற்றிய பொறுப்பு, நிர்வகிக்கும் தரப்பினரால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உட்பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் தற்கால நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு ஏற்ற வகையில் தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான உரிய புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மொத்தமாக நிதிக் கூற்றுக்களின் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் எண்ணிக்கை ரீதியான பொய்யான கூற்றுக்கள் அல்ல என்ற சாதாரண உறுதிப்பாட்டை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். சாதாரண உறுதிப்பாடு உயர் மட்டத்திலான சான்றிதழ் என்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும் போது அது எப்போதும் எண்ணிக்கை ரீதியான பிறழ் கூற்றுக்களை இனம்காணக்கூடிய உறுதிப்பாடாக அமையாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியான அல்லது கூட்டாக தாக்கம் செலுத்தும் எண்ணிக்கை ரீதியான பிறழ்கூற்றுக்கள் நிகழ முடியுமாயினும் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயனர்களினால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தாக்கத்தை செலுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில் ரீதியான முடிவு மற்றும் தொழில் ரீதியான சந்தேகத்துடன் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் நிகழ முடியுமான எண்ணிக்கை ரீதியான பிழையான கூற்றுக்களின் ஆபத்தை இனம்காணும் போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக நிகழக்கூடிய ஆபத்தை தவிர்ப்பதற்கு போதியளவு மற்றும் பொருத்தமான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். எண்ணிக்கை ரீதியான பொய்யான கூற்றுக்களினால் ஏற்படக்கூடிய தாக்கங்களை விட மோசடியினால் நிகழும் தாக்கம் பாரியது. கூட்டுச்சதி, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தட்டிக்கழித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை கைவிடுதல் மோசடி நிகழுவதற்கு காரணமாகும்.

- சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக சபையின் உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வு பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் உள்ளக நிர்வாகத்தின் பயனுறுதி தொடர்பில் அபிப்பிராயம் தெரிவிக்க இங்கு முன்வரவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் தகைமையை மதிப்பிடல்.

- நிகழ்வுகள் அல்லது நிலமைகள் காரணமாக சபையின் தொடர்ச்சியான இருப்பு பற்றிய எண்ணிக்கை ரீதியான எதிர்பாராத விளைவுகள் உள்ளனவா என்பது தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டுக்கான நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு பற்றிய அடிப்படையைப் பயன்படுத்துவதன் ஏற்புடமை தீர்மானிக்கப்பட்டது. போதியளவு எதிர்பாரா நிகழ்வு உள்ளதாக நான் முடிவு செய்யுமிடத்து நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பிலான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தை செலுத்த வேண்டுமென்பதோடு, அந்த வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாத விடத்து எனது அபிப்பிராயத்தை திருத்தியமைத்தல் வேண்டும். எவ்வாறெனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலமைகளின் மீது தொடர்ச்சியான இருப்பு முடிவடைய முடியும்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக் கூற்றுக்களில் வெளியிடல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீடு செய்யப்பட்டதோடு, அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதென மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக நிர்வாக பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வகிக்கும் தரப்பினர்களை அறிவூட்டுதல்.

## 2. வேறு சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஆ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெறப்பட்டுள்ளதோடு, எனது விசாரணை மூலம் தெரியவரும் விடயம் யாதெனில், சபை உரிய முறையில் நிதி அறிக்கைகளை பேணிவந்துள்ளது என்பதாகும். அதனை இங்கு அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய சபையின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இணைந்து செல்கின்றது.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (i) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, இந்த அறிக்கையில் 1.2.1 (ஆ) (ஊ) அவதானிப்புக்கள் தவிர்ந்த கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட சிபாரிசுகள் தவிர்ந்த கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட சிபாரிசுகள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சியங்களின் மீது மற்றும் எண்ணிக்கை ரீதியான விடயங்களுக்கு வரையறுத்து பின்வரும் பிரகடனங்களை செய்யுமளவுக்கு எந்தவொரு விடயமும் எனது அவதானிப்புக்கு உட்படவில்லை.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய சபையின் ஆளுநர் சபையின் எவரேனும் உறுப்பினர் ஒருவருக்கு சபையுடன் இணைந்து ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சாதாரண வியாபார நிலமைக்கு அப்பால் தொடர்பு உள்ளதென,

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த ஏதேனும் ஏற்புடைய எழுதப்பட்ட சட்டத்திற்கு அல்லது சபையின் ஆளுநர் சபையினால் வழங்கப்படும் வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைவாக அன்றி செயற்பட்டுள்ளாரென,

| சட்டங்கள்/ கட்டளைகளுக்கான தொடர்பு | விபரம் |
|---|---|
| 1954 இன் 19 ஆம் இலக்க வியாபார நிலையங்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் அதிகாரச் சட்டம் | மேலதிக நேரத்திற்கு கொடுப்பனவு செய்யும் போது மேலதிக நேரம் ஒரு மணித்தியாலத்திற்கு சாதாரண ஒரு மணித்தியாலத்திற்குரிய சம்பளத்தைப் போன்று ஒன்றரை மணித்தியாலம் வீதம் செலுத்துதல் வேண்டுமெனினும், சபையினால் மேலதிக நேரம் ஒரு மணித்தியாலத்திற்கு ஒன்றரை மணித்தியாலம் வீதம் மற்றும் சனிக்கிழமைகூஞாயிறு நாட்களில் மேலதிக நேரம் 8 மணித்தியாலங்கள் நிறைவடைந்தவுடன் ஒரு நாள் சம்பளத்தையும் சேர்த்து கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதோடு, மீளாய்வுக்குரிய வருடத்தில் மேலதிக நேர செலவினம் ரூ.18,615 ஆக இருந்தது. மேலும், சட்டத்தின் பிரகாரம் மேலதிக நேரக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள சபையின் உத்தியோகத்தர்கள் ஒரு வாரத்திற்கு ஐந்தரை நாட்கள் சேவையாற்ற வேண்டும் என்பதோடு, வருடாந்த லீவு 21 நாட்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும் அதற்கு மாற்றமாக வருடாந்த லீவு 42 நாட்கள் வழங்குதல் மற்றும் வாரமொன்றுக்கு 5 நாட்கள் பணியாற்றுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. |

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, சபையின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காத வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த சபையின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் ஏற்புடைய காலப் பிரிவில் ஏற்புடைய சட்ட விதிகளுக்கு அமைய பெறுகை மேற்கொண்டு பயன்படுத்தவில்லையென,

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையான பெறுகை செயன்முறையொன்றை பின்பற்றாது 2016 ஆம் ஆண்டு சேவைகளைப் பெற்றுக்கொண்ட நிறுவனங்களிலிருந்தே வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. அதற்கிணங்க, 2017 மற்றும் 2018 வருடங்களில் பணிப்பாளர் சபையின் அனுமதி இன்றி வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட 16 வாகனங்கள் மற்றும் 15 க்காக முறையே ரூ.8,386,279 மற்றும் ரூ.7,683,335 செலுத்தப்பட்டிருந்தது.

## 3. வேறு கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) சபையின் முதலீட்டுத் தொகுதியை செயற்படுத்தும் போது வருமானத்தை உச்சமாகவும் ஆபத்தை ஆகக் குறைந்த அளவிலும் முதலீடு செய்யும் அமைப்பொன்றை முதலீட்டுக் கொள்கைப் பிரகடனத்தின் 4 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் அரசாங்கப் பிணையங்களில் நூற்றுக்கு 87 வீதமும் வேறு நிலையான வருமானப் பிணையங்களில் (உச்சமாக) நூற்றுக்கு 5 உம், குறுகியகால மீள்கொள்வனவுகளில் 2 வீதமும் மற்றும் பங்குச் சந்தை முதலீடுகளில் (உச்சமாக) நூற்றுக்கு 6 வீதமும் என வரையறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. ஆயினும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மொத்த முதலீட்டுத் தொகுதியின் முறையே நூற்றுக்கு 86 வீதமும் நூற்றுக்கு 79 வீதமுமாக காணப்பட்ட அரசாங்கப் பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடு 2018 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 76 வீதமாக குறைவடைந்துள்ளது. அது முதலீட்டுக் கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய இருக்க வேண்டிய எல்லையான நூற்றுக்கு 87 வீதத்தை விட நூற்றுக்கு 11 வீதம் குறைவானதாக அவதானிக்கப்பட்டது. மேலும், 2016 ஆம் ஆண்டு நூற்றுக்கு 8 வீதமாக காணப்பட்ட வேறு நிலையான வருமானப் பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடு அனுமதிக்கப்பட்ட எல்லையையும் தாண்டி முறையே 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் நூற்றுக்கு 15 மற்றும் நூற்றுக்கு 19 வரை அதிகரித்திருந்தது. 2016 ஆம் ஆண்டு ரூ.மில்.15,127 ஆக இருந்த நிலையான வைப்புக்களின் முதலீடு 2018 ஆம் ஆண்டளவில் ரூ.மில். 53,220 வரை அதிகரிப்பதற்கு இது நேரடியாக தாக்கம் செலுத்தியுள்ளது. அதற்கிணங்க, குறுகியகால முதிர்ச்சியுடன் கூடிய பிணையங்களில் செய்யப்படும் முதலீடு அதிகரிப்பதும் குறைந்த ஆபத்துள்ள அரசாங்கப் பிணையங்களில் செய்யப்படும் முதலீடு குறைந்து செல்வதும் மொத்த முதலீட்டுத் தொகுதியின் ஆபத்தை அதிகரிப்பதற்கு காரணமாகலாம் என அவதானிப்புச் செய்யப்படுகின்றது.

(ஆ) சபையினால் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைச் சந்தை ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி பிணைமுறிகள் "முதிர்ச்சி அடையும் வரையில் தடுத்து வைக்கப்படும் பிணைமுறிகள்" என வகையீடு செய்து பேணப்பட்டு வருவதனால் அவற்றை இரண்டாம் நிலை சந்தையில் விற்பனை செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமான நிதி நன்மைகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) சபை அரசாங்கப் பிணையங்களில் நிதியங்களை முதலீடு செய்யும் முதல்தர நிறுவனமென்ற போதிலும் பிணையங்களின் ஏலத்தின் போது நேரடியாக விலை மனுக்களை சமர்ப்பிக்கும் வசதி (Direct Bidding Facility) சபையினால் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 ஆம் ஆண்டின் பின்னர் திறைசேரிப் பிணைமுறிகள் இரண்டாம் நிலைச் சந்தையிலிருந்து விலகியுள்ளதோடு, 2018 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் மீண்டும் இரண்டாம் நிலைச் சந்தையில் பிரவேசிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்காத காரணத்தினால் மிகை நிதியை முதலீடு செய்வதில் சிக்கல் நிலமை உள்ளதாகவும் மேற்குறிப்பிட்டவாறு முதலீட்டுத் தொகுதியை செயற்படுத்தும் போது ஆபத்து குறைந்த அரசாங்கப் பிணையங்களில் முதலீடு செய்யும் சந்தர்ப்பம் இல்லமாலாக்கப்படும் என்பதும் கண்டறியப்பட்டது. திறைசேரி பிணைமுறிகளை இரண்டாம் நிலை சந்தையில் தொடர்புபடும் போது தேவையான தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்தல், முதலீட்டுச் செயன்முறை தொடர்பில்

உள்ளக நிர்வாகத்தை விருத்தி செய்தல் மற்றும் மனிதவளத்தை அபிவிருத்தி செய்தல் போன்ற பணிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை என அவதானிப்புச் செய்யப்பட்டது.

(உ) 1995 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ள உரிமைக் கோராத மரண நலன்கள் ரூ.12,475 மற்றும் 2001 வருடத்திலிருந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள நலன்கள் ரூ.7,803,642 மற்றும் உரிமைக் கோராத நலன்கள் ரூ.3,926,732 ஆக மொத்தம் ரூ.24,206,134 மீளாய்வுக்குரிய வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஏற்புடைய உறுப்பினர்களை அடையாளம் கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபையினால் ரூ.25,227,541 முதலீடு செய்யப்பட்ட பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகள் 2 கலைக்கப்பட்டுள்ளதோடு, அந்த முதலீடுகளின் பெறுமதியை மீள் அறவீடு செய்துகொள்வது தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட உறுதிப்பாடொன்று சபைக்கு இருக்கவில்லை.

(எ) வனிக் கம்பனியின் வாக்குறுதிப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூ.12,174,382 மற்றும் தொகுதிக்கடன் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூ.7,450,259 முறையே 2002 மற்றும் 2007 வருடங்களில் தீர்வையாவதற்கு இருந்த போதிலும் அந்தத் தொகைகளை தீர்வை செய்துகொள்வதற்கு 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் சபைக்கு இயலாமல் போயுள்ளது.

(ஏ) பல வருடங்களாக பல்வேறுபட்ட கடன் படுநர்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த ரூ.7,512,346 பெறுமதியான வருமதியாக இருந்த ஆதன வருமானத்தை அறவீடு செய்வது தொடர்பில் சபைக்கு குறித்துரைக்கப்பட்ட உறுதிப்பாடொன்று இருக்கவில்லை.

(ஐ) 1994 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிக்கு ஏற்புடையவாறு உயர்தரம் சித்தியடைந்த மாணவர்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைக் கோராத புலமைப் பரிசில் ரூ.1,316,000 தொகை 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் தீர்க்கப்படவில்லை.

*கையொப்பமிடப்பட்டது*

**டபிள்யு.பி.சி.விக்கிரமரத்ன**
கணக்காய்வாளர் அதிபதி

2018 கணக்காய்வாளரின்
அறிக்கை தொடர்பில்

# சபையின் அவதானிப்புக்கள்

### 1.2.1. கணக்கியல் குறைபாடுகள்

(அ) சபையினால் கணக்கீட்டுக் காலப்பகுதிக்கு ஏற்புடைய பங்களிப்புத் தொகைகள், உண்மையான வருமதிகள் மற்றும் உண்மையான செலவுகள் அடிப்படையில் பொறுப்புக்களை உரிய முறையில் அடையாளம் கண்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. எனவே நிதிக் கூற்றுக்களில் உள்ள அங்கத்துவ தொகைகளின் பொறுப்பின் பெறுமதி சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் பின்வரும் காரணங்களினால் கணக்காய்வு விசாரனையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமானங்கள் தொழில் வழங்குனர் கணக்குகளிலிருந்து தனிப்பட்ட அங்கத்துவ கணக்குகளுக்கு மாற்றுவதற்கு இயலாதுள்ளது.

- தொழில் வழங்குனர்கள் பணம் செலுத்தியுள்ள போதிலும் அந்தத் தொகைகளை வரவு வைப்பதற்கு தேவையான ஊழியர்களின் தகவல்களை வழங்காமை.

- சில நிறுவனங்கள் ஒரு காசோலையின் மூலம் அங்கத்துவப் பணங்களை செலுத்தியுள்ள சந்தர்ப்பங்களில் அந்தத் தொகைகளை தனித்தனியாக நிறுவனங்களுக்கு வகையீடு செய்ய வேண்டிய முறையை தெளிவு படுத்தாமை. (ஏற்புடைய தொழில் வழங்குனர் நிறுவனங்கள் தற்போது செயலற்ற நிலையில் காணப்படுதல்)

- நிறுவனங்களினால் வழங்கப்படும் அரையாண்டு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளின் தெளிவின்மை. (ஏற்புடைய தொழில் வழங்குனர் நிறுவனங்கள் தற்போது செயலற்ற நிலையில் காணப்படுதல்)

- நிறுவனங்களின் முகாமைத்துவம் மாற்றமடைதல் காரணமாக அதற்கு முன்னரான காலப்பகுதிக்குரிய தகவல்களை பெற்றுக் கொள்ள முடியாமை மற்றும் அக்காலப்பிரிவுகளில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு புதிய முகாமைத்துவம் ஒத்துழைப்பு வழங்காமை.

- விசேஷடமாக தோட்டப் பகுதியிலுள்ள நிறுவனங்களின் அங்கத்தவர்களுக்கு தேசிய அடையான அட்டை இல்லாத காரணத்தினால் மற்றும் பெயர்களின் ஒரு பகுதி மாத்திரம் தொழில் வழங்குனருக்கு வழங்குவதனால் அவர்களை அடையாளம் காண்பதில் சிக்கல் தன்மை நிலவுகின்றது.

- அதற்கிணங்க நிதிக் கூற்றுக்களில் நோக்கமான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் இறுதிக் கணக்குகளில் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதனால் மேற்படி விடயங்களின் காரணமாக எந்தவித தாக்கமும் ஏற்படவில்லை.

(ஆ) சபையினால் தற்போது சபையினது பங்குகளை முதலீடு செய்வதற்காக கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 07 (SLFRS 7) அமைய வெளிக்காட்டப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக சபையினால் தற்போது பேணிவரப்படும் திறைசேரி பிணைமுறிகள் மற்றும் கடன் பத்திரங்கள் முதிர்ச்சியடையும் வரையில் தடுத்து வைக்கப்பட்ட நிதி முதலீடுகள் (Held to Maturity) என பேணி வருவதன் காரணமாக அவற்றுக்குரிய சாதாரணப் பெறுமதி வெளிக்காட்டப்படவில்லை. தேவைக்கேற்ப எதிர்காலத்தில் அவற்றை வெளிக்காட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) சபையினால் கணக்கீட்டு நியமங்கள் 09 (SLFRS 9) அடிப்படையில் செய்யப்பட்டு வரும் சபையின் கடன் கழிப்பனவு செலவின் மீதான நிதிச் சொத்துக்கள் (Financial Assets at amortized cost) நிதி கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டுள்ளது. அவ்வாறு அடையாளம் காணும் போது நிதிச் சொத்துக்களை (Financial Assets) உரிய முறையில தடங்களுக்கு (Impairment) உட்படுத்தி அதன் தாக்கத்தை நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது.

சபையின் நிதிச் சொத்துக்கள் (Financial Assets) தடுக்கும் போது (impairment) அவற்றின் திரண்ட வட்டி (accrued interest) கணக்கிடப்பட்டு கூட்டப்பட்டுள்ளது. அதன் மூலம் சபையின் கடன் கழிப்பு செலவின் மீது வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் (Financial Assets amortized cost) கணக்கீட்டு நியமங்கள் 09 (SLFRS 9) பிரகாரம் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) எதிர் காலத்தில் வெளிக்காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) எதிர் காலத்தில் வெளிக்காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஊ) கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள செலவு ரூபா 502,896,000 நிலையான சொத்துக்களில் திரண்ட தேய்வு கழிக்கப்பட்ட பின்னர் நிகரப் பெறுமதி ரூபா 218,161,000 அளவாகும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 16 இன் 30 ஆவது பிரிவின் பிரகாரம் சபையின் ஆதணங்கள் மற்றும் உபகரணங்களின் செலவு மாதிரி (Cost Model) இல் கணக்கு வைக்கப்படுவதால் கணக்காய்வு விநாரணையில் குறிப்பிட்டுள்ளபடி இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 16 இல் 34 ஆவது பிரிவு ஏற்புடையதன்று.

மேலும் சபையின் நிலையான சொத்துக்களாக காட்டப்பட்டிருப்பது பொதுவான அலுவலக நடவடிக்கைகளின் போது பயன்படுத்தப்படும் ஆதணங்கள், இயந்திரங்கள் மற்றும் பொறிகள் என்பதோடு அந்த வகைகளின் அளவுகளின் விலைகள் மாற்றம் ஏற்படுவதில்லை. அத்தோடு அந்த ஆதணங்கள் விற்பனை செய்யப்படுவதும் இல்லை. எனவே இலங்கை கணக்கீட்டு நியமங்களை பயன்படுத்துவது தொடர்பில் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைப் பிரகாரம் சபையின் நிலையான சொத்துக்களை அடையாளம் காணல் மற்றும் அளவீடு செய்தலின் சிறந்த முறையான செலவு மாதிரி (Cost Model) ஆகும். அது தொடர்ந்து கடந்த 37 வருடங்களாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

## 2. 1954 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க வியாபார நிலையங்கள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டம்.

சபையில் மேலதிக நேர சேவைக்காக ஊழியர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் மாத்திரம் அனுமதியை வழங்குவதற்கும் மாதத்தின் முதலாவது மற்றும் இறுதி கனிக்கிழமை நாட்களில் மாத்திரம் மேலதிக நேர சேவையில் ஈடுபடுத்துவதற்கு விதிகளை உருவாக்கி அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்தச் சபை நிருவப்பட்ட காலம் தொட்டு மேலதிக நேரத்தை கணக்கிடும் போது மணிக்கு 1 ½ வீதம் மேலதிக நேரத்தை கணக்கிடுவதற்கும் அதற்கு மேலதிகமாக 8 மணித்தியால சேவைக்காக ஒரு நாள் சம்பளத்தை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க கடந்த 37 வருட காலம் அனுபவித்து வந்த முறைமையொன்றை மாற்றுவது கைத்தொழில் அமைதியை பாதிக்கும் செயலாக அமையலாம் என குறிப்பிட விரும்புகின்றேன்.

இலங்கையின் சகல கூட்டுத்தாபனங்கள் மற்றும் நீதிச் சட்ட நிறுவனங்களுக்கான வியாபார நிலையங்கள் மற்றும் அலுவலக சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய ஊழியர் ஒருவருக்கு வருடமொன்றுக்கு 7 அமைய லீவுகளும், வருடாந்த லீவுகள் 14 உம் என 21 நாள் லீவு வழங்கப்படுகின்றது. வியாபார நிலையங்கள் மற்றும் அலுவலக சட்டத்தின் கீழ் இலங்கையின் தனியார் துறை தவிர்ந்த சகல அரசாங்க சார்பு நியதிச் சட்ட நிறுவனங்களில் 21 மருத்துவ லீவுக்கான உரிமை காணப்படுவதோடு அதிகமான நிறுவனங்களில் வருடாந்தம் எஞ்சுகின்ற மருத்துவ லீவுகளுக்கு கொடுப்பனவு வழங்கும் முறையொன்றும் காணப்படுகின்றது என்பதை குறிப்பிட விரும்புகின்றேன். அதற்கிணங்க மருத்துவ லீவுகள் 21 இந்த சபையினால் மாத்திரம் பயன்படுத்திய ஒரு முறையல்ல என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

வியாபார நிலையங்கள் மற்றும் அலுவலக சட்டத்திற்கமைய மேலதிக நேரத்தை கணக்கிடுவதற்காக ஒரு வாரத்திற்கு 45 மணித்தியாலங்கள் பணியாற்றுவது அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நீதிச் சட்ட நிறுவனங்களில் செயல்முறை ரீதியில் நடைமுறைப்படத்தப்படுவதில்லை. ஐந்து நாள் சேவைக்காலத்திற்குள் தேனீருக்கான ஓய்வு அல்லது பகலுணவுக்காக 30 நிமிடத்திற்கும் குறைந்த காலத்தை எடுத்து எஞ்சிய காலத்தை சேவைக்காக ஈடுபடுத்துவதன் மூலம் வார நாட்களில் பணியாற்றும் ஐந்து நாட்களூடாக சனிக்கிழமை ½ நாளுக்குரிய வேலையளவு பூரணப்படுத்தப்படுகின்றது. அதற்கமைய சனிக்கிழமை நாளுக்கு முழு நாளுக்குமான மேலதிக நேரம் செலுத்தப்படுவதில்லை.

## 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையான பெறுகை செயன்முறையை பின்பற்றாது 2016 ஆம் ஆண்டில் சேவையை பெற்றுக் கொண்ட நிறுவனத்திலிருந்தே வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக் கொள்ளல்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் வெளியிடப்பட்ட PED/ASD/02/2015 வாகன சுற்றறிக்கைக்கமைய பத்து வருடங்களுக்கு மேலான பழைய வாகனங்களை நீக்க வேண்டும் என்றும் அதனை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுரை வழஙகப்பட்டிருந்தது. அதற்கமைய பத்து வருடங்களுக்கு மேலான பழைய பாவனையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ஏழு வாகனங்கள் அந்த சுற்றறிக்கையின் நடைமுறையைப் பின்பற்றி நீக்கப்பட்டது.

ஒரு பிராந்திய அலுவலகத்திற்கு ஒரு வாகனம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததோடு இவ்வாறு நீக்கப்பட்ட அனைத்து வாகனங்களும் பிராந்திய அலுவலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டு செயற்பாட்டு நடவடிக்கைகளில்

ஈடுபடுத்தப்பட்ட வாகனங்கள் என்பதோடு உத்தியோகபூர்வ கடமைகளுக்கு வாகனங்கள் இல்லாத காரணத்தினால் ஏற்புடைய பிராந்திய அலுவலகங்களின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன.

மேலும் நீக்கப்பட்ட ஏழு வாகனங்களுக்காகவும் புதிய ஏழு வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்த்த போதிலும் அதற்கு தேவையான கடிதங்கள் நிதியமைச்சினால் வழங்கப்படவில்லை.

அதன் பிரகாரம் வாகனங்கள் இல்லாத காரணத்தினால் கடமைகள் ஸ்தம்பிதம் அடைந்த பிராந்திய அலுவலகங்களை உரிய முறையில் செயற்படுத்தும் நோக்கில் சில வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டதோடு இந்த வாகனங்கள் தொடர்பில் நிலையான தீர்வொன்று கிடைக்கும் வரையில் மாத்திரம் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு சபை தீர்மானித்தது. அதற்கமைய பணிப்பாளர் சபையின் 2016.01.28 ஆம் திகதிய பத்திர இலக்கம் 652 கீழ் இந்த வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு அனுமதி பெறப்பட்டது. (பிண்ணினைப்பு — 01)

அதற்கினங்க, ரூபா 37500 மற்றும் 55000 இற்குமிடைப்பட்ட விலை மனுக்களின் கீழ் கார் வண்டிகள் மற்றும் வேன் வண்டிகள் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதற்கிணங்க குறைந்த விலைக்கு வாகனங்களை வழங்கும் வாகன ஒப்பந்ததாரர்கள் மூவரிடமிருந்து விலை மனுக்கள் கோரப்பட்டன. அதில் எமது தேவைப்பாடுகளுக்கு ஏற்றவாறான ஆகக்குறைந்த விலை மனுக்களை சமர்ப்பித்திருந்த விலைகளுக்கு வாகனங்கள் வாடகைக்கு பெறப்பட்டன. மேலும் அப்போது அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்டிருந்த செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் இந்த வாகனங்களை பெற்றுக்கொள்வதாயின் கணக்காய்வு விசாரனையில் குறிப்பிடப்பட்டுள்ள செலவைப் போன்று நான்கு மடங்கு தொகைக்கு வாகனங்களுக்கு வாடகை செலுத்த வேண்டி ஏற்பட்டிருக்கும். 2019 ஆம் ஆண்டில் சபையின் தேவைக்கேற்ப வாகனங்களை கொள்வனவு செய்யும் வரை மிகவும் குறைந்த தொகைக்கு அவ்வப்போது வாகனங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டது. தற்போது சபையின் அனைத்து வாகனத் தேவைப்பாடுகளும் பூரணப்படுத்தப்பட்டிருப்பதால் இவ்வாறு வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறை முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளது.

## 3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்.

(அ.) பணிப்பாளர் சபையினால் முறையான முதலீட்டுக் கொள்கையொன்று 2012 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டு அது பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. பின்னர் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானமொன்றிற்கு அமைய அரச வங்கிகளின் நிலையான வைப்புக்களில் செய்யப்படும் முதலீடுகளை முதலீட்டுக் கொள்கையின் 5% பகுதிக்கு அப்பால் கருதுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதற்குரிய காரணம் அரச வங்கிகளது வைப்புக்களின் அபாயம் கருத்திற்கொள்ள வேண்டிய மட்டத்தில் இல்லாமல் இருந்ததாகும். மேலும் 2014 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் மிகப் பெரிய அரசாங்க வங்கிகளில் நிலையான வைப்புக்களில் செய்யப்பட்ட முதலீடுகள் பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்படும் வரையறைகளுக்குள்ளாளேயே செய்யப்பட்டது. அதற்கிணங்க 87% ஆன ஆகக்குறைந்த வீதம் அரசாங்க பிணைப்பத்திரங்கள் மற்றும் அரசாங்க வங்கிகளின் நிலையான சொத்துக்களின் கூட்டுத் தொகையாக கருதப்படுகின்றது.

மேலும் 2012 ஆம் ஆண்டில் முதலீட்டுக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் எமது சபைக்கு (Private placement) என அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்பச் சந்தையில் அரசாங்க பிணைப்பத்திரங்கள் கொள்வனவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த முறை Private placement கீழ் 100% ஆக இருந்ததோடு தேவை ஏற்படின் அரசாங்க பிணைப்பத்திரங்களில் முதலிடக் கூடியதாக இருந்தது. அதற்குரிய காரணம் யாதெனில் எங்களிடமுள்ள எந்தவொரு நிதித் தொகையையும் எந்தவொரு நாளிலும் மத்திய வங்கியினால் அன்று நிலவும் வட்டி வீதங்களுக்கமைய (Weighted average Yield) எமது நிறுவனத்திற்கு அரசாங்க பிணைப்பத்திரங்களை விற்பனை செய்வதாகும். அதற்கமைய 87% ஆன கூடிய வீதத்தை அரசாங்க பிணைப்பத்திரங்களில் முதலீடு செய்வதற்கும் கூடிய வட்டியை பெற்றுக் கொள்வதற்கு உள்ள சந்தர்ப்பத்தை பயன்படுத்துவதற்காகவும் 5% வேறு நிலையான வட்டி வீதங்களுடன் முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. ஆயினும் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் பின்னர் இந்த Private placement முறை இல்லாதொலிக்கப்பட்டதோடு கட்டாயமாக கூறுவிலை சமர்பிக்கப்பட்டு அரசாங்க பிணைப்பத்திர ஏலத்தில் கலந்துகொண்டு அரசாங்க பிணைப்பத்திரங்களை கொள்வனவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் 87% இற்குள் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா கடன்களை வழங்குவதை மத்திய வங்கி நிறுத்தியுள்ளது.

அவ்வாறே திறைசேரி உண்டியல்களின் வட்டி வீதம் குறைவாக இருப்பதனால் அந்த ஆரம்பச் சந்தையில் சபையினால் முதலீடு செய்யப்படுவதில்லை. அவ்வாறே 87% இற்குள் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்வதற்கு எந்தவித வரையறையும் கிடையாது. ஆயினும் பணிப்பாளர் சபையினால் வழங்கப்படும் பூர்வாங்க முதலீட்டு வரையறைகளின் கீழ் வழங்கப்பட்ட பூர்வாங்க அனுமதியின் பிரகாரம் அரசாங்க வங்கிகளில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டது.

முதலீட்டுக் கொள்கை பணிப்பாளர் சபையினாலேயே அனுமதிக்கப்பட்டுள்ளது. நடப்பு தேவைகளின் மீது பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் அது திருத்தப்படுகின்றது. நிலவும் வியாபார சூழலில் சவால்களை வெற்றி கொள்வதற்காக சபையின் நன்மை கருதி அதனை மாற்ற வேண்டியது அத்தியவசியமாகும். பணிப்பாளர் சபையின் அனுமதியோடு முதலீட்டுக் கொள்கைக்கு செய்யப்படும் திருத்தங்களுக்கு அமைய செய்யப்படும் முதலீடுகள், முதலீட்டுக் கொள்கைக்கமைய செய்யப்படும் முதலீடுகளாக அடையாளம் காணப்படல் வேண்டும்.

மேலும் வருடாந்த முதலீடுகள் செயல்திட்டத்திற்கும் திருத்தப்பட்ட முதலீட்டுக் கொள்கைகளுக்கும் அமையவே செய்யப்படுகின்றன. அதற்கிணங்க 87% இன் கீழ் அரசாங்க பிணைப்பத்திரங்கள் மற்றும் அரசாங்க வங்கிகளின் நிலையான வைப்புக்கள் கருதப்படுகின்றன. அதற்கிணங்க 2018 ஆம் ஆண்டு இறுதியளவில் இந்த அரசாங்க பிணைப்பத்திரங்கள் மற்றும் அரசாங்க வங்கிகளின் நிலையான வைப்புக்களின் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டு வீதத்தின் மொத்தம் 99.45% ஆகும். அது 87% விட கூடிய பெறுமதியாகும். மொத்த முதலீட்டில் 6% ஐ பங்குச் சந்தையில் முதலீடு செய்ய முடியும் எனினும் 4% மாத்திரமே முதலீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 5% ஐ ஏனைய நிலையான வருமான பிணைப்பத்திரங்களில் முதலீடு செய்ய முடியுமெனினும் அதில் 2% மாத்திரம் முதலீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க ஏனைய நிலையான வட்டி வீதங்களைக் கொண்ட முதலீடுகளில் 3% மற்றும் பங்குச் சந்தையில் 2% முதலீடு செய்ய முடியுமாக இருந்த போதிலும் அந்த வீதங்களை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே 87% இற்கும் கூடிய பெறுமானமான 93.45% நிலையான வைப்புக்களிலும் அரசாங்க பிணையங்களிலும் முதலீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இரண்டாம் நிலை சந்தையில் கொள்வனவை ஆரம்பித்த பின்னர் அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்யும் வீதத்தை படிப்படியாக அதிகரித்து அரசாங்க வங்கிகளின் நிலையான வைப்புக்களின் வீதத்தை படிப்படியாக குறைக்க முடியும்.

மேலும் 2018 ஆம் ஆண்டு இறுதியில் காணப்பட்ட திறைசேரி பிணை முறிகளின் வீதம் 75.3 தொடக்கம் 77.5 வரை 2019.05.28 ஆம் திகதிக்கு அதிகரித்துள்ளதோடு நிலையான வைப்புக்களின் வீதம் 18.2 முதல் 16.5 வரை 2019.05.28 ஆம் திகதிக்கு குறைவடைந்துள்ளது.

(ஆ) நிதியத்திற்கு நீண்ட கால நோக்கு உள்ளது. அதற்கமைய கூடிய வட்டி வீதத்துடன் கொள்வனவு செய்யப்பட்டுள்ள பிணைமுறிகளை அவ்வாறே வைத்திருப்பதன் மூலம் பிணைமுறி முதிர்ச்சியடையும் வரையில் அந்த கூடிய வட்டி வீதம் எமது சபைக்கு கிடைக்கின்றது. கூடிய வட்டியுடன் கூடிய பிணைமுறிகளை விற்பனை செய்வதன் மூலம் மூலதன இலாபத்தை பெற்றுக் கொள்வதாயின் அந்த வட்டி வீத்ததை விட சந்தை வட்டி வீதம் குறைவாக இருத்தல் வேண்டும். அவ்வாறு வட்டி வீதங்கள் குறைவடையும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் இலாபம் பெறுவதற்காக விற்பனை செய்தல் வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் இலாபம் பெறப்பட்ட போதிலும் விற்பனையின் மூலம் கிடைக்கப்பெறும் பணங்கள் மீண்டும் குறைந்த வட்டி வீதமுள்ள பிணைமுறிகளில் உடனடியாக முதலீடு செய்ய வேண்டி எற்படுகின்றது. 87% ஆன அரசாங்க பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புக்களில் அவற்றை தடுத்து வைக்கும் தேவைக்காக வேண்டியாகும். இவ்வாறான ஒரு நிலமை தொடர்ந்தும் நிலவினால் நிதியத்தில் குறைந்த வட்டியுடன் கூடிய பிணைமுறிகள் மாத்திரமே எஞ்சும். ஏதேனும் மூலோபாய சந்தர்ப்பங்களில் மாத்திரம் அவ்வாறு விற்பனை செய்ய முடியும் எனினும் கொள்கையாக நீண்ட காலத்திற்கு அவ்வாறு செய்வது பொருத்தமற்ற செயற்பாடாகும்.

(இ) இது தொடர்பில் மத்திய வங்கியிடம் அடிக்கடி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதோடு பல சந்தர்ப்பங்களில் ஞாபகமூட்டல் செய்யப்பட்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்துவதற்கு மேலதிக செலவு செய்ய வேண்டியுள்ளது. தற்போதுள்ள முறைக்கமைய அதற்கான மேலதிக செலவொன்றை செய்ய வேண்டிய தேவை இல்லை. எவ்வாறெனினும் Direct Bidding Facility பெற்றுக் கொள்வதற்கு தேவையான சூழலை தயாரித்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதலீட்டுப் பிரிவை விரிவாக்கம் செய்வதற்கு தேவையான ஆளணியை ஆட்சேர்ப்பதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளதோடு மேலதிக அனுமதிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆயினும் இதுவரையில் தேவைக்கேற்ற படி அனுமதி வழங்கப்படவில்லை. அதற்கிணங்க மத்திய வங்கியின் அனுமதியைப் பெற்ற பின்னர் மற்றும் தேவையான ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்ட பின்னர் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் இதனை நடைமுறைப்படுத்த முடியும்.

(ஈ) சிறந்த உள்ளக நிர்வாகத்தின் மூலமும் ஆபத்தை குறைத்துக் கொள்ளும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் தேவையான மனிதவளத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவும் முதலீட்டுத் தேவைப்பாடுகளை மறுசீரமைப்பதற்கும் பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதற்கிணங்க ஏற்புடைய ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு தேவையான அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதெனினும் இதுவரையில் தேவைக்கேற்றவாறு அனுமதி கிடைக்கப்பெறவில்லை. இந்த நடவடிக்கைகளை சிறந்த கட்டுப்பாட்டுடன் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான மனித வளத்திற்கான அனுமதி கிடைப்பது கட்டாயமாகும். அவ்வாறே ஊழியர்கள் வியாபார தற்கால உலகத்திற்கு ஏற்றவாறு பயிற்றுவிக்கப்படுகின்றனர். அவ்வாறே இரண்டாம் நிலை சந்தையின் கொடுக்கல் வாங்கல்களுக்கு தேவையான தொழில்நுட்ப வசதிகளை பெற்றுக் கொள்வதற்கான பிண்ணனியும் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

மேலும் கடந்த காலங்களில் போலன்றி தற்போது மத்திய வங்கியினால் ஒவ்வொரு மாதமும் ஆரம்பச் சந்தையின் பிணைமுறிகள் விநியோகிக்கப்படுகின்றன. அதற்கமைய நேரடியாகவே ஆரம்பச் சந்தையூடாக பிணைமுறிகளில் முதலீடு செய்வதற்கான சந்தர்ப்பம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

(உ) உரிமை கோரப்படாத மரண நலன்கள் கணக்கில் 2018.12.31 ஆம் திகதி காணப்பட்ட மீதி 12,475,760.37 ஆகும். (நலக் கொடுப்பணவு விண்ணப்பதாரிகள் 987) அங்கத்தவர்களின் மரணத்தின் பின்னர் அந்த அங்கத்தவர்களின் நலன் சார்பில் ஒருவருக்கு மேற்பட்டவர்கள் உரிமை கோரும் சந்தர்ப்பங்கள் இருந்தன. அவ்வாறு உரிமை கோருபவர்கள் அனைவரும் ஒரே தடவையில் முன்வராமையினால் மற்றும் சிலருக்கு போதியளவு எழுத்து மூல தகவல்களை (சான்றிதல்களை துரிதமாக சமர்ப்பிக்காமை) சமர்ப்பிப்பதற்கு உள்ள அசௌகரியங்கள் காரணமாக அவர்களது பகுதிகள் சபையின் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டு, ஆவணங்களை சமர்ப்பித்தவர்களுக்கு மாத்திரம் உரிமைப் பங்குகள் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க 2019 ஜனவரி முதல் 2019 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை மரண நல உரித்தாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்டு ரூபா 95,711.08 தொகை ஐந்து பேருக்கு செலுத்தப்பட்டுள்ளதோடு 2019.04.30 ஆம் திகதிக்கு உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டிய பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 12,380,049.29 ஆகும். (பயனாளிகள் 982)

மீண்டும் அனுப்பப்பட்ட நலன்கள் (Returned Benefit Slips) கணக்கில் 2018.12.31 ஆம் திகதிக்கு மீதி ரூபா 7,803,641.66 ஆகும் (பயனாளிகள் 487) இந்த அங்கத்தவர்களுக்குரிய நலன் தொகைகள் வங்கிகளினூடாக கொடுப்பணவு செய்யும் முறையின் கீழ் நலன் கோரிக்கை விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அவர்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆயினும் விண்ணப்பதாரிகளின் வங்கிக் கணக்குகளில் உள்ள குறைபாடுகள் காரணமாக ஏற்புடைய வங்கிகளினால் திருப்பி அனுப்பப்பட்ட தொகைகள் இந்தக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு மேற்படி தொகை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நலன் உரித்து விண்ணப்பதாரிகளுக்கிடையில் 2019 ஜனவரி மாதம் முதல் 2019 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை நலன் உரித்தாளர்கள் 91 பேருக்கு கோரப்பட்ட ரூபா 3,634,767.60 தொகை நலக் கொடுப்பணவாக செலுத்தப்பட்டுள்ளதோடு 2019.04.30 திகதிக்கு செலுத்த வேண்டியுள்ள பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 4,168,874.6 ஆகும் (பயனாளிகள் 396)

உரிமை கோரப்படாத நலன்கள் (Returned Benefits – Cheques and Welfare) கணக்கில் 2018.12.31 ஆம் திகதிக்கு மீதி 3,926,732.39 ஆகும். (பயனாளிகள் 546)

மீண்டும் அனுப்பப்பட்ட நலத் தொகைகள் (Return Benefits – Cheques) கணக்கில் 2018.12.31 ஆம் திகதிக்கு மீதி ரூபா 2,837,883.81 ஆகும். (பயனாளிகள் 445) இந்த நலன் உரித்து விண்ணப்பதாரிகள் 445 பேர்களில் ஒரு பயனாளிக்கு ரூபா 5,391.19 (2019 ஜனவரி முதல் 2019 ஏப்ரல் 30 வரை) தொகை மீண்டும் செலுத்தப்பட்டுள்ளதோடு, செலுத்தப்படாத நலன்கள் வகையின் கீழ் 2019.04.30 ஆம் திகதிக்கு செலுத்த வேண்டியுள்ள பெறுமதி ரூபா 2,831,492.62 ஆகும். (பயனாளிகள் 444)

உரிமை கோரப்படாத நலன்கள் (Returned Benefits – Welfare) கணக்கில் 2018.12.31 ஆம் திகதி மீதி ரூபா 1,088,848.51 ஆகும் (பயனாளிகள் 101) கடன்களை செலுத்தும் போது கணக்கு விபரங்கள் இன்றி நலன் உரித்து விண்ணப்பதாரிகள் 101 பேருக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்ட காசோலைகள் மற்றும் வங்கிகளினூடாக கொடுப்பணவு செய்யும் முறையின் கீழ் அந்த நலன் உரித்து விண்ணப்பதாரிகளினால் வங்கியில் வைப்புச் செய்யாத காரணத்தினால் கோரப்படாத நலன்கள் கணக்கின் மீதி காட்டப்பட்டுள்ளது.

உரிமை கோரப்படாத நலன்கள் (Returned Benefits – Welfare) கணக்கில் 2018.12.31 ஆம் திகதிக்கு மீதி ரூபா 1,088,848.52 ஆகும் (பயனாளிகள் 101) இந்த நலவுரித்து விண்ணப்பதாரிகள் 101 பேரில் ஒரு பயனாளிக்கு ரூபா 99,975 (2019 ஜனவரி மாதம் முதல் 2019 ஏப்ரல் மாதம் வரை மீண்டும் செலுத்தப்பட்டுள்ளதோடு செலுத்ததப்படாத நலன்களாக மேலும் 2019.04.30 ஆம் திகதிக்கு உள்ள பெறுமதி ரூபா 988,873.58 (பயனாளிகள் 100)

(ஊ) இரண்டு கம்பணிகளில் செய்யப்பட்ட ரூபா 25,227,541 முதலீடுகள் மிகவும் பழைய முதலீடுகள் ஆகும். இந்த இரண்டு கம்பணிகளும் கலைக்கப்பட்டுள்ளதோடு அவற்றுக்குரிய வழக்குகள் விசாரிக்கப்பட்ட வண்ணம் உள்ளன. மேற்படி முதலீடு செய்யப்பட்ட தொகைகளை வசூலிக்க முடியாத முதலீடாகக் கருதி புத்தகங்களில் இருந்து பதிவழிப்புச் செய்வதற்கு பொது திறைசேரியின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. அந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி கோரி 2018 ஆம் ஆண்டு நிரல் அமைச்சாக செயற்பட்ட அபிவிருத்திப் பணிகள் அமைச்சினால் அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் தீர்மானம் இதுவரையில் எமக்குக் கிடைக்கப்பெறாத காரணத்தினால் தற்போதைய புதிய நிரல் அமைச்சான தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் ஊடாக அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு மீண்டும் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(எ இந்த கம்பணியை கலைத்து விடுவதற்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரனையில் உள்ளது.

2008 ஆம் ஆண்டில் களைப்பதற்காக கட்டளை பிரப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் அந்த தீர்மானத்திற்கு எதிராக மேல் நீதிமன்றங்களில் மேன்முறையீட்டு விண்ணப்பங்கள் மூன்று பல்வேறுபட்ட தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த மேன்முறையீட்டு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் இந்த வழக்கு மாவட்ட நீதிமன்றத்தில் 2018.02.14 ஆம் திகதி கலைப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கு மீண்டும் அழைக்கப்பட்டது. அதன் பின்னர் இந்த வழக்கு 2018.03.28 ஆம் திகதி மீண்டும் அழைக்கப்பட்டு விண்ணப்பதாரர்களினால் கலைப்பாளர் ஒருவரை நியமிக்கும் வரை கிடப்பில் போடப்பட்டுள்ளது. அந்த நிலமை இதுவரையில் தொடர்கின்றது.

குறிப்பிட்ட வழக்கின் தலையீட்டு தரப்பினராக சபையும் பங்கேற்றது. கலைப்பு செயன்முறை முடிவடைந்த பின்னர். சபைக்கு அறவிட வேண்டிய தொகைகள் ஏதும் தொகைகள் உள்ளனவா என்றும் அறவிட்டுக்கொள்வதற்கு முடியுமான தொகைகள் தொடர்பிலும் இறுதியான முடிவொன்றுக்கு வரமுடியும்.

(ஏ) எஸட் புரொபர்டி டிவலொப்மன்ட் நிறுவனத்திலிருந்து கிடைக்க வேண்டிய தொகை ரூபா 7,512,344 ஆகும். அந்த தொகையை சபைக்கு அறவிட்டுக்கொள்வதற்கு தற்போது ஹொரண மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் 9109/M கீழ் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டள்ளதோடு அடுத்த வழக்கு விசாரனைத் திகதி 2019.07.08 ஆகும்.

(ஐ) 2009 ஆம் ஆண்டு வரை ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் நிதி தேசிய சேமிப்பு வங்கியூடாகவே செலுத்தப்பட்டது. அதற்கிணங்க வங்கியிலிருந்து புலமைப்பரிசில் தொகைகளை பெற்றுக் கொள்வதற்கு முன்வராத புலமைப்பரிசிலுக்கு தகுதி உள்ளவர்களினால் அந்தத் தொகைகள் பெற்றுக் கொள்ளப்படாத காரணத்தினால் அந்த தொகைகள் வங்கியிலிருந்து மீண்டும் எமக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த புலமைப்பரிசாளர்களை அடையாளம் கண்டு அந்தத் தொகைகளை அவர்களுக்கு செலுத்திய பின்னர் 2019.04.30 ஆம் திகதிக்கு புலமைப்பரிசாளர்கள் 75 பேருக்கு செலுத்த வேண்டியுள்ள தொகையாக ரூபா 1,915,814.67 கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

**மகிந்த மடிஹஹேவா**
தவிசாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை